ஸ்ரீ

அரிச்சந்திரன் சரிதை

இது

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத்

தமிழ்ப் பண்டிதர்

ஆ. வீ. கன்னைய நாயுடு

இயற்றியது.

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1934

 [விலை அணா 8.

CONTENTS.

அட்டவணை.

ஸ்ரீ

அரிச்சந்திரன் சரிதை

—:(o):—

1. அத்தியாயம்.

அரிச்சந்திரன் பிறப்பு

நம்மிந்தியாவுக்கு வடக்கே கோசல மென்றொரு நாடுண்டு. அது நிலமகள் முகம்போல் சிறந்து விளங்கினது. அந்நாட்டில் நீர்வளமும் நிலவளமும் குறைவின்றி நிரம்பியிருந்தன. அன்றியும் அங்குக் காலந் தவறாமல் மழை பொழிந்து வந்தது. அதனால் அந்நாட்டில் பாயும் கங்கை கோடைக்காலத்திலும் வற்றாமல் பெருகிப் பாய்ந்தது. அந்நாட்டிலுள்ள குடிகளில் பலர் உழவுத்தொழிலைப் புரிந்து சோளம், கம்பு, நெல் முதலிய தானிய வகைகளை மலைபோல் குவிக்கலாயினர். பசுக்கள் இளம்புல்லை வயிறார மேய்ந்து மிகுதியாகப் பாலைச் சொரிந்தன. அங்குள்ள இடையர்கள் பால், தயிர், நெய் முதலியவற்றை மலிவாக விற்றுப் பெரும் பொருள் சேர்க்கலாயினர். வணிகர்கள் அளவு, விலை முதலியவற்றில் சிறிதும் மோசமின்றி உண்மையாய் நடந்து வந்தனர். முதலாளிக ளனைவரும் தொழிலாளர்களைத் தத்தம் மக்களைப்போல் கருதி அன்புடன் நடத்தி வந்தனர். தொழிலாளர்களும் முதலாளிகளைத் தமது தந்தைமார்போல் கருதி அவர்கள் ஏவிய தொழில்களை அன்புடன் செய்து அவர்களுக்குக் களிப்பை யுண்டாக்கினார்கள். அந்நாட்டிலுள்ள சிறுவர் சிறுமியர் தமது பெற்றோர்க்குக் கீழ்ப்படிந்து நடந்து

வந்தனர். பெண்கள் தத்தம் கணவரைத் தமதுயிர்போல் கருதி அவர்களிடம் அன்பு பாராட்டினர்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய கோசலநாட்டின் தலைநகரம் அயோத்தி. அந்நகரம் அப்பெரிய நாட்டிற்கு ஒரு திலகம்போல் விளங்கியது. அதில்,

"மாட மாளிகை யும்மடைப் பள்ளியும்
கூட கோபுர மும்பெருங் கோயிலும்
ஆட ரங்கும் அணியறச் சாலையும்
பாட லங்கிரி வைகிய பந்தியும்."

என்றபடி பற்பல வீடுகளும், மலைகளைப்போலுயர்ந்த உப்பரிகைகளும், வரிசை வரிசையாய்க் காணப்பட்டன; அன்றியும் நாடகசாலைகளும், தருமசத்திரங்களும், தேர், குதிரை, யானை முதலியவை தங்கியிருக்கும் கட்டடங்களும் நிரம்பியிருந்தன. வேதமோதல், கல்விகற்றல், வீணை முதலிய கருவிகளையிசைத்தல், இனிய பாடல்களைப் பாடல் முதலியவற்றால் உண்டாகும் பேரொலி அங்கு நாள்தோறும் மிகுதியாயிருந்தது. அந்நகர மாந்தரனைவரும் திரண்ட செல்வமும், மிகுந்த அருளும், உயர்ந்த கொடையும் உடையவர்களாய் விளங்கினர். அவர்கள் நாள்தோறும் தமது வீடுகளுக்கு வரும் எளியவரை யுண்பித்துத் தாமும் உண்பாராயினர். பஞ்சம், பிணி, வறுமை முதலிய துன்பங்கள் அங்குச் சிறிதும் தலைகாட்டாதொழிந்தன.

இவ்வளவு மேன்மை பொருந்திய அயோத்தியைத் திரிசங்கு என்னும் மன்னவனொருவன் ஆட்சி புரிந்துவந்தான். அவன் மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் நேசிப்பவன். அவ்வேந்தன் ஒருநாள் விசுவாமித்திர முனிவரை யணுகி, "முக்குறும் பெறிந்த முனிவரே! அடியேன் இவ்வுடலோடே

சுவர்க்கம் புக விரும்புகிறேன். தாங்கள் என் விருப்பத்தின்படி அருள் புரியவேண்டும்'' என அவரை வணங்கினன். அவர் அவ்வாறே அருள்புரிந்தனர். உடனே அக்காவலன் தனதுடலோடே சுவர்க்கம் சென்றனன். இது மிகவும் அதிசயமல்லவா ?

அந்தத் திரிசங்கு மன்னவனுக்கு ஒரு புதல்வனிருந்தான். அவன் பேர் அரிச்சந்திரன். அவனே இந்நூலுக்குக் கதாநாயகன். தன் தந்தை வானுலகடைந்த பின், அரிச்சந்திரன் அவ்வரசாட்சியை ஏற்றுக்கொண்டான். அம்மன்னவன் தன் தந்தையைப்போலவே கல்வி கேள்விகளில் மிகவும் வல்லவனாய் விளங்கினன். மேலும், அவன் தன்னை அடுத்தாரை யாதரிக்கும் கருணையும், எதிர்த்தோரை யழிக்கும் வல்லமையும் உடையவன். உண்மை, பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் யாவும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அவன் தன்னிடம் வந்திரக்கும் வேதியர், கவிவாணர், யாசகர்முதலியவர்களுக்கு இல்லையென்னுமல் ஏராளமாய்ப்பொருளைக் கொடுப்பான். அவன் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேற்றுமை கருதாமல், எல்லோரையும் ஒரே தன்மையாய்க் கருதி அரசு செலுத்தி வந்தான்.

"குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலும் மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல."

என்னும் நீதிமொழியை நன்குணர்ந்தவனாதலால், அவன் தன் குடிகளை வருத்தாமல் வரிப்பணம் வாங்கிவந்தான். இக்காரணங்களால், அந்நாட்டிலுள்ள குடிமக்களனைவரும் தமது மன்னவனிடம் அளவற்ற அன்பு பாராட்டலாயினர். இம்மட்டோ! அவ்வேந்தனுடைய நற்குண நற்செயல்கள்,

கடவுள் வழிபாடு, திரண்ட செல்வம், பரந்தபுகழ், அளவற்ற ஆண்மை முதலியவற்றைக் கண்டு அவன் பகையரசர்களும் அவனைப் பெரிதும் கொண்டாடலானார்கள்.

---

2. அத்தியாயம்

அரிச்சந்திரன் சபைக்கு வேதியர் வருதல்

நீதிநெறி தவறாத அரிச்சந்திர வேந்தன் வழக்கம்போல், ஒருநாள் தனது கொலுமண்டபம் போகப் புறப்பட்டான். ஆகா! அம்மண்டபத்தின் அழகை என்னவென்று சொல்லலாம். அதன் இடையிடையே சிங்கம், புலி, யானை முதலியவற்றின் வடிவங்களமைந்த தூண்கள் தோன்றின. அதன் தரை முற்றும் வெண்மையாகிய சலவைக் கற்கள் போடப்பட்டிருந்தன. அக்கற்களின் மேல் பலவகைச் சித்திரங்கள் எழுதியிருந்தன. அம்மண்டபம் முற்றும் இரத்தினக் கம்பளம் பரப்பப்பட்டிருந்தது. அவ்வழகிய மண்டபத்தின் ஒரு புறத்தின் நடுவில் ஒரு மேடையும், அம்மேடையின் மேல் ஒருயர்ந்த சிங்காசனமு மிருந்தன. அச்சிங்காசனத்தின் இரண்டு பக்கங்களிலும் நாற்காலிகள் ஒழுங்காயும் வட்டவடிவமாயும் அமைந்திருந்தன. அதற்கு நேராய் விசாலமான வழியொன்றிருந்தது. மந்திரிகள், படைத்தலைவர்கள், ஜனப்பிரதிநிதிகள், பட்டதாரிகள், முதலிய பலர் அங்குச்சென்று தத்தம் நிலைமைக்கேற்றபடி தத்தமக்குரிய விடங்களில் வீற்றிருந்தனர். கவிவாணர், வேதியர், விகடகவிகள் முதலிய பலர் பரிசு பெறக் கருதி அம்மன்னவன் வருகையை மிக்க ஆவலுடன் எதிர் நோக்கிய வண்ணம் ஒருபுறம் உட்கார்ந்திருந்தனர். சிறிது நேரத்தில், அரிச்சந்திர மன்னவன் உயர்ந்த ஆடையணிகளை அணிந்து கொண்டு தேரேறி அம்

மண்டப வீதியை யணுகினன். அம்மன்னவ னணிந்திருந்த மகுடம், இரத்தின மாலை, முத்து மாலை முதலியன பல நட்சத்திரங்க ளுதித்தாற் போல் ஒளி வீசி விளங்கின. அவனிடுப்பிலுள்ள உடைவாள் அவன் பாதம் வரையில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்தது. அவன் சற்றுத் தூரத்தில் வருவதைக் கண்டதும், அம்மண்டபத்தின் வாயிலில் நெருங்கி யிருந்தவர்களெல்லாம் இருபுறமும் விலகினர். உடனே அம்மன்னவன் தேர் அம்மண்டபத்தின் வாயிலை யணுகினது. அவனைக் கண்டதும் வாயில் காப்பாளர் தமது இருகாமுங் குவித்துத் தலைவணங்கி நின்றனர். பின்பு அவ்விறையவன் தன் தேரைவிட்டிறங்கி அம்மண்டபத்தினுள்ளே சென்றான். உடனே அங்கிருந்தவர்களெல்லாம் தமது இருப்பிடத்தை விட்டுத் திடீரென எழுந்து மௌனமாய் நின்றனர். சோனமாரி பெய்து விட்டாற்போல் அம்மண்டபம் முற்றும் சந்தடியின்றி அமைதியா யிருந்தது.

பின்பு அவ்வேந்தர் வேந்தன் கம்பீரமாய்ச் சென்று தனக்கென்று அமைக்கப்பட்டிருந்த சிங்காசனத்தின் மேல் பெருமையாய் வீற்றிருந்தான். உடனே அங்குள்ளவ ரனைவரும் முன்போல் உட்கார்ந்து கொண்டனர். வேலையாட்கள் சாமரம், ஆலவட்டம் முதலியவற்றை வீசத் தொடங்கினர். சிற்றரசர்கள் அம்மன்னவனை வணங்கித் தத்தம் வரிப்பணத்தைச் செலுத்தினர். பின்பு அவ்விறையவன் அறிவிலும் ஆண்மையிலும் சிறந்த தனது அமைச்சர், படைத்தலைவர் முதலானவர்களுடன் தனதரசாட்சிக்குரிய பற்பல விஷயங்களை ஆலோசித்தான். அதன் பின்னர் அவன் அங்குள்ளவர்களில் பலர்க்கு விடை கொடுத்தனுப்பினன். அவன் உயிர் போன்ற நண்பர்களில் சிலர் மாத்திரம் அவனைச் சூழ்ந்திருந்தனர்.

அத்தருணம் பல அந்தணர் அம்மன்னவன் கோயிலே யணுகினர். அவர்களில் சிலர் தலைகள் மொட்டையா யிருந்தன. சிலர் தலைமயிர் சிக்குப்பட்டுச் சடை சடையாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. சிலர் உச்சியில் சிறிய குடுமிகள் விளங்கின. சிலர் காவி வஸ்திரமும் வேறு சிலர் வெண்ணிற ஆடையும் அணிந்திருந்தனர். அவர்கள் மார்பில் முப்புரி நூலும், நெற்றியில் திருமண், திருநீறு முதலிய குறிகளும் புலப்பட்டன. அவர்களில் சிலர் முக்கோலையும், வேறு சிலர் ஒரு கோலையும் பிடித்திருந்தனர். இன்னும் சிலர் குடை, கமண்டலம் முதலியவற்றை வைத்திருந்தனர். சிலர் தவ விரதங்களை மேற்கொண்டமையால், உடலிளைத்திருந்தனர்.

அவர்களனைவரும் அரிச்சந்திரன் கோயிலே யணுகினர். பின்பு, அவர்களில் ஒருவர் வாயிலர் தலைவனை நோக்கி, "வாயிலாள! நாங்கள் அரிச்சந்திர மன்னனைக் காண வந்திருக்கிறோம். இதனை அவ்வேந்தனுக்கு அறிவி" என்றனர். அவனவ்வாறே சென்று அக்காவலனுக் கறிவிக்க, அவன் அவர்களனைவரையும் உள்ளே விடுமாறு உத்தரவளித்தான். உடனே அம்மறையவர்கள் உள்ளே சென்று அம்மன்னவனை வாழ்த்தினர். அவன் அவர்களனைவருக்கும் பீடமளித்தான். அவர்களனைவரும் அவைகளில் உட்கார்ந்தனர்.

பின்பு அவ்வேந்தன் அவர்களை நோக்கி, "நான்மறை வல்லீர்! நீங்கள் எங்கிருந்து வந்தீர்? எந்தெந்தப் புனித தேசங்களுக்குச் சென்றீர்? எந்தெந்தத் தூய நதிகளில் படிந்தீர்? ஆங்காங்கே என்னென்ன அதிசயங்களைக் கண்டீர்? அவையனைத்தையும் எனக்கு விளங்கச் சொல்லுங்கள்" என வினவினன்.

அவர்களில் ஒருவர் "மலர்மாலை யணிந்த மன்னவ! நாங்கள் பற்பல விடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள புண்ணிய நதிகளில் முழுகினோம். இறுதியில் கன்னோசி நாட்டை யணுகிக் கண்டகி நதியில் நீராடினோம். பின்பு அந் நாட்டின் தலைநகராகிய கன்னமாபுரியை யடைந்து மதிதய னென்னும் மன்னவனைக் கண்டோம். அவ்வேந்தனது தோள் வலி, நுண்ணறிவு, கொடைத்திறம் முதலியவற்றை நீ நன் கறிந்திருப்பாய். ஆதலால், அவற்றை நாங்கள் உனக்கு விரித் துரைக்க வேண்டுவதில்லை. ஆயினும், ஒன்றுமட்டும் உரைக் கின்றோம். அதனைக் கருத்தாய்க் கேள். அவ்வேந்தனுக்கு ஒரு புதல்வி யுண்டு. ஆகா! அப்பெண்மணியின் பேரழகை நாங் கள் என்னவென்று சொல்வோம். அவள் வேல் போன்ற விழியும், பால்போன்ற மொழியும், பிடி போன்ற நடையும், துடிபோன்ற இடையும், மேகம் போன்ற கூந்தலும் படைத் தவள். சுருங்கச் சொன்னால்,

"மண்ம டந்தையர் தம்முளும் வாசவ னுறையும்
விண்ம டந்தையர் தம்முளும் நிகரிலா விறல்வேல்
கண்ம டந்தைதன் கருங்குழல் அருந்ததி கற்பிற்(கு)
எண்ம டங்குகற் புடையள்இக் திரையினும் எழிலாள்."

என்றபடி, அவளுக்குச் சமமான அழகுள்ள பெண்கள் மண் ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் ஒருவருமிலர். அவள் கற் பில் அருந்ததியையும், அழகில் திருமகளையும் வென்றவள். அவள் அழகிற்கும் குணங்களுக்கும் ஏற்ற கணவன் நீயே. உனக்கேற்ற மனைவியும் அவளே.

வெண்குடை வேந்தே! அப்பெண்மணியின் வரலாற்றை ஒருவாறு சுருக்கிச் சொல்கிறோம்; அதனைக் கருத்தாய்க் கேள். மதிதய மன்னவன் நெடுநாளளவும் புத்திரப்பேறின்றி வருந்திக்கிடந்தான். பின்பு அவன் சிவபெருமானை நோக்கிக்

கடுந்தவம் புரிந்தான். அப்போது சிவபெருமான் அவனெதிரில் தோன்றி, 'வாட்படை மன்னவ! உன் அரிய தவத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி யடைந்தேன். உனக்கோர் பெண் குழந்தை பிறக்கும். அது தெய்வரகசியத்தோடு கூடியது. அந்த ரகசியத்தை அறிந்து சொல்பவனே அதற்குக் கணவனாவான். அக்குழந்தையினால் நீ பெரும்புகழ் பெறுவாய்' என மொழிந்து மறைந்தனர்.

கண்ணுதற் கடவுள் அருளியபடியே அவ்வேந்தனுக்கோர் பெண் குழந்தை பிறந்தது. அவன் அக்குழந்தைக்குச் சந்திரமதி யெனப் பேரிட்டு வளர்த்து வருகிறான். அவள் மணப்பருவம் அடைந்திருக்கின்றாள். அவளை விவாகம் செய்துகொள்ளக் கருதிப் பல அரசிளங்குமரர்கள் அம்மன்னவனை வினவினர். அவன் 'திண்தோள் வேந்தரே! என் மகளாகிய சந்திரமதி சிவபிரான் அருளினால் பிறந்தவள். அவளிடம் தெய்வரகசியம் ஒன்றுண்டு. அதனை உள்ளபடி உரைப்பவனே அவளை மணக்கத்தக்கவனாவான்' எனச் சொல்லி வருகிறான். அப்பெண்மணியை நீ மணந்து கொள்ளுதல் தகுதியென நாங்கள் கருதுகிறோம்'' என்றனர். இவற்றை யெல்லாம் கேட்டதும், அரிச்சந்திரன் சந்திரமதியின் மேல் அன்பு கொண்டான்.

பின்பு அவ்வேந்தன் அவர்களை நோக்கி, "அருள் நிரம்பிய அத்தனரே! அப்பெண்ணின் வரலாறு முற்றும் மொழிந்த நீங்களே அவளை யடைதற்குரிய உதவியும் புரிய வேண்டும்'' என அவர்களைப் பணிவாய்க் கேட்டான். அதற்கவர்கள் "வெற்றிவேல் வேந்தே! இதன் பொருட்டு நாங்கள் செய்யத்தக்கது யாது? அதனை யிப்போதே தெரிவி.

எங்களாலியன்ற உதவி செய்ய நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்," என்றனர்.

உடனே அம்மன்னவன், "தவச்செல்வர்களே! உங்களில் சிலர் மீண்டும் மதிதயமன்னரிடம் சென்று என் விருப்பத்தை அவருக்கு விளங்கவுரைத்து அவர் கருத்தை அறிந்து வாருங்கள். நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய பேருதவி இதுவேயாம்" என்றனன். அவர்கள் "அவ்வாறேயாகுக" எனக் கூறி அப்பார்த்திபனிடம் விடை பெற்றுச் சென்றனர்.

---

3. அத்தியாயம்

காளிதேவி அரிச்சந்திரனுக்கு வரமளித்தல்

முனிவர்கள் விடைபெற்றுச் சென்றபின், அரிச்சந்திரன் தன் கொலுமண்டபம் விட்டகன்று தன் அரண்மனையணுகினன். அதுமுதல் அவன் சந்திரமதியைச் சிறிதும் மறந்தவனல்லன். எவ்வாறாயினும், அப்பெண்மணியை மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பம் அவனுள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

இஃதிவ்வாறாக, அவ்வேந்தனிடம் விடைபெற்றுச் சென்ற முனிவர்களிற் சிலர் மதிதயமன்னவன் அரண்மனையணுகினர். அவ்வேந்தன் அவர்களை மிக்க விருப்புடன் வரவேற்றனன். பின்னர் அவன் அவர்களை நோக்கி, "முக்குறும்பெறிந்த முனிவர்களே! நீங்கள் சில நாட்களுக்கு முன் இங்கே வந்து சென்றீர்களன்றோ! இவ்வளவு விரைவில் மீண்டும் வரக் காரணம் யாது? அதனைத் தயவு செய்து அறிவியுங்கள்" என்றான்.

அதற்கவர்களில் ஒருவர் "செங்கோல் மன்னவ! உனக்கு வெற்றியும் ஆயுளும் உண்டாக. நாங்கள் இங்கிருந்தகன்றபின்,

அயோத்தியை யணுகி அரிச்சந்திர மன்னவனைக் கண்டோம். அவனிடம் உனது அரிய குணங்களையும் செங்கோல் திறத்தையும் சொன்னோம்; பின்பு உனது புதல்வியாகிய சந்திரமதியின் நற்குண நற்செயல்களையும் பேரழகையும் பாராட்டி வியந்தோம். அதன்மேல் அம்மன்னவன் தங்களைக் கண்டு பேச விரும்பியிருக்கிறான். அவ்விறையவனைச் சாதாரணமாய்க் கருதலாகாது. நாங்கள் பற்பல தேயங்கட்குச் சென்று ஆங்காங்குள்ள மன்னவர் பலரையுங் கண்டிருக்கிறோம். அழகு, ஆண்மை, வாய்மை, பொறுமை முதலிய நற்குணங்க ளனைத்தும் ஒன்றுபமைந்தவன் அரிச்சந்திரன் ஒருவனே. ஆதலால், நீ கடுந்தவமியற்றிப் பெற்ற கன்னிக்கு அவனே தக்க கணவனும். அவளுக்கு ஏற்றவர் அவனைத் தவிர இவ்வுலகில் வேறெவருமிலர். இதுவே எங்கள் முடிவான எண்ணம். இனி உனது கருத்தை யறிவிக்க வேண்டும். இந்நற்காரியத்தை விரைவில் முடிக்கக் கருதியே நாங்கள் மீண்டும் வந்தோம்" என மொழிந்தனர்.

அரிச்சந்திர மன்னனது நற்குண நல்லொழுக்கங்களைப் பற்றி மதிதயன் முன்பே கேள்வியுற்றிருந்தான். அதனோடு முனிவர்களும் அவனைச் சிறப்பித்துச் சொல்லவே அவ்வேந்தன் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான். பின்பு அவன் அம்முனிவர்களை நோக்கி, "முந்நூல் மார்பீர்! நான் சொல்வதைக் கேளுங்கள். நெடுநாளளவும் நான் புத்திரப்பேறின்றி வருந்திச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தேன். அப்போது அவர் தோன்றி, 'உனக்கு ஒரு புதல்வி யுதிப்பாள். அப்புதல்வி கடவுள் தன்மை வாய்ந்தவள். அவள் இரகசியத்தை யறிந்தழைப்பவ னெவனோ அவனே அவளுக்குக்

கணவனுவான்' என்றனர். அக்கடவுள் கட்டளையின்படி அரிச்சந்திரன் மொழிந்தால், அவனுக்கு என் புதல்வியை மணமியற்றித் தரச் சிறிதும் தடையில்லை. ஆதலால், அம்மன்னவனை இங்கே வரவழையுங்கள்'' என்றனர். உடனே அம்முனிவர்கள் அங்கு நின்று மகன்றனர். பின்பு மதிதய மன்னவன், "என் மகள் சந்திரமதிக்குத் திருமணம் நடத்தப் பெரியோர் தீர்மானித்திருக்கின்றனர். இன்றைய ஏழாம் நாள் சுயம்வரம் நடைபெறும். தவருமல் வரும்படி வேந்தர்களனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்'' என வரைந்து எல்லா அரசர்களுக்கும் தூதுவர் மூலமாய் மணவோலை யனுப்பினன். அவன் நகரம் முற்றும் நன்ருயலங்கரிக்கப்பட்டது.

இஃதிவ்வாருக, அம்முனிவர்கள் அரிச்சந்திரனை யணுகி அவனுக்கு அச்செய்தியை உணர்த்தினர். சிறிது நேரத்தில் மணவோலையும் வந்து சேர்ந்தது. உடனே அவன் அளவற்ற மகிழ்ச்சியுடன் கன்னேசி நாட்டிற்குப் புறப்பட்டனன். மந்திரிகள், படைத்தலைவர்கள், பட்டதாரிகள், பிரபுக்கள் முதலிய பலர் அவனைச் சூழ்ந்துகொண்டனர். தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படைகளும் நெருங்கிச் சென்றன. வாள், ஈட்டி, சூலம், வேல் முதலிய ஆயுதங்களும் பலவகைத் துகிற்கொடிகளும் வரிசை வரிசையாய்க் காணப்பட்டன. யானைகள் பிளிறு மொலியும், குதிரைகள் கனைக்கு மோசையும், தேர்கள் விரைந்தோடும் ஆர்ப்பும், படைகள் ஒன்ருேடொன்று தாக்கும் அரவமும் எல்லோர் செவிகளையும் செவிடுபடுத்தின.

அரிச்சந்திர மன்னன் இத்தகைய பெருமையுடன் பற்பல காடுகள், மலைகள், நதிகள் முதலியவற்றைக் கடந்து ஒரு சிறிய பாலைவனத்தை யடைந்தனன். அதன் நடுவில் அழகிய

கோயிலொன்று இருந்தது. அதில் காளியம்மை வீற்றிருந்தாள். அவ்வம்மையார் தலையில் கங்கையும், இளம்பிறைச் சந்திரனும் அழகாய் விளங்கின. அம்மாதாசி புலித்தோலையாடையாகப் புனைந்திருந்தனள். அவள் கைகளிலும், தோள்களிலும் நாகப் பாம்புகள் கங்கணங்களாக விளங்கின. அவள் சூலம், வாள், மழு, சக்கரம் முதலிய பல படைகளைப் பிடித்திருந்தனள். அத்தேவியின் பாதங்களில் சிலம்பு, தண்டை, சதங்கை முதலிய அணிகள் ஒளிவீசி விளங்கின. பல பூதகணங்கள் அவ்வம்மையாரைச் சூழ்ந்துகொண்டிருந்தன. அவைகளில் சில அவளுக்குக் குடை பிடித்தன; வேறு சில ஆலவட்டம் வீசின. மற்றுஞ் சில தாம்பூலம் மடித்துக் கொடுத்தன. பல பூதங்கள் அவ்வம்மையாரின் கட்டளையை எதிர் நோக்கிக் கைக்கட்டி வாய்பொத்தி நின்றன.

அத்தருணம் அரிச்சந்திரன் உள்ளே சென்று தூய மனத்துடன், "சங்கரீ! பைரவீ! சாம்பவீ! அடியேனையாண்டருளல் வேண்டும்" எனத் துதித்து நின்றான். அப்போது அவ்வம்மை அவனைக் குளிர நோக்கி, "வேந்தனே! நீ சிறிதும் வருந்தாதே. நீ எண்ணிச் செல்கிற காரியம் நிறைவேறும். இதில் சிறிதும் ஐயமில்லை" எனக் கூறினள்.

இதைக் கேட்டதும் அம்மன்னன் அளவற்ற மகிழ்ச்சியடைந்து "தாயே! என் மனதிற்கு இன்னுமொரு சந்தேகமுளது. அதனையும் போக்கியருளல் வேண்டும்" என்றான். அதற்கு அவ்விறைவி புன்னகை புரிந்து, "கழற்கால் காவல! உன் கருத்தை நானறிவேன். இப்போது நீ என் கோயிலுக் கெதிரிலுள்ள தேரைப்பற்றிக் கேட்கின்றாயன்றோ?" என்றனள். அதற்கவன் "ஆமாம் தாயே! நான் இங்கு வரும்போது அது கல்தோரயிருந்

தது! இப்போது அது சிறந்த தேராய்ப் புலப்படுகிறது. அதன் காரணம் எனக்கு விளங்கவில்லை'' என்றான். அதற்கவ்வம்மை, "அன்பனே! கேள். ஒருமுறை வருணன் இவ்வழகிய தேரை இங்கேவைத்து 'தாயே! இது உன் கோயிலின் எதிரில் கல் தேராய்க் கிடக்கட்டும். இதன் உண்மை வடிவத்தை யறிந்து சொல்பவரெவரோ அவரே இதற்குரியவராவர். அவரிடம் இதனைக் கொடுத்துவிடு. அது வரையில் இஃதிங்கேயே இருக்கட்டும்' என மொழிந்து சென்றான். அது முதல் நெடு நாளாய் அஃதிங்கேயே கிடக்கிறது! இனி நீ அதனைப் பெற்றுச் செல்லலாம்'' என மொழிந்தாள்.

பின்பு அரிச்சந்திரன் அளவற்ற மகிழ்ச்சியுடன் அத் தேவியை வணங்கி விடைபெற்றுக்கொண்டு அத்தேரிலேறித் தனது சேனைகளுடன் அப் பாலை நிலத்தைக் கடந்தான்.

---

4. அத்தியாயம்

சந்திரமதி அரிச்சந்திரனுக்கு மாலையிடல்

பின்பு அரிச்சந்திரன் பற்பல மலைகளையும் ஆறுகளையும் கடந்து கன்னோசி நாட்டிலுள்ள கன்னமாபுரியை யடைந் தான். அக்கன்னமா நகரில் பற்பல மாளிகைகள் நிரம்பி யிருந்தன. அம்மாளிகைகளின் மேல் பலநிறக் கொடிகள் நாட்டப்பட்டிருந்தன. அவை அரிச்சந்திரமன்னவனை நோக்கி "மணிமுடி மன்னனே! சந்திரமதி இங்கேதான் இருக்கிறாள்; நீ விரைவாய் வந்து அவளை மணம் புரிந்துகொள்'' என வழைப்பதுபோல் காற்றிலசைந்தன. பிறகு அரிச்சந்திரன் அந்நகரத்திலுள்ள மதிதயன் அரண்மனை யணுகினான். அவ்

வேந்தன் அரிச்சந்திரனைத் தக்கபடி உபசரித்து அவனுக்கு இருப்பிட மளித்தான்.

அரிச்சந்திரனைப்போலவே பற்பல நாட்டு வேந்தர்களும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் ஆங்காங்குள்ள சோலை களிலும், பொய்கை, நீரோடை முதலியவற்றின் கரைகளி லும் தத்தம் யானை, குதிரை, தேர் முதலியவற்றை விட் டிருந்தனர். அம்மன்னவர்களுடன் வந்த வீரர்களில் பலர் அந்நாட்டின் நாற்புறமும் சென்று, ஆங்காங்குள்ள அதிசயங் களைக்கண்டு வியந்தனர். அரிச்சந்திரனுடன் சென்ற படை வீரர்களும் தமது யானை, குதிரை முதலியவற்றைத் தக்க விடத்தில் நிறுத்தினர். சிறிது நேரத்திற்குப் பின் சூரியன் மறைந்தான், அன்றிரவு அனைவரும் உண்டு தத்தம்மிடங் களில் போய்க் கண்ணுறங்கினர்.

அரிச்சந்திரன் திருமணத்தைக் கண்டு களிக்க விரும்பின வனைப்போல் மறுநாட்காலை சூரியனுதித்தான். உயர்குடிப் பெண்கள் தமது நாயகர் வரவைக்கண்டு முகமலர்தல்போல் தடாகங்களில் தாமரை மலர்ந்தன. அரிச்சந்திரன் புகழைக் கொண்டாடுவதுபோல் காக்கை, சேவல் முதலிய பறவைகள் ஒலித்தன. கோயில்களிலும், மதிதயன் மாளிகையிலும், சங்கு, பேரி முதலிய வாத்தியங்கள் முழங்கின.

வேந்தர்களனைவரும் துயிலுணர்ந்து, தத்தம் காலைக் கடனைமுடித்து விலையுயர்ந்த ஆடையணிகளால் தம்மையலங் கரித்துக்கொண்டனர். அவர் பூசிக்கொண்ட பலவித வாச னைப் பொருள்களின் மணம் காததூரம் கமழ்ந்தது.

பின்பு அவர்களனைவரும் குறிப்பிட்டநேரத்திற்குச் சிறிது முந்தியே சுயம்வரமண்டப மணுகினர். அம்மண்டபத்தின் மேலிட மெங்கும் பால் போன்ற வெண்ணிறவாடை

கட்டப்பட்டிருந்தது; இடையிடையே, செம்மை, பசுமை, மஞ்சள் முதலிய பல நிறக் காகிதங்களால் சித்திர வேலைகள் செய்திருந்தன. அம்மண்டபத்தின் அடியில் இரத்தின கம்பளம் ஒழுங்காய்ப் பரப்பப்பட்டிருந்தது. அதன் எதிர்ப்புறத்தில் பெரிய பூம்பந்தல் ஒன்று விளங்கினது. அதன் தூண்களில் கட்டப்பட்டிருந்த குலைவாழை கமுகங் குலை முதலியவை அழகாய்த் தோன்றின. தரைமுழுதும் நுண்ணிய வெண்மணலை ஒரே மட்டமாய்ப் பரப்பி அதன் மேல் ஆங்காங்கே பலவகைப் பூஞ்செடிகளை யுடைய தொட்டிகள் ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. அப்பந்தலின் நாற்புறமும் செம்மை, வெண்மை, பசுமை முதலிய பல நிறக்கொடிகள் அழகாய் விளங்கின அரசர்களனைவரும் அம் மண்டபத்தினுட் சென்று அங்குப் போடப்பட்டிருந்த நாற்காலிகளின்மேல் வரிசையா யுட்கார்ந்தனர். அவர்களுடன் சென்ற மந்திரிகள், படைத்தலைவர்கள் முதலானோர் மற்றொரு புறத்தில் அமர்ந்திருந்தனர். சிறிதுநேரங் கழிந்ததும், அரிச்சந்திரனும் அம்மண்டபமடைந்து ஒருபுறம் வீற்றிருந்தான். இவர்களெல்லாருக்கும் முன்பே, அந்நகரத்திலுள்ள வேதியர்கள், செல்வர்கள், பெரிய வணிகர்கள், பட்டதாரிகள், கவிவாணர்கள் முதலிய பலர் தத்தமக்கு ஏற்படுத்தப்பட்ட விடங்களில் அமைதியா யுட்கார்ந்திருந்தனர்.

இவர்கள் இவ்வாறாக, இனி மணப் பெண்ணாகிய சந்திரமதியைப் பற்றிக் கவனிப்போம். அவளைத் தோழிப் பெண்கள் நீராட்டி நன்றாயலங்கரித்தனர். பின்பு மதிதய மன்னவனாணையின்படி அவர்கள் அவளைச் சுயம்வர மண்டபமழைத்து வந்தனர்.

அப்பெண்மணி தன் கூந்தலிலுள்ள மலர்மாலைக ளசையவும், பலவகை யாபரணங்கள் ஒளிவீசவும் அன்னம்போல்

மெல்ல நடந்து சுயம்வர மண்டப மடைந்தனள். அத்தருணம் ஒரு வெண்ணிலாவைப் பல நட்சத்திரங்கள் சூழ்ந்தது போல் அவளைப் பல தோழிப் பெண்கள் சூழ்ந்து சென்றனர். அவள் அம்மண்டபத்தினுட் புகுந்ததும், அவள் தந்தையாகிய மதிதயன் அவளை நோக்கி, "என் கண்ணே! இங்கே பல நாட்டு மன்னர்கள் வந்திருக்கின்றனர். முன்பு சிவபெருமான் மொழிந்த தேவாகசியத்தை நீயும் அறிவாயன்றோ! அதனை யறிந்து சொல்லும் இறையவனெவனோ அவனையே நீ மாலையிட்டு மணக்க" என்றனன்.

பின்பு தோழியர்களில் நுண்ணறி வுடையவளாகிய ஒருத்தி அங்கு வீற்றிருக்கும் ஒவ்வோரரசனுடைய குலம், பெயர், செல்வம், கல்வி, ஆற்றல் முதலியவற்றைச் சந்திரமதிக்குத் தெரிவித்தனள். சந்திரமதி நாணத்தின் மிகுதியால் அம்மன்னவர்களைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே தன் தோழியின் பின் சென்றனள்.

அந்தத் தோழி இவ்வாறு பல மன்னர்களைச் சந்திரமதிக்குக் காட்டிக்கொண்டே சென்று பின்பு அரிச்சந்திரனையணுகினள். அப்போது அவ்வேந்தன் முன்னையினும் பலமடங்கு அன்பு மிகுந்தவனாய்ச் சந்திரமதியை உற்று நோக்கினான். அப்போதவன் அவள் கழுத்தில் சிறந்த தாலியொன்று இருப்பதைக் கண்டான். உடனே அவன் அளவற்ற கோபங்கொண்டு மதிதய மன்னனை நோக்கி, "வேந்தரே! யாது காரியம் செய்யத் துணிந்தீர்! சந்திரமதியைக் கன்னியெனக் கருதியல்லவோ நாங்களனைவரும் இங்கு வந்தோம். ஆனால்,

"பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணமு டிப்பரோ ?
சிறுத்தவர் செய்தொழில் திரைவ ரைப்பினில்
நிறுத்தினர் நீரென நெடிது கூறினன்."

இப்பெண்ணின் கழுத்தில் உயர்ந்த தாலி யொன்றிருப்பதால் இவளுக்கு முன்பே மணம் முடித்திருக்கவேண்டும். இவளுக்கு மீண்டும் மணமியற்ற நினைப்பது சிறிதும் தகாது. இது கீழ் மக்கள் செய்கையே யாகும்'' என இடிபோல் முழங்கிக் கூறினன்.

உடனே மதிதயன் பொறாமையோ டெழுந்து ஆங்குள்ள மன்னர்களை நோக்கி, "வெற்றியும் புகழும் பொருந்திய வேந்தர்களே! நான் சொல்வதைச் சற்றுச் செவி சாய்த்துக் கேளுங்கள். நான் நெடுநாள் மகப்பேறின்றி வருந்திப் பின்பு சடைமுடி யண்ணலருளால் இச்சந்திரமதியைப் பெற்றேன். அப்போதப்பெருமாள், "என் புதல்வியாகிய இப்பெண்மணியின் கழுத்தில் அழகிய தாலியொன்று விளங்கும். அதனை யறிந்துகொள்பவன் எவனோ அவனே இவளுக்கு நாயகனாவான்'' என மொழிந்து மறைந்தனர். அத்தாலி இதுகாறும் என் கண்ணுக்காயினும் என் மனைவி கண்ணுக்காயினும் இங்குள்ள அரசர்களில் ஒருவர் கண்ணுக்காயினும் புலப்படவில்லை. அப்பெருமான் கட்டளையின்படி, அதனை இவ்வரிச்சந்திர மன்னவரறிந்து சொன்னமையால், அவரே சந்திரமதிக்குத் தக்க கணவராவார். இவ்வுண்மையை ஆராய்ந்தறிய விரும்பியே உங்களனைவரையும் இங்கு வரவழைத்தேன். முன்பு வேதியர்களிடம் தேவரகசிய மொன்றுண்டென நான் சொன்னதும் இதுவேயாம்'' என மொழிந்து உட்கார்ந்தனன்.

இதைக் கேட்டதும் அரிச்சந்திரன் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்; அங்குள்ளாரனைவரும் மிகவும் வியப்படைந்தனர். பின்பு சந்திரமதி மிகுந்த களிப்பும் நாணமு முடையவ

ளாய்த் தன் கரத்திலிருந்த மாலையை அரிச்சந்திரன் கழுத்தி லிட்டனள். உடனே,

“மாதர்க ளார்த்தனர்; வானவ ரார்த்தார்;
சிதர்க ளார்த்தனர்; கேளிரு மார்த்தார்;
சூதர்க ளார்த்தனர்; துறவரு மார்த்தார்;
வேதர்க ளார்த்தனர்; வேலையடங்க.”

என்றபடி, அனைவரும் களிப்பின் மிகுதியால் பேராரவாரம் புரிந்தனர். பின்பு அவர்களிருவர்க்கும் மணம் நிறை வேறினது.

அதன் பிறகு அயல்நாட்டு வேந்தரனைவரும் தத்தம் நாடுகளைப் போய்ச் சேர்ந்தனர். அரிச்சந்திரன் மட்டும் சில நாளளவும் அங்கேயே தங்கியிருந்தான். பின்பு ஒருநாள் அவன் தன் நாட்டிற்குச் செல்லக் கருதி, அதனைத் தன் மனைவிக் குணர்த்தினன். உடனே அவள் அச்செய்தியைத் தன் பெற்றோருக் கறிவித்தனள். அவர்கள் அவளுக்கு வேண்டியவளவு பொருள்களைச் சீதனமாக வழங்கி அவர்க ளிருவரையும் அவர்கள் நாட்டிற்கனுப்பினர்.

பின்பு அவர்கள் தமது அயோத்தி நகரையடைந்து உடலும் உயிரும்போல் ஒருவரை யொருவர் நேசித்து வந்த னர். சில வருஷங்களுக்குப் பின் அவர்களுக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. இச்செய்தியைக் கேட்டு அந்நகர மாந்த ரனைவரும் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தனர். அரிச்சந்திரனும் சந்திரமதியும் அக்குழந்தைக்குத் தேவதாசனெனப் பேரிட்டு அதனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். உரிய பருவத்தில் அதற்குரிய சடங்குக ளெல்லாம் செய்யப்பட்டன. அக்குழந்தைக்கு ஏழாண்டு நிரம்பின.

5. அத்தியாயம்.

இந்திரன் சபையில் விசுவாமித்திரருக்கும் வசிஷ்டருக்கும் வழக்கு நேர்தல்.

இஃதிவ்வாறாக, அரிச்சந்திரன் முன்போலவே தனதாசாட்சியை இனிது நடத்தி வந்தான். கொடை, கருணை, பொறுமை முதலிய குணங்கள் அவனிடம் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கின. அதனால் அம்மன்னவன் புகழ் 'குன்றின் மேலிட்ட விளக்கைப்போல்' எங்கும் பரவினது. அவனிடமுள்ள அரிய குணங்கள் எல்லாவற்றிலும், மெய் பேசுங் குணமே மிகவும் சிறந்து விளங்கினது.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்றபடி, மெய்ம்மையில் சகல தருமங்களும் அடங்கியிருப்பதை அவன் நன்குணர்ந்தவன். ஆதலால், தன்னுயிர் போவதாயிருந்தாலும் அவன் உண்மையை உரைப்பான். தன்னாட்டிலுள்ள குடிகளையும் அவ்வாறு பேசும்படி தூண்டுவான். இதனால் அவன் நாட்டிலுள்ளோர் பலர் அவனை மிகவுங் கொண்டாடலாயினர். நமது மண்ணுலகத்திலுள்ள அரிச்சந்திரன் செய்தியை இவ்வளவோடே நிறுத்தி, இனி விண்ணுலகில் நடந்த விஷயத்தைக் குறித்துச் சிறிது கவனிப்போம்.

விண்ணுலகமென்னும் தேவலோகத்திற்குத் தலை நகரம் அமராவதி. அதில் பல மாடமாளிகைகள் நிரம்பி விளங்கும். அந்நகரின் நடுவில் அழகிய கற்பகச் சோலையொன்றுண்டு. அதிலுள்ள மரங்கள் சிலவற்றில் காலந் தவறாமல் இளந்தளிர் தளிர்க்கும். வேறு சிலவற்றில் அரும்புகள் விடும். பின்னுஞ் சிலவற்றில் நறுமணம் வீசும் மலர்கள் கொத்துக் கொத்தாய் மலரும். இன்னுஞ் சிலவற்றில் பசிய காய்கள்

காய்க்கும். மற்றுஞ் சிலவற்றில் இனிய பழங்கள் பழுத்துத் தொங்கும். அச்சோலையின் நடுவில் சிலர் பந்தாடுவார். சிலர் ஊஞ்சலில் உல்லாசமாய் விளையாடுவார். சிலர் வீணை, குழல் முதலிய கருவிகளுடன் இனிமையாய்ப் பாடுவார். அப்பொழிலின் ஒரு புறத்தில் ஒரு பொய்கையுண்டு, அதில் தாமரை, அல்லி முதலிய மலர்களும், வரால், கெண்டை முதலிய மீன்களும் நிரம்பியிருந்தன. அப்பொய்கையில் பலர் நீராடுவார். பலர் அச்சோலையிலுள்ள மலர்களைப் பறித்துத் தமது தலையில் சூடுவார். இத்தகைய பெருமை பொருந்திய அச்சோலையின் நடுவில் ஓரழகிய மண்டபமும், அம் மண்டபத்தின் நடுவில் ஒருயர்ந்த சிங்காசனமு மிருந்தன. அதன் இருபுறங்களிலும் பல பீடங்கள் ஒழுங்காய்ப் போடப் பட்டிருந்தன. சூரியன், சந்திரன், குபேரன், நாரதன், தும்புரு, வசிஷ்டன், அகஸ்தியன், விசுவாமித்திரன் முதலிய பற்பலர் அம்மண்டபத்தில் புகுந்து தத்தமக்குரிய விடங்களில் உட்கார்ந்து பற்பல விஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரங்கழிந்ததும், ஒருயர்ந்த வெள்ளையானையின் மேல் ஒரு சிறந்த புருஷன் ஏறி வந்தான். அவன் விலையுயர்ந்த ஆடையணிகளைப் புனைந்திருந்தான். அவன் தலையிலுள்ள மகுடம் சூரியனைப்போல் ஒளி வீசி விளங்கினது. சங்கு, பேரி, யாழ், குழல் முதலிய பல மங்கல வாத்தியங்கள் அவனைச் சூழ்ந்திசைத்தன. அவன் தன் வெள்ளையானையை விட்டிறங்கி அம்மண்டபத்தின் உள்ளே நுழைந்தனன். உடனே அங்குள்ளாரனைவரும் திடீரென்றெழுந்து அமைதியாயிருந்தனர். பின்பு அவன் மங்கல வாத்தியங்கள் முழங்கவும், முனிவர்கள் ஆசி கூறவும், சிங்காசனத்தின் மேல் அமர்ந்து அங்குள்ளாரனைவர்க்கும் தலைமையாய்

விளங்கினன். அவன் அந்நகரத்திற்குத் தலைவனாகிய தேவேந்திரன்.

பின்னர் அவன் தனது அரசாட்சி முறைமைக்குரிய பல விஷயங்களைக் கவனித்தான். அவை யெல்லாம் முடிந்தபின், அவன் சிறிது நேரம் உல்லாசமாய்ப் பொழுது போக்கக் கருதினன். அதனாலவன் அங்குள்ள முனிவர்களை நோக்கி, "தவச் செல்வர்களே! மூவுலகத்தும் உயர்வாக மதிக்கத் தக்கதும் ஒருபோதும் அழியாப் புகழைத் தருவதும் எது? அதனை எனக்கு விளங்கச் சொல்லுங்கள்" என வினவினன். அதற்கு வசிஷ்டர், "தேவர் தலைவ! எல்லாவற்றிலும் வாய்மையே உயர்ந்ததாம். அது ஒருபோதும் அழிவுறாது; இம்மையில் புகழையும் மறுமையில் வீடுபேற்றையும் தப்பாமல் தரவல்லது அஃதொன்றேயாம். ஆதலால், அதற்கிணை யானது வேறொன்றுமில்லை" என்றனர்.

மீண்டும் இந்திரன் அம் முனிவரை நோக்கி, "நான்மறை வல்லீர்! அத்தகைய உயர் குணம் வாய்ந்தவர் உலகத்தில் யாரேனுமுளரோ?" என வினவினன். அதற்கவர், "விண்ணவர் வேந்தே! உன் கேள்விக்கு விடை கூறுவது எளிதல்ல. கொடை, கல்வி, வீரம் முதலியவற்றை யுடையவர் உலகத்தில் பலரிருப்பார். ஆனல், எப்போதும் உண்மையே பேசும் உத்தமரைக் காண்பது மிகவும் அருமை. பொறுமையே ஆபரணமாகப் பூண்ட பெரியோர்களும் சிற்சில சமயங்களில் பொய் பேசுகின்றனர்.

> "பொய்மையும் வாய்மை யிடத்த; புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்."

எனக் கற்றுணர்ந்த பெரியோர்களும் சில சமயங்களில் பொய் பேசலா மெனப் புகன்றிருக்கின்றனர். ஆதலால்,

எப்போதும் மெய்யே பேசும் மேலோரைக் காண்பது மிகவு மரிது. ஆகா! இப்போது நினைவு வந்தது. மண்ணுலகத் தில் ஒருவன் இருக்கிறான். அவன் எல்லா நற்குணங்களும் பொருந்தியவன். உண்மைக்கு இருப்பிடமாய் உள்ளவன். அன்றியும்,

"தாயொக்கும் அன்பின்; தவமொக்கும் நலம்ப யப்பின்;
சேயொக்கும் முன்னின்றொரு செல்கதி யுய்க்கும் நீரால்;
நோயொக்கு மென்னின் மருந்தொக்கும், நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கா லறிவொக்கும் எவர்க்கும் அன்னான்."

என்றபடி, அவன் தன் குடிகளுக்கு எவ்வித இடையூறுமின் றிக் காப்பவன். மூன்றுலகங்களிலும் அவனுக்கு ஒப்பான வர் ஒருவருமிலர். அவன் அயோத்திநகரை யாண்டு வரு கிறான். அவன் பேர் அரிச்சந்திரன்" என மொழிந்தனர்.

இச்சொற்களைக் கேட்டதும், விசுவாமித்திர முனிவர் கண்கள சிவந்தன. புருவங்கள் வளைந்தன. கைகால்கள் நடுங் கின. அவர் முன்பே வசிஷ்டரைப் பகைத்திருந்தனர். அத னால், அவர் கோடையிடிபோல் முழங்கி, "ஆ! வசிஷ்டரே! என்ன சொன்னீர்! என்ன சொன்னீர்!! உமது மாணவ னாகிய அரிச்சந்திரனை நீர்தான் வியக்க வேண்டும். உமது மாணவனைப் புகழ்வது உமக்கும் பெரும் புகழல்லவா? இதனைத் தெய்வ சபை யெனச் சிறிதும் மதியாமல், உமது வாயில் வந்தபடி, பேசுதல் தகாது. குலிசப்படையாய்! அந்த அரிச்சந்திரனை நான் இவரைவிட நன்றாயறிவேன். அவ்வேந்தன், "காதல், களவாடல், கள்ளுண்டல், பொய்ம் மொழிதல், ஈதல் மறுத்தல்" முதலிய தீயகுணங்களையும் தீயசெயல்களையு முடையவன். இவைகளில் அவனுக்கு நிகரானவர் இம்மூவுலகங்களிலும் ஒருவரும் இலர். இஃ துண்மை" எனக் கடுகடுத்துக் கூறினர்.

உடனே வசிஷ்ட முனிவர்க்கு அளவற்ற கோபம் வந்துவிட்டது. அதனாலவர் கௌசிக முனிவரை நோக்கி, "ஆ! முனிவரே! உண்மைக்கு உறையுளாய் விளங்கும் அரிச்சந்திரனை நீர் பலவாறு தூற்றினீர். இது உமக்குத் தகுமோ? ஆகா! உமது வாய் இன்னும் வேகாமல் இருக்கிறதே! ஐயோ! உமது விஷயத்தில் கடவுளும் பொய்த்துப் போயினரே!" என மொழிந்தனர்.

அதற்குக் கௌசிகர் "ஆ! வசிஷ்டரே! நீர் சொன்னது பொய்யோ நான் மொழிந்தது பொய்யோ என்பதைக் கடவுளே யறிவார். முதலில் ஒரு பொய்யைச் சொல்லி அதனைக் கடைசி வரையில் நிலை நிறுத்த முயல்வதில் நீர் வல்லவானன்றோ! அத்தகைய உமது வாயிலன்றோ புழுக்கள் உதிரவேண்டும். மெய் பேசிய என் வாய் வேகவேண்டிய காரணம் சிறிதுமில்லை" என மொழிந்தார்.

இக்கடுமொழிகளைக் கேட்டதும் வசிஷ்டருக்கு அளவற்ற கோபம் வந்துவிட்டது. அதனாலவர் சிங்கத்தைப் போல் கர்ஜித்துத் தமதிருப்பிடத்தை விட்டுத் திடீரென்றெழுந்தனர். உடனே விஸ்வாமித்திரர், "உனக்கு நான் பின் வாங்கினவனோ? இதோ என் வல்லமையைப் பார்" எனப் போரவாரத்துடனெழுந்தார்.

இவ்விருவர் செயலைக் கண்ட இந்திரன் நடுநடுங்கிப் போனான். உடனே அவன் தன்னாசனத்தை விட்டெழுந்து அவ்விருவர்க்கும் இடையில் நின்று, "தவச் செல்வர்களே! பொறுங்கள்! பொறுங்கள்!! கலைக்கடல் முற்றும் பருகிய நீங்கள் இவ்வாறு சினங் கொள்ளல் தகுமோ!

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க."

என்று அறிஞர் கூறியதை அறியீரா?" என மொழிந்து

அவர்கள் சீற்றத்தை ஒருவாறு தணித்தான். பின்பு அவர்க ளிருவரும் தத்தமிடங்களில் அமர்ந்தனர்.

அதன் பிறகு இந்திரன் அவ்விருவரையும் நோக்கி, "முனிவர்களே! உங்களிருவர்களில் ஒருவர் சொல் பொய்த் துப்போனல், அப்போது நீங்கள் யாது செய்வீர்?" என வினவினன். அதற்கு வசிஷ்டர், "அரிச்சந்திரனைப் பொய்ய னென மெய்ப்பிக்க விசுவாமித்திரரால் முடியாது. அப்படி அவர் மெய்ப்பித்தால், நான் என் தவத்தைத் துறந்து தலை யோட்டில் கள்ளையேந்தித் தென்திசை நோக்கிச் செல்வேன். இஃதுண்மை" என்றனர். உடனே விசுவாமித்திரர், "வசிஷ் டர் கோபத்தின் மிகுதியால் தம்மை மறந்து வாயில் வந்த படி பேசுகிறுர். நானெருபோதும் அப்படிப் பேசேன். வசிஷ்டர் சொன்னபடி அம்மன்னவன் வாய்மை தவருதிருந் தால், நான் இதுவரையில் செய்துள்ள தவத்தில் ஒருபாதியை அவனுக் களிப்பேன். இது திண்ணம் என்றனர்.

பின்பு இந்திரன் கௌசிகரை நோக்கி, "முனிவர் தலை வரே! இனி அரிச்சந்திரன் பொய்யனென்பதை மெய்ப் பிக்க வேண்டிய கடமை உம்முடையதேயாம். ஆதலால், இனி அதற்குரிய முயற்சிகளைச் செய்வீராக" என்றனன். பின் சபை கலைந்தது.

---

6. அத்தியாயம்

விசுவாமித்திரர் அரிச்சந்திரனை வஞ்சித்தல்

இந்திரன் சபையிலிருந்தகன்ற விசுவாமித்திரர் தமது தவச்சாலை யணுகினர். பின்பு அவர், "ஆ! என்ன காரி யம் செய்தேன்! என்னைப்போன்ற மதியீனர்களுமுண் டோ! அரிச்சந்திரன் நீதியும் வாய்மையும் உடையவ னன்றே! வசிஷ்டர்பால் எனக்கியற்கையாயுள்ள பொரு

மையால், அம்மன்னவனை வீணாய் இகழ்ந்தேன். அஃதெப் படியாயினு மொழியட்டும். இனி அவனைப் பொய்யனென மெய்ப்பிப்ப தெப்படி? ஐயோ! இது எளிய காரியமல்லவே. உத்தமனாகிய அவனைப் பலவாறு துன்புறுத்த வேண்டு மன்றோ! அம்மன்னவன் எனக்குப் பகைஞனல்லன். அன்றியும், அவன் என்பால் பேரன்பு பூண்டொழுகுகின்றான். அவனை வீணாய் வருத்துவதெப்படி?" எனப் பலவாறு தமக்குள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர்.

அத்தருணம் பல முனிவர்கள் அவரைக் காண வந்தனர். அவர்களனைவரும் விசுவாமித்திரர் தவச்சாலைக் கருகிலுள்ளவர்கள். அவர்களி லொருவர் விசுவாமித்திரரை நோக்கி, "முனிவர் தலைவரே! நீர் தேவலோகத்திற்குச் சென்று வந்தீரே, அங்கென்ன விசேஷம்?" என வினவினர். அதற்கு விசுவாமித்திரர், "தபோதனர்களே! இந்திரன் சபையில் பல முனிவர்கள் ஒன்று கூடினர் அவர்களனைவரும் சிறந்ததோர் வேள்வியைக் குறித்துப் பெரிதும் வியந்து பேசினர். அதனை முடிக்கக் கருதி யானிங்கு விரைந்து வந்தேன். அதற்கு ஏராளமான பொருள் வேண்டியிருக்கும். ஆதலால் நீங்களிப்போதே அரிச்சந்திர மன்னனிடம் சென்று பெருந் தொகை கேளுங்கள்" எனச் சொல்லி யனுப்பினர்.

உடனே அவர்களவ்வாறே சென்று, "வேந்தர் வேந்தே! விசுவாமித்திர முனிவர் ஒரு வேள்வி யியற்றக் கருதியிருக்கின்றனர். அதற்குப் பொருள் மிகுதியாய் வேண்டும். அதனைத் தரவல்லார் தங்களைத் தவிர வேறெவருமிலர். உமது கருத்தை யறிந்துவரும்படி விசுவாமித்திரர் எங்களை யனுப்பினர். ஆதலால் உம்மிடம் வந்தோம்" என்றனர். அதற்கு அக்காவலன் அவ்வாறே ஒப்புக்கொண்டான். பின்பு அவர்

கள் மீண்டும் விசுவாமித்திரரை யணுகி அவருக்கு இச்செய்தியை அறிவித்தனர்.

இது நடந்த சில மாதங்களுக்குப் பின், விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் போய்க் கண்டனர். அப்போது அம்மன்னன் அவரை நன்கு உபசரித்து, "சுவாமி! தாங்கள் எளியேனிடம் வரக் காரணம் யாது? முன்பு முனிவர்கள் கேட்ட பொருட்குவியலைப் பெறுதற் பொருட்டோ?" என வினவினன். அதற்கவர், ஆமாம் என்றனர். உடனே அரிச்சந்திரன் அவர் விரும்பிய பொருளைத் தர முயன்றான். அப்போதவர், "மன்னர் மன்ன! அது எனக்கிப்போது வேண்டுவதில்லை; உன்னிடமே இருக்கட்டும். அதனை வேண்டும்போது பெற்றுக்கொள்கிறேன். உனக்கு எச்சரிக்கை செய்யக்கருதி இப்போது வந்தேன்" என மொழிந்து அவனை வாழ்த்திச் சென்றனர்.

பின்பு விசுவாமித்திரர் தமதிருப்பிட மணுகி, ஒரு பெரிய மரநிழலில் உட்கார்ந்து, 'பலவகை விலங்குகளும் பறவைகளும் இங்கு வருக" என அழைத்தார். உடனே அவர் தவ வலிமையால் சிங்கம், புலி யானை, ஒட்டை, கரடி, மான் முதலிய விலங்குகளும், மயில், கோழி, நாரை, கிளி, ஆந்தை வல்லூறு முதலிய பறவைகளும் விரைந்து வந்து அவரை வணங்கின. அப்போதவர் அவைகளை நோக்கி, "மாக்களே! நீங்களெல்லோரும் அரிச்சந்திரன் ஆண்டுவரும் அயோத்தியை யணுகி அங்குள்ள பயிர்களையும், உயிர்களையும், சோலைகளையும் அழித்து வாருங்கள்" என ஏவினர்.

உடனே அவைக ளெல்லாம் மிகவும் களிப்பாய் அயோத்தியைப் போய்ச் சேர்ந்தன. மான், ஒட்டை, முயல், குரங்கு முதலிய மிருகங்கள் சோலைகளையும் வயல்களையும்

அழிக்கத் தொடங்கின. புலி, சிங்கம், கரடி, ஓநாய், நரி முதலிய விலங்குகள் அந்நாட்டிலுள்ள ஆடு மாடுகளைக் கொன்று குவித்தன. பாம்பு, தேள், முதலிய விஷஜந்துக்கள் ஆங்காங்குள்ள மனிதர்களைக் கடித்துத் துன்புறுத்தின.

ஆண்மையுள்ள இளைஞர் சிலர் தத்தம் பயிரையும் பொழிலையும் அழிக்கும் விலங்குகளைத் துரத்திச்சென்றனர். ஐயோ பாவம்! உடனே புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் அவர்கள் மேல் திடீரெனப் பாய்ந்து அவர்களைத் தமது வாயில் கௌவிக்கொண்டோடலாயின. இக்கொடுஞ் செய்கையைக்கண்டு அந்நாட்டிலுள்ள ஆடவர் பெண்டிரனைவரும் நடுநடுங்கிக் கூக்குரலிடத் தொடங்கினர். கிழவர்களிற் பலர் "ஆ! இதென்ன அநியாயம்! நாங்கள் இப்படிப்பட்ட கொடுமையை ஒருபோதும் கண்டதில்லை" எனக் கதறலாயினர்.

இவ்வாறு அக்கொடிய பிராணிகள் அந்நாட்டைத் தமதிஷ்டம்போல் அழித்தபின், மீண்டும் தமதிடம் போய்ச் சேர்ந்தன. பின்பு அந்நாட்டிலுள்ள கனவான்கள் சிலர் ஒன்று சேர்ந்து காட்டு மிருகங்களால் எளிய குடிகளுக்கு நேர்ந்த பல கொடுந் துன்பங்களை அரிச்சந்திர மன்னவனுக்கு எடுத்தோதினர். அதனைச் செவியுற்றதும், அவன் மிகவும் வருந்தித் தன் குடிகளுக்கு நேர்ந்த துன்பங்களுக் கீடாகப் பலவிதத்தும் பலவித உதவிகளைப் புரிந்தான்.

---

7. அத்தியாயம்

அரிச்சந்திரன் வேட்டையாடச் செல்லல்

காட்டு மிருகங்கள் தன் குடிகளுக்குப் புரிந்தகேட்டையெண்ணி யெண்ணி அரிச்சந்திரன் நெருப்பிலிட்ட புழுவைப்

போல் மனம் பதைத்தான். பின்பு அவன் அவ்விலங்குகளை யழிக்கக் கருதித் தன் படைத்தலைவனை நோக்கி, "சேனைத் தலைவ! நான் காட்டிற்குச்சென்று வேட்டையாட விரும்பு கிறேன். நமது படைகளின் ஒரு பகுதியைத் திரட்டு. ஆண்மை வாய்ந்த வேடர்களிற் சிலர் நமக்குதவியா யிருப்பது நலம். ஏனெனில், அவர்கள் மிருகங்களின் குறிப்புகளை யெளிதி லுணர்வர். வேட்டைக்குரியன யாவும் நாளைத்தினமே தயா ராகவேண்டும்" எனக் கட்டளை புரிந்தனன்.

மறுநாட்காலை சேனாதிபன் அவ்வாறே முடித்து அதனை அரிச்சந்திரனுக்கறிவித்தான். உடனே அவன் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். அப்போதவன் மனைவியாகிய சந்திர மதி, "என்னுருயிர்த்தலைவரே! நான் தங்களைப்பிரிந்து ஒரு கொடிப்போதும் உயிர்வாழேன். அன்றியும், நாட்டிலுள்ள காட்சிகளைக் கண்டு களிக்கவும் விரும்புகிறேன். ஆதலால் என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்," எனப் பணிவாய்ப் பகர்ந்தாள். அரிச்சந்திரன் அவ்வாறே இசைந் தான். உடனே அவள் தன் புதல்வனையும் அழைத்துக் கொண்டு அம்மன்னனுடன் புறப்பட்டாள்.

அவர்கள் மூவரும் ஒருபெரிய தேரின்மேலேறினர். அது மிகவும் நன்றுபலங்கரிக்கப்பட்டிருந்தது. மந்திரிகள், படைத்தலைவர்கள் முதலானோர் அத்தேரைச் சூழ்ந்து சென் றனர். பலவகை வாத்தியங்கள் முழங்கின. யானை, தேர், குதிரை காலாளென்னும் நால்வகைப்படைகளும் தொடர்ந்து சென்றன. வேல், வாள், ஈட்டி முதலிய பலவகைப் படை கள் ஒளிவீசி விளங்கின.

அச்சேனைகளுக்குப் பின் வேடர்கள் கூட்டங் கூட்ட மாய்ச் சென்றனர். அவர்கள் புலித்தோல், யானைத்தோல்

முதலியவற்றை அரைக்கச்சாக அணிந்திருந்தனர். வெள்ளிய பலகரைகளாலாகிய சட்டைகளை அவர்கள் போர்த்திருந்தனர். காக்கணம் பூ, நெற்கதிர் முதலியன அவர்கள் கழுத்திலும் மார்பிலும் மாலையாகத் துவண்டன. அவர்களில் சிலர் திருநீறும், வேறு சிலர் குங்குமப்பொட்டு மிட்டுக்கொண் டிருந்தனர். வலை, கண்ணி, குறுந்தடி, வளைதடி, சங்கிலி, வில், வாள் முதலிய கருவிகள் அவர்கள் கைகளில் விளங்கின.

அவர்களைப் பல வேட்டை நாய்கள் பின் தொடர்ந்தோடின. அவைகளில் பலவற்றிற்குக் காதும் வாலும் அறுபட்டிருந்தன. சிலவற்றிற்குக் காதுகள் மடிந்து தொங்கின. வேறு சிலவற்றிற்கு வால் சுருண்டுகிடந்தன. அவையனைத்தும் ஒன்றைபொன்று சீறிக்கொண்டும் குரைத்துக்கொண்டும் தாவியோடின.

இவ்வரிய காட்சிகளை ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ப் பார்த்து அதிசயித்தனர். பின்பு அரிச்சந்திரன் காட்டையடைந்தான். உடனே வேட்டை தொடங்கும்படி அவன் தன் சேனைக்குக் கட்டளையிட்டான். அவனுணைப்படி உடனே வேட்டை தொடங்கினது. வேடர்களிற் பலர் ஆங்காங்குச் சிறுவலை, பெருவலை முதலியவற்றைப் பரப்பினர். சிலர் மரங்களில் கண்ணிகளை வைத்தனர். வேறு சிலர் மரங்களிலும் புதர்களிலும் மறைந்து நின்று சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்களைப்போல் கூவினர். இன்னுஞ் சிலர் மயில், குயில், காகம், ஆந்தை முதலிய பறவைகளைப்போல் ஒலித்தனர். மன்னவன் படைவீரருட் பலர் தமக்கெதிர்ப்பட்ட விலங்குகளை வெட்டியும் குத்தியும் கொன்றனர். பற்பல விலங்குகள் வலைகளிற்போய் அகப்பட்டுக்கொண்டன. அவைகளை அங்குள்ள வேடர்கள் தமது வளைதடி, குறுந் தடிகளா

லடித்துக் கொன்றனர். வேட்டைநாய்கள் தமக்கெதிர்ப் பட்ட நரி, முயல், ஓநாய் முதலிய மிருகங்களைக் கடித்துக் கொன்றன. சில நாய்கள் புதர்களில் பதுங்கிக் கிடக்கும் சிங்கம், புலி, சிறுத்தை முதலிய விலங்குகளைக்கண்டு ஓயாமல் குரைத்தன. வேடர்களில் சிலர் அக்குறிப்பை யுணர்ந்து அவைகளை அம்பெய்து கொன்றனர். பல மிருகங்களின் கால்கள் சிதைந்துபோயின. பலவற்றின் உடல்கள் அழி வுண்டன. பலவற்றின் குடல்கள் சரிந்துபோயின. மயில், நாரை, காட்டுக்கோழி முதலிய பறவைகள் ஆயிரக்கணக்காய் அழிந்தன. புலி, சிங்கம் முதலிய விலங்குகளின் அறுபட்ட உடல்கள் துள்ளித் துள்ளிக் குதித்தன. அவைகளின் இரத் தம் ஆறுபோல் ஓடத் தொடங்கினது. ஆற்றின் இடை யிடையே தோற்றும் மணற்குன்றுகளைப் போல் அங்கங்கே பிணக்குவியல்கள் காணப்பட்டன. அன்றியும் அவ்வேடு வரால் கொல்லப்பட்ட மிருகங்கள் பலவற்றின் கால், வால் முதலிய உறுப்புகள் அந்த இரத்த வெள்ளத்தில் முழுகுவ தும் எழும்புவதுமா யிருந்தன. அவை புதிய நீரில் விளையா டித்திரியும் சேல் மீன்களை ஒத்தன. அம்மிருகங்களின் மூளை, கொழுப்புமுதலியன ஆறுகளின் நடுவில் மலர்ந்த வெண் தாம் ரை மலர்களைப்போல் விளங்கின. காக்கை, பருந்து முதலிய பற வைகள் அவைகள் கண்மணிகளைப் பறித்து விழுங்கின. நாய் நரிகள் அவைகளின் கால்களையும், குடல்களையும் கௌவிக் கொண்டோடின.

---

8. அத்தியாயம்

அரிச்சந்திரன் மாயப்பன்றியை எய்தல்

இஃதிவ்வாறாக, அரிச்சந்திர மன்னவன் வேட்டை யாட்களிடமிருந்து சிற்சில விலங்குகளும் பறவைகளும்

உயிர் தப்பியோடின. அவை யனைத்தும் விசுவாமித்திர முனிவரை யணுகி, “எந்தையே! எளிய உயிர்களாகிய எங்களைத் தாங்கள் அயோத்தி நகரின்மேல் ஏவினீரன்றோ! தமது கட்டளையின்படி நாங்களனைவரும் அங்குச்சென்று அதனை யழித்தோம். அதனால், அந்நகரத்திற்குத் தலைவனாகிய அரிச்சந்திரன் எங்களில் பலரை வதைத்து விட்டான். தங்களருளால் நாங்கள் மாத்திரம் உயிர் பிழைத்து வந்தோம். இனி எங்களைக் காப்பது தங்கள் கடமையே யாம்” என வணக்கமாய்ச் சொல்லின.

இவற்றையெல்லாம் கேட்டதும், விசுவாமித்திர முனிவர் கண்கள் சிவந்தன. உடல் வியர்த்தது. புருவம் வளைந்தன. பற்களை நெறநெறவென்று கடித்தார். ‘ஐயோ! அளவற்ற விலங்குகளும் பறவைகளும் இன்று நம்மால் வீணாய் மடிந்தனவே’ யென மீண்டும் வருந்தினார். பின்பு அவர், “ஆ! அரிச்சந்திரன் என் வல்லமையை அணுவளவும் அறியாமற் போனான். அம்மன்னவனுக்கு நல்ல புத்தி புகட்டுகிறேன் பார்” என இடிபோல் முழங்கித் தமது தவவலிமையால் ஒரு பெரும் பன்றியைப் படைத்தார். அதன் உடல் முழுவதும் இருள்போல் கருத்திருந்தது. மூன்றாம் பிறைச் சந்திரனை இரண்டாகப் பிளந்து வைத்தாற்போல, அதன் வாயின் இருபுறத்தும் இரண்டு கோரைப் பற்கள் இருந்தன. அதன் உடல் முழுதும் பனைஞ் செறும்பைப்போல் தடித்து நீண்டு அடர்ந்த மயிர் காணப்பட்டன. அதன் கரிய பெரிய உருவத்தைக் கண்ட வளவில் எத்தகைய வீரரும் நடுநடுங்குவார். முன்பு வெண் பன்றியாய்த் தோன்றிய திருமாலே இப்போது இக் கரும் பன்றியின் வடிவமெடுத்தனரோவென, அதனைக் கண்டோரனைவரும் ஐயமடைந்தனர்.

பிறகு அம்முனிவர் அதனை நோக்கி, "ஏ வராகமே! நீ இக்கணமே விரைந்து சென்று அரிச்சந்திரன் படைவீரர்களையும் வேடர்களையும் கொன்று அவ்வேந்தனைமட்டும் இங்கே கொண்டுவந்து சேர்த்துச் செல்" எனக் கட்டளையிட்டனர்.

உடனே அப்பன்றி அவரை வணங்கி அங்கு நின்று புறப்பட்டது. அது மதவெறிகொண்டு தனக்கெதிர்ப்பட்ட மான், எருமை முதலிய விலங்குகளை யெல்லாம் வதைத்தது. சிங்கம், புலி முதலிய கொடிய மிருகங்களும் அதனைக் கண்டு அஞ்சியோடின. பிறகு அது தன் காதுகளை நிமிர்த்து வாலை முறுக்கித் தலையைச் சாய்த்து உறுமிக்கொண்டே அரிச்சந்திரன் படையை யணுகினது. வேடுவர்களிற் பலர் அதனைக் கண்டு நடுநடுங்கினர். அத்தருணம் அது அவர்கள்மேல் திடீரெனப் பாய்ந்து அவர்களை யழிக்கத் தொடங்கிற்று. அவர்களில் பலர் கால் முறிந்தனர். பலர் கையொடிந்தனர். பலர் வயிற்றிலுள்ள குடல் செவ்வலரி மாலையைப்போல் தொங்கலாயின. பலர் உதிரத்தை அது அட்டையைப்போல் உறிஞ்சத் தொடங்கிற்று. ஆண்மை வாய்ந்த வேடர் பலர் ஒன்று கூடித் தமது கையிலுள்ள தடிகளால் அதனை ஓங்கியடித்தனர். சிலர் ஈட்டிகளால் குத்தினர். சிலர் வாளால் வெட்டினர். சிலர் தமது கையிலுள்ள வில்லைவளைத்துக் கூரிய அம்புகளை யெய்தனர். அது அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவர்களில் பலர் அப்பெரும் பன்றிக்கு இரையாய் விட்டனர். இச்செய்தி யனைத்தும் அரிச்சந்திரன் செவிக்கெட்டியன.

இதனைக் கேட்டதும், அம்மன்னவன் அளவற்ற கோபமும் துன்பமும் அடைந்தான். உடனே அவன் தன் தேரை அப்பன்றி யிருக்குமிடத்திற்கு ஓட்டும்படி தன்

பாகனுக்குக் கட்டளையிட்டான். அம்மன்னன் தேர் காற்றினும் விரைந்துசென்று அப்பன்றி யிருக்குமிடம் அணுகிற்று. அரிச்சந்திர மன்னவனைக் கண்டதும் அப்பன்றி முன்னையினும் பெருங் கோபங்கொண்டு அவன் தேரைச் சிதைக்கக்கருதி அதன்மேல் தாவிப்பாய்ந்தது. அப்போது அம்மன்னவன் அப்பெரும் பன்றியின் வடிவத்தையும் வன்மையையுங் கண்டு வியந்து, அதன்மேல் கூரிய தெய்வக்கணை யொன்றைத் தொடுத்தான், அது அதன் தலையில் அழுந்தப் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. அதனால் அதன் உடல் முழுதும் உதிரமாய்விட்டது. பின்பு அது தன் வலி யொழிந்து ஓடத்தொடங்கிற்று. அரிச்சந்திரன் அதைவிடாமல் பின் தொடர்ந்தோடினான். அது விசுவாமித்திரர் தவ வனத்திற் கருகிலுள்ள ஒரு சோலையை யடைந்ததும், திடீரென மறைந்துவிட்டது.

அம்மன்னவன் அதனைப் பலவிடங்களில் தேடித் திரிந்தான். அது சிறிதும் பயன்படவில்லை. அதன் பிறகு அவன் தன் படைவீரர்களுடன் அச்சோலையில் இளைப்பாறத் தங்கினான்.

சிறிது நேரங்கழிந்ததும், அரிச்சந்திர மன்னவனுக்கு நேருந் துன்பங்களைக் காண மனம் பொறாதவன் போல் சூரியன் மறைந்தான். நீரோடைகளிலும் வயல் வெளிகளிலுமுள்ள பறவைகளெல்லாம் தத்தம் கூடுகளைப் போய்ச்சேர்ந்தன. மாடுகளெல்லாம் தொழுவங்களைப் போயடைந்தன. விசுவாமித்திர முனிவர் கொடுஞ் செய்கைகளைப்போல் பேரிருள் எங்கும் மூடிக்கொண்டது. அழகிலும் கற்பிலும் திருமகளை யொத்த பெண்கள் தத்தம் வீடுகளில் விளக்கேற்றலாயினர். அரிச்சந்திர மன்னனும் அவன் படைவீரரும் உணவையுட்கொண்டு அன்றிரவு அச்சோலையிலேயே கண்ணுறங்கினர்.

அன்றிரவு கழிந்ததும் இருளகன்றது. சேவலும் காகமும் ஒலித்தன. கோயில்களிலும், அரண்மனைகளிலும் முரசம், சங்கு முதலிய வாத்தியங்கள் முழங்கின. தடாகங்களிலுள்ள தாமரை மலர்ந்தன. வண்டுகள் அவற்றிலுள்ள இனிய தேனை யுண்டு செவிக்கினிய பாடல்களைப் பாடின. ஆம்பல் நெய்தல் முதலிய மலர்கள் குவிந்தன. பசுவின் இளங் கன்றுகள் தமது தாயை யுன்னிக் கதறின. கடலின் நடுவில் செந்தாமரை மலர்ந்தாற்போல் சூரியனுதித்தான். சிவபிரானது சிவந்த சடை விரித்தாற்போல் சூரிய கிரணங்க ளெங்கும் பரவின.

அத்தருணம் அரிச்சந்திரன் தீய கனுக் கண்டெழுந்து திகைப்படைந்தனன். உடனே அவன் அதனைத் தன் மனைவிக்கும் அமைச்சனுக்கு முணர்த்தினன். அப்போதவன் அமைச்சன், "வெண்குடை வேந்தரே! தாங்கள் தீயகனவை விடியற்காலையில் கண்டமையால், அதன் பயன் விரைவில் நேரும். ஆயினும், முடிவில் தாங்கள் மேன்மை யடைவீ ரென்பது திண்ணம். இன்பம் வரும்போது மகிழ்தலும், துன்பம் நேரும்போது வருந்துதலும் அறிவிலார் செய்கையாம். ஆதலால், தாங்கள் இதன் பொருட்டுத் தளாலாகாது" என வியம்பினன். நுண்ணிய அறிவும் திண்ணிய கற்பும் வாய்ந்த அவன் மனைவியும் அம்மன்னவனை நோக்கி, "நாயக!

" நீரிற் குமிழி யிளமை; நிறைசெல்வம்
நீர்ச் சுருட்டு நெடுந்திரைகள்;—நீரில்
எழுத்தாகும் யாக்கை "

என்றபடி, இளமை, செல்வம், யாக்கை, முதலியன நிலையற்றனவாம். அவற்றை யொரு பொருளாக வெண்ணி நாம் வருந்தலாகாது" எனப் பகர்ந்தாள். பின்பு அம்மன்னவன் ஒருவாறு தேறுதலடைந்தான்.

9. அத்தியாயம்

விசுவாமித்திரர் அரிச்சந்திரனுடன் வழக்காடல்

இவர்கள் செய்தி இவ்வாருக, அரிச்சந்திரன் எய்த மாயப் பன்றி மிக்க வருத்தத்துடன் விசுவாமித்திர முனிவரை யணுகினது. பின்பு அது அவரை வணங்கி "முனிவர்களில் முதல்வரே! நான் தங்கள் உத்தரவின்படி சென்று அரிச்சந்திரன் படைவீரர்களில் பலரை வதைத்தேன். அதனை அம்மன்னவன் கேள்வியுற்று விரைந்தோடி வந்து என்மேல் ஒரு கூரிய அம்பைத் தொடுத்தான். அதனுல் என் வலி முற்றும் குன்றிப்போயிற்று. நான் உயிர் தப்பி இங்கு வந்ததே மிகவும் அரிதாய் விட்டது" என, நடந்தவற்றையெல்லாம் விரிவாய் உரைத்தது.

இதனைக்கேட்டதும் அவர், "ஆ! அம்மன்னவனுக்கு அவ்வளவு செருக்கா! அவனை இப்போதே அழித்து விடுகிறேன் பார்" என அளவற்ற கோபத்துடன் வெப்பமாய்ப் பெருமூச்சு விட்டார். அவர் விட்ட மூச்சிலிருந்து இரண்டு பெண்கள் பிறந்தனர். அவர்கள் சந்திரனைப்போன்ற முகமும், துடிபோன்ற இடையும், பிடிபோன்ற நடையும், வண்டு போன்ற விழியும், கண்டுபோன்ற மொழியும் உடையவாய்ப் பேரழகுடன் விளங்கினர். அவ்விருவரையும் கண்டோரனைவரும், "அவர்கள் திருமகளும் கலைமகளுமே யாவார்" என மொழிந்தனர். ஆயினும், அவர்கள் விசுவாமித்திர முனிவர் கொண்ட கோபம் காரணமாய்த் தோன்றினவர்களன்ருே! அதனுல் "கோபம் சண்டாளம்" என்றபடி, அவர்கள் இழிகுலத்துப் பெண்களாய்க் கறுத்தமேனியுடன் விளங்கினர். உடனே விசுவாமித்திர முனிவர் அப்பெண்மணிகளிருவருக்

கும் பலவகை இனிய பாடல்களைக் கற்பித்தனர். அவர்கள் அவற்றை நன்றாய்ப் பயின்று, குயிலினும் இனிய தமது குரலால் அழகாய்ப்பாடினார்கள். அவர் அவற்றைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர்.

பின்பு அவர் அப்பெண் மணிகளை நோக்கி, "வேல் விழியீர்! நீங்களிருவரும் அரிச்சந்திர மன்னனை யணுகிக் குழலினுமினிய உங்கள் குரலை யெடுத்துப் பாடுங்கள். அவன் அகமகிழ்ச்சியடைந்து, உங்களுக்கென்ன வேண்டு மெனக் கேட்பான். அப்போது நீங்கள் அம்மன்னவனது வெண் கொற்றக் குடையைக் கேளுங்கள். அவன் அதனைத் தர மறுத்தால், அவனை மணந்து வாருங்கள். இவ்விரண்டி லொன்றை விரைவில் நிறைவேற்றுதல் உங்கள் கடமையாம். இனிச் சிறிதும் தாமதியாமல் இப்போதே அவனிடம் செல்லுங்கள்" எனக் கட்டளை புரிந்தார்.

உடனே அப்பெண்மணிகளிருவரும் பூங்கொடி அசைவதுபோல் நடந்துசென்று அரிச்சந்திரனை யணுகி,

"காவியங் கண்ணு மூடா கவிதழ் தாளுங் கோடா ;
வாவியங் கமல மன்ன வதனமு நுதலு மேரு ;
ஆவியர் தோகை நல்லார் சுவரின்மே லெழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப் பாடினர் உருக யாரும்."

என்றபடி, அங்குள்ளாரனைவரும் மனமுருகிக் களிக்கும் வண்ணம் மிக்க இனிமையாய்ப் பாடினர். அவற்றைக்கேட்டு அரிச்சந்திரனும் அவனைச் சூழ்ந்திருந்தவர்களும் அளவற்ற களிப்படைந்தனர். பின்பு அரிச்சந்திரன் அப்பெண்மணிகளுக்கு வேண்டிய ஆடையணிகளைக் கொடுக்கும்படி தனது ஏவலாட்களுக்குக் கட்டளையிட்டான். அப்போதப்பெண்கள், "மலர்த்தார் மன்னரே! நாங்கள் இவ்வாடை யணிகளை விரும்பி உம்மிடம் வரவில்லை. உமது வெண்கொற்றக் குடையை விரும்பி வந்தோம். இரவலர் விரும்பியவற்றை

யளித்தலே உம்மைப் போன்ற சிறந்த வள்ளல்களுக்குத் தகுதியாம். ஆதலால் அருள் கூர்ந்து அதனைத் தந்தருள வேண்டும்'' என்றனர். அப்போது அரிச்சந்திரன் இன்னது சொல்வதெனத் தெரியாது சிறிது திகைத்தான். பின்பு அவன் "பூங்குழலீர்! நீங்கள் கேட்கும் குடை சூரிய வமிசத்து மன்னவன் வழி வழி வருவதொன்றும்; ஆதலால் அதனைத் தர முடியாமை கருதி நான் மிகவும் வருந்துகிறேன். அதனை யொழித்து வேறு எதையேனுங் கேளுங்கள். அதனை யிப்போதே தடையின்றித் தருகிறேன்'' என்றான்.

பிறகு அப்பெண்கள் அவ்வேந்தனை நோக்கி, "திண் தோள் வேந்தரே! நாங்கள் உமது வெண்கொற்றக் குடையின்மேல் மிகவும் ஆவலாய் வந்தோம்; அதனைத் தாங்கள் மறுத்துவிட்டீர். எங்களை மணம் புரிந்து கொண்டாயினும் எங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுகிறோம். இனித் தாங்கள் செய்யவேண்டுவது அஃதொன்றேயாம்'' என்றனர். அப்போது, அவ்வேந்தன் அருகிலிருந்த அமைச்சன், "கயல் விழியீர்! இழிகுலத்துப் பெண்களாகிய நீங்கள், அரசனை மணக்க விரும்புதல் சற்றும் அடாது. இது 'முடவன் கொம்புத் தேனுக்காசைப்படுவது' போலாம்'' என மொழிந்தனன்.

அதன்மேல் அப்பெண்கள், "மாநில மன்னரே! நீர் பெருந்தகையாளரெனக் கருதி உம்மிடம் வந்தோம். இரப் பவர்க்கீயாத கல்நெஞ்சம் படைத்த வஞ்சகரென வறிந்தால், நாங்கள் உம்மிடம் வந்திரோம்'' என அம்மன்னவனை இகழ்ந்தனர். அதனைச் செவியுற்ற வமைச்சன் அப்பெண் களை வெருட்டி யோட்டும்படி தனது அருகிலுள்ள ஏவ

வாளர்களுக்குக் கட்டளையிட்டான். ஏவலாட்கள் அவ்வாறே அவர்களை யணுகி வெருட்டத் தொடங்கினர். உடனே அவர்கள் புலியைக்கண்ட மானைப்போல் நடுநடுங்கி யோடினர். அப்போது அவர்கள் கூந்தல் குலைந்தது; இடை துவண்டது; கண்கள் சுழன்றன; கைகால்கள் நடுங்கின. இவ்வித அலங்கோலத்துடன் அவர்கள் விசுவாமித்திரரிடஞ் சென்று நடந்தவற்றை மொழிந்தனர்.

இவற்றைக் கேட்டதும் விசுவாமித்திரர் அளவற்ற கோபங் கொண்டனர். உடனே அவர், "அரிச்சந்திரனை யிப்போதே அழித்து விடுகிறேன்" எனத் தமதிருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் சிறிது தூரத்தில் வருவதை அரிச்சந்திரன் கண்டான். கண்டதும், உடனே விரைந்து சென்று அவரை வணங்கி, "அடிகாள்! தாங்கள் எளியேன் மீது கருணைகூர்ந்து இவ்வளவு தூரம் வரக் காரணமென்ன?" என வினவினன்.

அதற்கு அம்முனிவர், "ஆ! அரிச்சந்திரா! உன் கேள்வி மிகவும் நன்றாயிருக்கிறது. நீ பார்வைக்கு நல்லவன்போல் தோன்றுகிறாய். ஆனால் உன் செயல்கள் மிகவும் கொடியவையா யிருக்கின்றன. நீ செய்த குற்றங்களைச் சொல்கிறேன். முறையாய்க் கேள்.

"மாவினைத் துணிசெய்தாய்; கேழலுக்
கிடர்செய்தாய்; வான ளாவும்
காவினைப் பொடிசெய்தாய்; நீதியா
லீன்றவென் காதல் மக்கள்
பாவினைப் பழிசெய்தாய்; தீவினைக்
குரியதோர் பாவி நீதான்
ஆவினற் றேல்பொதிர் தடிபுலித்
தொழில்செய்தாய் அழகி தென்றான்."

எனலும், அரிச்சந்திரன் மிக்க நடுக்கத்துடன், "நான்மறை யாளரே! முனிதல் வேண்டா. விலங்கு, பறவை, பன்றி முதலியவைகளையும் மாதர்களையும் தாங்கள் ஏவினீரென்பதை நான் சிறிது மறியேன்; அறிந்திருந்தால் அத்தகைய தீங்கினை நானொருபோதும் புரியேன். என தறியாமையால் செய்த இத்தீங்கைப் பொறுத்தருளல் வேண்டும்.

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே"

என்றபடி, பிழைகளைப் புரிதல் எம்போன்ற சிறியோர் செய்கையாம். அவற்றைப் பொறுத்தல் நும்போன்ற பெரியோர் கடமையாம்" எனப் பல இனிய மொழிகளால் அவரை வேண்டினான்.

அதற்கு விசுவாமித்திரர், "நீ செய்த குற்றங்கள் பொறுக்கத் தக்கனவல்ல. ஆயினும், இப்பெண்களிருவரை யும் நீ மணம் புரிந்துகொள். அப்போது தான் உன் பிழைகளை நான் மன்னிப்பேன்" என்றார். அதற்கு அரிச்சந்திரன் "முக்குறும் பெறிந்த முனிவரே! இழிகுலத்துப் பெண்களை மன்னவர் மணத்தல் தகுமோ? அன்றியும் நான் முன்பே ஒருத்தியை மணந்திருக்கிறேன். இனி வேறொருத்தியை மணப்பதும் தகுதியல்ல. எம்மைப் போன்ற அறிவிலிகள் ஒருகால் அவ்வாறு செய்யத் துணிந்தால், அதனைத் தம்மைப் போன்ற பெரியார் தடுத்தல் வேண்டும். அதற்குமாறாய்த் தாங்களே யிவ்வாறு கட்டளை யிடுதல் தகாது" என்றான்.

பின்பு விசுவாமித்திரர், "வேந்தனே! உன் குலத்தின்

மேன்மையை நீதான் வியக்க வேண்டும். * வசிஷ்டர் சாபத்தால் உன் தந்தையாகிய திரிசங்கு மன்னவன் புலையனானதை நீ அறியாய்போலும். அத்தகைய புலையன் வயிற்றில் பிறந்த நீயும் புலையனே யன்றோ! ஆதலால், நீ இவர்களை மணத்தல் முற்றும் தகும்" என மொழிந்தனர். மீண்டும் அரிச்சந்திரன், "சுவாமி! எனது தந்தைக்கு நேர்ந்த புலைமையை யொழித்த தாங்கள், இப்போது என்னைப் புலையனாக்கக் கருதுதல் என்ன காரணமோ அறியேன்" என்றான். அதற்கு விசுவாமித்திரர் உன் தந்தையின் புலைமையைப் போக்கிய வெனக்கு உன்னைப் புனிதனாக்குதல் அருமையல்ல. ஆதலால் என் சொல்லுக் கிணங்கி இம்மங்கையரை மணந்து கொள்" என மீண்டும் வற்புறுத்தினர்.

அப்போது அரிச்சந்திரன், "முனிவர் தலைவரே, தாங்கள் என்ன சொன்னாலும் நானிதற்கு ஒருபோதும் உடன்படேன்" எனப் பிடிவாதமாய்ச் சொன்னான். அதன்

---

* ஒரு காலத்தில் அரிச்சந்திரன் தந்தையாகிய திரிசங்கு மன்னவன் தன் சரீரத்தோடே விண்ணுலகமடையக் கருதி அதனைத் தன் குருவாகிய வசிஷ்டருக் கறிவித்தான். அதற்கு அவர், "அது முடியாத காரியம்; வேண்டுமானால் இங்கேயே உயிர் துறந்து விண்ணுலகெய்தலாம்" என்றனர். பின்பு அவ்வேந்தன், "சுவாமி! இது தங்களால் முடியாவிட்டால், அவ்வாறு செய்ய வல்லவரைக் கொண்டு நான் என் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறேன்" என்றான். உடனே வசிஷ்டர் கோபங்கொண்டு 'நீ உன் ஆசாரியனை விட்டு வேறு ஒருவரைத் தேட விரும்புவதால், நீ புலையனாக' எனச் சபித்தனர். அக்கணமே திரிசங்கு மன்னவன் புலையனானான். அவன் ஒருநாள் விசுவாமித்திரரை யணுகித் தன் வரலாறு முற்றும் தெரிவித்தான். பின்பு விசுவாமித்திரர் தமது தவவலிமையால் அவ்வேந்தன் புலைமையை யொழித்து அவனை உடலோடே சுவர்க்கம் புகுத்தின ரென்பதாம்.

மேல் விசுவாமித்திரர், "ஆனால் நானுன்னை யிப்போதே சபிப் பேன்" எனப் பயமுறுத்தினர். அதற்கு அம்மன்னவன் சிறிதும் அஞ்சாது பொறுமையுடன், "கலைக்கடல் கடந்த பெரியீர்! உமது சாபத்தை யேற்றுக்கொள்ள தயாராயிருக்கிறேன். அதனை யிப்போதே யருள்க" என இரந்து தலை வணங்கி நின்றான். இவற்றை யெல்லாங் கண்ட விசுவாமித்திரர் அரிச்சந்திரனைத் தமக்குள் பெரிதும் வியந்து கோபமுள்ளவர்போல் நடித்து, "மணிமுடி மன்னவ! புலைப்பெண்களை மணம் புரிந்துகொள்ளலாகாதென, நீ என் சொல்லை மறுத்துரைக்கின்றாய். நான் எவ்வளவு சொல்லியும் நீ அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால், நீ ஒரு புலையனுக்கே அடிமைப் படுவாய்" என மொழிந்தனர்.

---

10. அத்தியாயம்

அரிச்சந்திரன் நாடுநகர மிழத்தல்

அரிச்சந்திரன் மீண்டும் விசுவாமித்திரரை வணங்கி, "முனிவர் முதல்வரே! தாங்களிட்ட சாபத்தை நான் மனமுவந்து பெற்றுக்கொண்டேன், 'கடல் கொதித்தால் அதை விளாவத் தண்ணீருண்டா?' அதுபோல் தங்களைப் போன்ற பெரியார் கோபித்தால் அதைத்தடுப்பவர் யார்? எனக்குத் தாயுந் தந்தையும் தெய்வமும் தாங்களேயாவீர். தாங்கள் என்ன செய்தாலும் அதனை நான் விருப்புடன் ஏற்றுக்கொள்வேன்" என மொழிந்தான். அதற்கு விசுவாமித்திரர் "ஆகா! நீ மிகவும் தந்திரமுள்ளவன். தாயென்றும் தந்தையென்றும் இனிய சொற்களைச் சொல்லி, என்னை யேய்க்கப் பார்க்கின்றாய். உன்னைப்போன்ற வஞ்சகர்களை நானிதுகாறுங் கண்டதில்லை. இவ்வளவிற்கும் காரணம் உன் செல்

வச் செருக்கேயாம்" எனப் பகர்ந்தார். அதற்கு அரிச்சந்திரன், "முனிவரே! தாங்கள் என்னை அவ்வாறு ஒருபோதும் எண்ணலாகாது. நான் இவ்வரசாட்சியை ஒரு சுமையாகவே கருதுகிறேன். தங்களைப்போன்ற பெரியார் யாரேனும் ஒப்புக்கொண்டால் நான் என் அரசாட்சியை இப்போதே ஒப்புவித்து விடுவேன். ஆனால், இழிகுலப் பெண்களை மணப்பதற்கு நானொருபோதும் உடன்படேன்" என்றனன்.

அதைக்கேட்ட விசுவாமித்திரர் அளவற்ற மகிழ்ச்சியுடன், "ஆ அரிச்சந்திரா! நீ சொல்வது விந்தையா யிருக்கிறது. நீ சொன்னபடி உன் அரசாட்சியை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை இப்போதே எனக்குக் கொடுத்துவிடு பார்ப்போம்" என வினவினர். அதற்கு அம்மன்னவன், "மறை முதல்வரே! அதனை அவ்வாறே தந்தேன்; அன்புடன் பெற்றுக்கொள்ளுங்கள்" என மொழிந்து தனது நாட்டை அவருக்கு வழங்கியதற் கடையாளமாய்த் தன் கணையாழியையும், அளித்தான். விசுவாமித்திரர் அதனைப் பெற்றுக்கொண்டு "வாட்படை மன்ன! நீ சொன்னசொல் தவறாதவன் என்பதை நான் நன்கறிவேன். இனி உன் நாடு நகரம் முற்றும் என்னுடையனவேயாம். நிற்க, என் வேள்வியின்பொருட்டு பெரும் பொருளளிப்பதாய் முன்பு நீ ஒப்புக்கொண்டா யல்லவா? அதனை இப்போதே அளித்துவிடு" என்றார். அதற்கு அக்காவலன், "கல்வி கேள்விகளில் வல்லீர்! முன்பு நான் அதனை ஒப்புக்கொண்டது உண்மையே. ஆனால் என் நாடு நகரம் முற்றும் உமக்கு வழங்கிவிட்டேன். உமக்களிப்பதாய்க்கூறிய பொருளுடன் யானை, தேர், குதிரை, காலாள் முதலியவனைத்தும் உமக்கே உரிமையாய் விட்டன. இனித்

தங்களை யறியாமல் என்னிடம் வேறு பொருள் இல்லை. இது தங்களுக்குத் தெரியாத தல்லவே" என்ருன்.

பின்பு விசுவாமித்திரர், "அரிச்சந்திரா! நீ மொழிவது மிகவும் விந்தையா யிருக்கிறது. நீ எனக்கு நாட்டை வழங்கியபோது அப்பொருளையும் சேர்த்துச் சொன்னுயா? இல்லையே. ஆதலால் அதனை நீ தனியாய்த் தருவதே நியாயம். சூரியகுல வேந்தர்கள் சொன்ன சொல் வழுவார். அப்படிப்பட்ட தன்மை உன்னிடம் இல்லைபோல் தோற்றுகிறது" என்றனர். அதனைக் கேட்டு அரிச்சந்திரன் மிகவும் நாணித் தலை குனிந்தான். பின்பு அவன், "மறைவாணரே! என் முன்னேர்க்குப் பழிப்பை யுண்டாக்க நான் ஒருபோதும் விரும்பேன். தாங்கள் விரும்பியபடியே அப்பொருளைத் தேடித் தருகிறேன். அதனை இத்தனை நாட்களில் உமக்குத் தர வேண்டுமென்பதைத் தெரிவியுங்கள். அருள்கூர்ந்து என்னுடன் ஓராளையும் அனுப்புங்கள். தாங்கள் குறிப்பிட்ட தவணைக்குள் அதனை உமக்குத் தந்தனுப்புகிறேன்" என்ருன்.

அதற்கு விசுவாமித்திரர், "ஆ! அரிச்சந்திரா! நன்ருய்ச் சொன்னுய்,

"ஊரு நாடுநீள் மலைகளுங் கானமு முழன்றே
யாரு ஞேடிமுப் புண்பவர்; அவதியார் இடுவார்?
சோர முள்ளநீ கூறுமப் பொருள்தனைச் சொரிந்து
பேர டாவுனைத் தடுத்தனன் போகலை—"

எனக் கொதித்துச் சொன்னர். பின்பு அரிச்சந்திரன் மீண்டும் அவரைப் பலவாறு வேண்டினன். அதன்மேல் அவர் சிறிது மனமிரங்கி, "மன்னனே! நீ எனக்குக் கொடுக்க வேண்டிய பொருளை நாற்பத்தெட்டு நாட்களுக்குள் கொடுத்துவிடு. எனக்கு வழங்கிய நாட்டிலிருந்து நீ அதனைப்

பெற்றுத்தருதல் தகாது. என் நாட்டிற்கு அப்பாற்சென்று அதனைத் தேடித் தருதலே முறையாம்" என்றனர். அரிச்சந்திரன் அவ்வாறே ஒப்புக்கொண்டான். மீண்டும் விசுவாமித்திரர் "செங்கோல் வேந்தே! நீ சொன்ன சொல் தவறுமல் உனது நாட்டை எனக்கு வழங்கினுய். ஆனல் உன் அரண்மனை உத்தியோகஸ்தர்களும் உன் குடிமக்களும் என்னைத் தமது தலைவனுக ஏற்றுக் கொள்வார்களாவென நான் ஐயமுறுகிறேன். ஆதலால், நீ நேரில்வந்து அவர்களனைவரும் அறியும்படி உன்னரசாட்சியை எனக்கு ஒப்பித்துச்செல்" என்றனர். அரிச்சந்திரன் அவ்வாறே அவருடன் தனது நகரத்திற்குச் சென்று தனதரசாட்சியை ஒப்புவித்தான்.

அப்போது அம்மன்னவன் நாட்டிலுள்ள குடிகளனைவரும் பலவாறு வருந்தினர். அதனை விசுவாமித்திரர் கண்டு "வேந்தே! உனது பிரிவைப் பொறுமல் உனது குடிகள் மிகவும் கலங்குகின்றனர். அவர்கள் பிரிவைக் கருதி நீயும் புலம்புகின்ருய். இப்போததானென்ன ? என் பெண்களை மட்டும் மணம்புரிந்துகொள். உன் அரசாட்சியை உனக்கே கொடுத்து விடுகிறேன்" என்றனர். அதற்கு அவ்வேந்தன் "சுவாமி! நான் முதலில் மறுத்த பெண்களை மீண்டும் மணம் புரிந்து கொள்ளேன். தங்களுக்குத்தந்த அரசாட்சியையும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அவ்வாறு செய்தால், நான் சத்தியம் தவறினவனுவேன்" என மறுத்து விட்டான்.

பின்பு அம்முனிவர், "ஆகா இம்மன்னவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன் ; எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமானவன் ; இவனைப் பொய்யனுக்கல் எளிய காரியமல்ல" எனத் தமக்குள் பலவாறெண்ணி வருந்தினர்.

அதன் பிறகு அவர் அப்பார்த்திபனை நோக்கி "வேந்தே! நீ இக்கணமே என் நாட்டைவிட்டுச் செல். இனி ஒரு விநாடியும் இங்கே தங்குதல் தகாது" எனக் கடுகடுத்துக் கூறினர். அதற்கு அக்காவலன் "சுவாமி! அவ்வாறே செல்கிறேன். அருள் கூர்ந்து ஓராளை என்னுடன் அனுப்புங்கள். தாங்கள் குறிப்பிட்ட நாட்களுக்குள் தங்கள் பணத்தைக் கொடுத்தனுப்புகிறேன்" என்றான்.

உடனே விசுவாமித்திரர் சுக்கிர பகவானை நினைத்தார். அவர் ஒரு வேதியர் வடிவத்துடன் அவர் சமீபத்தில் வந்து நின்றார். விசுவாமித்திரர் அவரைத் தனியா யழைத்துச் சென்று, "அசுர குருவே! நீ அரிச்சந்திரனைப் பலவிதமாய்த் துன்புறுத்தி எப்படியாயினும் இவனிடமிருந்து ஒரு பொய்ம்மொழியை வரவழைக்க வழிதேடு. குறிப்பிட்ட நாட்களுக்குள் அவன் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடாவிட்டால், நீ நேராய் இங்கு வந்துவிடு. ஒருகால் அவன் அதன்படி கொடுத்துவிட்டால், நீ அவனுடன் சென்றதற்காகக் கூலி கேள். அம்மன்னவனிடம் எள்ளளவும் இரக்கம் பாராட்டாதே," என மொழிந்து அவனை அம்மன்னவனுடன் அனுப்பினர்.

பின்பு அரிச்சந்திரன், தன் மனைவி சந்திரமதியையும் தன் மகன் தேவதாசனையும் அழைத்துக்கொண்டு வேற்றாருக்குப் போகப் புறப்பட்டான். அப்போது சுக்கிரனும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்.

11. அத்தியாயம்

அரிச்சந்திரன் கானகமடைதல்

அரிச்சந்திரன் தன் நாட்டை விட்டுப் புறப்பட்டதைக் கண்டு அவன் குடிமக்கள் பலவாறு புலம்பலானுர்கள். அவ் வேந்தன் அவர்களுக்கெல்லாம் தேறுதல் சொல்லிச் சரயு நதியை யணுகினுன். அங்கே அவனுடன் சென்ற மந்திரித் தலைவர், படைத்தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்க ளெல் லாம் அவனை விட்டு விலகலானுர். ஆனுல் சத்தியகீர்த்தி யென்றும் அமைச்சன் மாத்திரம் அம்மன்னவன் நிழல் போல் அவனை விடாது தொடர்ந்து சென்முன். பின்பு அவர்களனைவரும் ஒரு பாலை வனத்தை யடைந்தனர். அப் பாலை வனத்தின் வெப்பம் மிகவும் கொடுமையா யிருந்தது. அவர்கள் அதில் செல்ல மிகவும் வருந்தினர். தேவதாசனைச் சத்தியகீர்த்தி தன் தோளில் தூக்கிச் சென்முன். சந்திரமதி படும் பாட்டைக் கண்டு அரிச்சந்திரன் மிகவும் வருந்தினுன். அத்தருணம் அவர்களுக்கு அதிக கொடுமையை உண்டாக்க விசுவாமித்திரர் கருதினுர். அதனுலவர் தமது தவவன்மையால் அப்பாலை நிலத்தில் பலவித விஷஜந்துக்களைப் படைத்தார். உடனே,

“ பட்டமரம் மேடுசுழி பாறைவழி யெல்லாம்
அட்டையொடு முட்டைமிசை யாடரவு மொய்ப்பக்
கட்டரவு தேளரணை கண்டுவிட மெங்கும்
மட்டற நெருங்கியடி வைக்கவிட மில்லை.”

“ நடந்தவடி யுட்புறம்ந விந்திடுமெ றும்பர்
அடர்ந்துபல பூரமுடன் அட்டைகள்க டிக்கும்
தொடர்ந்துபல வாளரவு சுற்றியடி நீண்டும்
கடந்தக லிறும்பலக ருங்குளவி கொட்டும்,”

என்றபடி, பலவிதக் கொடிய பிராணிகள் அப்பாலை நில மெங்கும் நிரம்பிவிட்டன. மூடர்களுடைய சினத்தழல்

போல் எரிந்துகொண்டிருந்த அப்பாலை நிலத்தில் நடந்த தனல் அரிச்சந்திரன் முதலானவர்களுடைய பாதங்களில் கொப்புளங்கிளம்பின. 'வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல்', அக்கொடிய பிராணிகள் அக்கொப்புளங்களின் மேல் கடித்தன. அதனால் அவர்கள் அளவிட முடியாத வேதனை யடைந்தனர்.

பின்பு அவர்களனைவரும் மிக்க வருத்தத்துடன் அப் பாலை வனத்தைக் கடந்து, கோமதி யாற்றங் கரையிலுள்ள ஓரழகிய சோலையை யணுகினர். அரிச்சந்திரன் முதலான வர்கள் படுந் துன்பத்தைக் காண மனம் பொறாதவன்போல் உடனே சூரியன் மறைந்தான். நாள் முழுவதும் ஓயாமல் வேலை செய்த மாடுகளெல்லாம் தொழுவம்போ யடைந்தன. பாடசாலைச் சிறுவர்களெல்லாம் தத்தம் வீடுபோய்ச் சேர்ந் தனர். பறவைகள் மரக்கிளைகளிலும், பொந்துகளிலும் போய்த் தங்கின. சிறிது நேரங் கழிந்ததும், தீயவருள்ளம் போல் அக்கானக மெங்கும் பேரிருள் மூடிக்கொண்டது. உடனே ஆந்தை, வௌவால், கோட்டான் முதலிய பறவை கள் கள்வர்களைப்போல் வெளிப்படலாயின.

பின்பு சத்தியகீர்த்தி தான் நடந்து வந்த வருத்தத்தை யும் பொருட்படுத்தாமல், அச்சோலையிலுள்ள இனிய பழங் கள் பலவற்றைப் பறித்துவந்து அரிச்சந்திரனிட மளித் தான். அம்மன்னவன் அவைகளில் சிறந்தவைகளை ஆராய்ந் தெடுத்துச் சுக்கிரன் முன் வைத்து, 'சுவாமி! இவற் றைப் புசித்துக் களைப்பாறுங்கள்" எனப் பணிவாய்ப் பகர்ந் தான். உடனே சுக்கிரன் அளவற்ற சீற்றத்துடன், "ஆ! அரிச்சந்திரா! இக் காய் கனிகள் யாருக்கு வேண்டும்? நான் தயிர், பால், நெய் முதலியவற்றோடு சோற்றை யுண்டு வளர்ந்தவன்; உன்னைப்போல் இவற்றைப் புசித்தவனல்லன்!"

என மொழிந்தனன். பின்பு சந்திரமதியும், சத்தியகீர்த்தியும் அவனைப் பலவாறு வேண்டினர். அதனாலவன் ஒருவாறு சினந்தணிந்து அவற்றைப் புசித்தான். அதன் பிறகு அரிச்சந்திரன் முதலானோர் மிகுந்த காய் கனிகளை யுண்டு நீர் பருகி, அக் கோமதி யாற்றங்கரையிலேயே கண்ணுறங்கலானர்.

அன்று நடு இராத்திரியாயிற்று. உலகம் முழுதும் உறங்கிக் கிடந்தது. அக்கானகத்திலுள்ள மரஞ் செடிகளும் உறங்குவதுபோல் அசைவற்றிருந்தன. எங்கும் பேரிருள் மூடிக்கொண்டிருந்தது. அரிச்சந்திரன் முதலானோர் வழி நடந்த இளைப்பால் அயர்ந்து தூங்கலாயினர்.

கல்லினும் வலிய நெஞ்சம்படைத்த விசுவாமித்திரர் மீண்டும் அவர்களை வருத்தக் கருதினர். உடனே அவர் மேகங்களை நோக்கி, "முகில் கணங்காள்! அரிச்சந்திரன் தன் மனைவி மக்களுடன் கோமதி யாற்றங் கரையில் இருக்கிறான். நீங்கள் விரைந்து சென்று அவனை வருத்தி வாருங்கள்" என ஏவினர். உடனே ஆகாய முழுதும் இருண்டு போயிற்று. ஒரு நக்ஷத்திரமேனும் கண்ணுக்குப் புலப்படவில்லை. குளிர்ந்த காற்று ஜில்லென்று வீசினது. திருமாலின் அழகிய திருமேனிபோல் ஆகாயமெங்கும் மேகங்கள் கறுத்து விளங்கின. அவர் சக்கரத்தின் ஒளிபோல் மின்னல் மின்னின. அவர் சங்கத்தின் ஓசையைப்போல் இடி இடித்தன. அவர் வில்லிலிருந்து புறப்படும் கணைகளைப்போல் இடை விடாமல் பெருமழை பெய்தது.

அயர்ந்துறங்கிய அரிச்சந்திரன் முதலானோர் திடீரென விழித்துக் கொண்டனர் அவர்களணிந்திருந்த ஆடைகளனைத்தும் நன்றாய் நனைந்து போயின. குளிரின் மிகுதியால் அவர்கள் கைகால் நடுங்கின. உடனே, அரிச்சந்திரன் கன்னிகை யணுகி வேதியரே இம்மழை விரை

வில் விடாது. இவ்வாற்றில் வெள்ளம் வரு முன்பே நாம் அக்கரை யணுகித் தக்கவிடத்தில் போய்த் தங்குவோம். உடனே புறப்படுங்கள்" என்ருன். அப்போது சுக்கிரன் நாகப்பாம்பு தன் படத்தை விரித்துச் சீறுவதுபோல் சீறி விழுந்து "அறிவிலியே! யாது கூறிஞய்? நீ செல்லுமிடந்தோறும் நான் வரவேண்டிய காரணமில்லை. நீ தரவேண்டிய பொருளை இப்போதே கொடுத்துவிடு. நான் என்னிருப்பிடம் செல்கிறேன்" என்ருன்.

அதற்கு அரிச்சந்திரன், "மறையவரே! தாங்கள் எளியேன் மேல் இவ்வாறு கோபித்தல் தகுமோ! இக்கடுக்காட்டில் பொருள் எவ்வாறு கிடைக்கும்? நாங்கள் ஒரூர் போய்ச் சேர்ந்ததும் எவ்வாருயினும் தமது பொருளைத் தந்து விடுகிரேம். அது வரையில் மனம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என அடக்கமாய்க் கூறினன். அதன் பிறகு அவர்களனைவரும் அவ்வாற்றைக் கடந்து அப்பாற் போயினர். அத்தருணம் மழை நின்றுவிட்டது. உடனே அவர்கள் தாமணிந்திருந்த மெல்லிய ஆடைகளை யவிழ்த்து நன்ருய்ப் பிழிந்து, தமது கைகால் முதலிய அவயவங்களைத் துடைத்துப் போர்த்துக்கொண்டு ஒரு மரத்தினடியில் தங்கினர்.

அதன் பிறகு அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. 'மழை விட்டும் துவானம் விடவில்லை' என்றபடி, மரத்தின் இலைகளிலுள்ள நீர் சொட்டுச் சொட்டென வீழ்ந்து அவர்கள் உடலையும் உடையையும் மீண்டும் நனைக்கத் தொடங்கிற்று. மழை பெய்து விட்டமையால், காற்று மிகவும் குளிர்ச்சியாய் வீசினது. அதனல் அவர்களனைவரும்,

"ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளடங்கும் பாம்பென உயிர்க்கும்."

எளியவர்களைப்போல் குளிரின் மிகுதியால் மிகவும் வருந்த லானார்கள். ஐயோ பாவம்! அவர்கள் ஒருநாளும் இவ்விதத் துன்பம் அடைந்தவரல்லர்.

அத்தகைய பரிதாபமான நிலைமையைக் கண்டும், விசுவாமித்திரர் அவர்கள்பால் சிறிதும் இரக்கம் பாராட்டவில்லை. அந்தோ அவர் மனம் கல்லோ! கல்லினும் வலிய இரும்போ! அறியோம். அம்முனிவர் மீண்டும் அரிச்சந்திரனை வருத்தக் கருதிப் பல பேய்களை யேவினர். அப்பேய்களி னுடல் கொள்ளியைப்போல் கறுத்திருந்தன. அவைகளின் கைகால்கள் பனைமரங்களைப்போல் நீண்டு மெலிந்திருந்தன. மலைகளிலுள்ள பெரிய குகைகளைப்போல் அவைகளின் வாய்கள் காணப்பட்டன. அக்குகைகளிலிருந்து வெளிப்படும் பாம்புகளைப்போல் அவைகளின் நாக்குகள் நீண்டு தொங்கின. இளஞ் சந்திரனை இரண்டாய்ப் பிளந்து வைத்தாற்போல் அவ் வாய்களின் இருபுறத்தும் கோறைப்பற்கள் விளங்கின. அவைகளின் கண்கள் குழிழ்ந்தாழ்ந்து நெருப்புப் பந்துகளைப் போல் ஒளி வீசின. எவ்வளவு உண்டாலும் அவைகளின் பசி தணியாமையால், அவைகளின் உடல் மிகவும் இளைத் திருந்தன. அவைகளின் முதுகு மாக்கலத்தின் அடிப்புறம் போல் குவிந்திருந்தன. அவைகளின் முகங்கள் சிங்கம், புலி, குரங்கு, செந்நாய், பன்றி முதலிய விலங்குகளின் முகங்களை யொத்திருந்தன. அவையனைத்தும் ஒன்று சேர்ந்து அரிச் சந்திரனை யணுகின. உடனே அவைகளில் சில,

"ஐய வருந்தசை யானயில் வேன்; இச்
செய்ய வருந்தசை தின்குவன் யான்: இத்
தைய வருந்தசை தம்மின் எனக்(கு); இப்
பைய விளர்ந்தசை பற்கெளிது—."

எனப் பலவற்றை மொழிந்து இடிபோல் முழங்கி அவர்களை வெருட்டின. வேறு சில இவர்களை யிப்போதே அறையுங்கள் என்றன. மற்றுஞ் சில இவர்களைப் பிசைந்து இவர்களுதிரத்தைக் குடியுங்கள் என்றன இன்னுஞ் சில இவர்கள் குடலைப் பிடுங்கி மெல்லுங்கள் என்றன. பின்னுஞ் சில இவர்களை எடுத்து விழுங்கி ஏப்பமிடுங்கள் என்றன.

இவற்றை யெல்லாங் கண்டு, அரிச்சந்திரன் சிறிதும் கலங்கவில்லை. அவன் 'சத்தியமே ஜயம்' எனக் கருதிச் சும்மாவிருந்தான். சிறுவனாகிய தேவதாசன் மிகவு மஞ்சிக் கண்களை மூடித் தன் தாயை அணைத்துக்கொண்டான். சந்திரமதி முதலில் நடுங்கினாள். ஆயினும் தன் கணவன் அருகிலிருப்பதைக் கருதி அவள் ஒருவாறு தேறினாள். சத்தியகீர்த்தி 'இவையெல்லாம் விசுவாமித்திரர் வஞ்சனைச்செயலே' யெனக் கருதி வாளா விருந்தான். சுக்கிரன் மிகவும் பயப்படுகிறவனைப்போல் பாசாங்கு செய்து, "மதியற்ற மன்னா! நான் தெரியாமல் உன்னுடன் வந்தேன். பாலை நிலத்தில் படாத பாடு பட்டேன். கொடிய காட்டு மிருகங்களைக்கண்டு கலக்கமடைந்தேன். மழையில் நனைந்து வெய்யிலிலுலர்ந்து வருந்தினேன். இவ்வளவேயோ! வேளைச் சோறு வேளைக்கு உண்டா? இரவில் நல்ல தூக்கமுண்டா? அப்பப்பா! உன்னுடன் வந்து நான் அனுபவிக்கும் சுகம் போதும்! போதும்!" என அரிச்சந்திரனை நோக்கிக் கடுகடுத்துக் கூறினான். காட்டு விலங்குகள், பேய்கள் முதலியவற்றின் துன்பத்தை விடச் சுக்கிரன் துன்பமே அம்மன்னனுக்கு அதிகமாயிருந்தது.

சிறிதுநேரங் கழிந்தபின் அப்பேய்களெல்லாம் மறைந்து போயின. அரிச்சந்திரனுக்கு நேர்ந்த இடுக்கண்களை யொழிக்கக் கருதினவன் போல் சூரியன் உதித்தான். தடாகங்களி

உள்ள தாமரை மலர்கள் மலர்ந்தன. ஆம்பல், நெய்தல் முதலியன குவிந்தன. காக்கை, சேவல் முதலிய பறவைகள் ஒலித்தன. பெண்கள் வீடு வாசல்களைப் பெருக்கிச் சுத்தம் செய்யலானார்கள். வணிகர் தத்தம் வர்த்தக சாலைகளைத் திறந்து வியாபாரம் செய்யத் தொடங்கினர்.

---

12. அத்தியாயம்

சந்திரமதி காட்டுத்தீயைக் குளிர்வித்தல்

சூரியனுதித்ததும், அரிச்சந்திரன் முதலானோர் தமது காலைக்கடன்களை முடித்துக்கொண்டனர். பின்பு அவர்களனை வரும் அங்கு நின்று மகன்று கங்கைக்கரை யணுகினர். அக் கங்கையின் இரண்டு பக்கங்களிலும் பலவகை மரங்க ளடர்ந் திருந்தன. அம்மரங்களில் பலவகைப் பழங்களும் இனிய மணம் வீசும் பற்பல மலர்களும் நிரம்பியிருந்தன. அம்மரங் களினடியில் மயில்கள் தமது தோகையை விரித்து அழகாய் ஆடின. மரக்கிளைகளின்மேல் குயில் நாகணவாய் முதலிய பறவைகள் மிக்க இனிமையாய்க் கூவின.

அந்நதியின் இடையிடையே சிறு தீவுகளைப்போல் பல மணல் மேடுகள் விளங்கின. அம்மேடுகளின் மேல் நாரை, கொக்கு, உள்ளான் முதலிய பறவைகள் நிரம்பி யிருந்தன. வெள்ளிய பாம்புகள் பல வளைந்து செல்வது போல், கங்கை யின் அலைகள் கரையின் ஓரங்களில் வளைந்து ஓடின. நத்தை, சிறமீன், சிறுநண்டு, முதலியன அவ்வலைகளால் கரையில் ஒதுக்குண்டன. காக்கை, பருந்து முதலிய கொடிய பிராணி கள் சிறிதும் அருளின்றி அவற்றைப் பிடித்தருந்தின. செந் தாமரை, வெண்தாமரை முதலிய மலர்கள் அவ்வலை

களி னிடையிடையே அசைந்தன. அவை அசையுங் காட்சி கங்கை யென்னும் பெண் தனது அழகிய கைகளை நீட்டி அக்கொடிய பறவைகளைத் தடுப்பதை ஒத்திருந்தன. அந்நதியின் கரையில், பால் போன்ற வெண்ணிறமுள்ள அன்னப்பறவைகள் இளமங்கையரைப் போல மிகவும் அழகாய்த் திரிந்துகொண்டிருந்தன. அதன் இரு கரைகளிலும் பசும்புல் படர்ந்திருந்தது. புள்ளிமான், கலைமான், இரலைமான் முதலிய மிருகங்கள் அந்தப் புல்லை வயிறுாமேய்ந்து துள்ளிக்குதித்துக்கொண் டிருந்தன. இவ்வரிய காட்சிகளை யெல்லாம் அவர்க ளனைவரும் கண்டு களித்துக்கொண்டே சென்றனர். வழி நடப்பதால், அவர்களுக்குச் சிறிதாயினும் இளைப்புத் தோன்றவில்லை.

பிறகு அவர்களனைவரும் கங்கையில் நீராடினர். சிறிது நேரம் சென்றதும் சூரியன் மறைந்தது. அவர்களெல்லோரும் அங்குள்ள ஒரு சோலையில் தங்கி அன்றிரவைக் கழிக்கலானார்கள். உடனே இருள் மூடிக்கொண்டது. அவ்விருளில் மரமென்றும், செடியென்றும், மேடென்றும், பள்ளமென்றும் கண்டறிய முடியவில்லை. ஆகாயத்தில் ஆங்காங்கு ஒவ்வொரு நக்ஷத்திரம் தெரிந்தது. இலைகளின் அடர்த்தியால். அந்த நக்ஷத்திரங்களும் அரிச்சந்திரன் முதலானவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. புலி, சிங்கம், சிறுத்தை முதலிய கொடிய விலங்குகள் இடிபோல் முழங்கின. நரி, நாய், ஓநாய் முதலியன ஊளையிட்டன. ஆந்தை, வெளவால் முதலிய பறவைகள் தமது சிறகொலியை எழுப்பின. கொடிய பேய்களும் அப்பேரிருளில் தனித்துச்செல்ல அஞ்சின. வழிபறிப்போர், கொள்ளையடிப்போர், திருடர் முதலிய தீயவர்கள் மாத்திரம் அக்கரிய இருளைக்கண்டு மிகவும் களித்தனர்.

அன்று நடுராத்திரியில் விசுவாமித்திர முனிவர் சூழ்ச்சியால் சிங்கம், புலி, யானை, காட்டுப்பன்றி, செங்காடி, ஓநாய் முதலிய கொடிய விலங்குகள் அவர்கள் தங்கியிருந்தவிடத்தை யணுகின. அவைகளில் சிங்கம், புலி முதலியன அரிச்சந்திரன்மேல் சீறிப் பாய்ந்தன. யானை, செங்காடி முதலியன சந்திரமதியையும் ஓநாய், காட்டுப்பன்றி முதலியன தேவதாசனையும் பலவாறு பயமுறுத்தின. அரிச்சந்திரனும் சந்திரமதியும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சவில்லை. தேவதாசன் இளஞ் சிறுவனல்லவா? ஆதலால், அவன் மிகவும் வெருண்டு தன் தாய் தந்தையர்க்கு நடுவில் புகுந்து கொண்டான். அதனால் அவர்கள் சிறிது வருத்தமடைந்தனர். மந்திரியாகிய சத்தியகீர்த்தி அவர்களுக்குத் தேறுதல் சொன்னான். சுக்கிரன் அக்கொடிய விலங்குகளைக் கண்டு மிகவும் பயப்படுகிறவன்போல் பாசாங்கு செய்தான். சிறிதுநேரங் கழிந்தபின் அவையெல்லாம் மறைந்து போயின.

பின்பு சுக்கிரன் அரிச்சந்திரனை நோக்கி, "கழற்கால் வேந்தே! உன்னைப்போல் மதியற்றவர் இவ்வுலகில் ஒருவரும் இலர். இப்போதே உனக்குப் பலவிதத் துன்பங்கள் விளைகின்றன; இன்னும் பல துன்பங்கள் மேலும் மேலும் வருமெனத் தோற்றுகிறது. இக்கொடிய துன்பங்களை அனுபவிக்க வேண்டியவன் நீ மாத்திரமல்ல. ஐயோ பெண்பாலாகிய சந்திரமதி யாது செய்வாள்? பெண்ணென்றால் பேயும் இரங்குமல்லவா! இது மாத்திரமோ! இளஞ் சிறுவனாகிய தேவதாசனைக் கண்டும் உன் மனம் இளகவில்லையா? இவர்களிருவரும் கல்லிலும் முள்ளிலும் உன்னுடன் திரியத் தகுந்தவர்களா! அப்பப்பா! உன் மனம் கல்லோ! கல்லினும் வலிய இரும்போ! விசுவாமித்திர முனிவரை நான் நெடுநாளாய் அறிவேன். அவர் மிகவும் நல்லவர்; ஆனால், சிறிது

பிடிவாத குணம் உடையவர். அவர் விருப்பத்தின்படி நடந்து கொண்டால், அவர் தம் முயிரையும் கொடுப்பார். இப்போதாயினும், 'நான் என் நாட்டை உனக்குக் கொடுக்க வில்லை. அதனை எனக்குத் தந்தருளுங்கள்' என ஒரு சொல் சொல்லி நீ உன் நாட்டைப் பெற்றுக்கொள். அவரைக்கேட்ப தற்கு நீ சிறிது பின் வாங்குவதாய்த் தெரிகிறது; வேண்டு மானல், நானே அவரிடம் பேசி யேற்பாடு செய்கிறேன். உன் விருப்பத்தை உள்ளபடி என்னிடம் தெரிவி" எனத் தந்திரமாய்ச்சொன்னான்.

அதற்கு அரிச்சந்திரன், "மறைவல்லோய்! முதலில் ஒருவர்க்கு உரிமையாக வழங்கிய பொருளை நான் வழங்க வில்லையென மொழிவது தகுமோ! அது பெரும் பொய்யும், பாவமுமன்றோ! என் உயிரபோனலும் நானதற்கு ஒரு போதும் உடன்படேன்" எனப் பிடிவாதமாய்ச் சொன்னன். அதற்குச் சுக்கிரன், "நான் உன் நன்மையை நாடி இவ்வள வும் சொன்னேன். இனி உன்னிஷ்டம் போலவே நடந்து கொள். ஆனல் இன்னும் பல துன்பங்களை நீ அனுபவிக்க நேரும். இதனை மாத்திரம் நான் உனக்கு மீண்டும் சொல் கிறேன்." எனக் கூறினன்.

சிறிது நேரங் கழிந்ததும் சூரியன் உதித்தான். உடனே அவர்களெல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய் யமுன நதியை யணுகினர். அந்நதியில் நீர் அதிகமாகையால், அவர்களெல்லோரும் அதிலிறங்கி அக்கரை போய்ச் சேர்ந்து ஒரு பெருங்காட்டின் வழியாய்ச் சென்றனர். அவர்கள் அக் காட்டின் நடுவில் சென்றதும், விசுவாமித்திரர் சூழ்ச்சியால் அக்காடு பற்றி யெரியத் தொடங்கியது. எங்கும் புகை மூடிக் கொண்டது. மரங்களெல்லாம் 'படீர் படீர்' என வெடித்தன. புலி, சிங்கம், சிறுத்தை முதலிய விலங்குகள் தத்தம்

குட்டிகளை வாயில் கௌவிக்கொண்டு ஓடின. குரங்கு, அணில் முதலியவை கீச்சுக் கீச்சென ஒலித்துக் கொண்டே ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவி யோடின. காகம், கிளி, குயில் முதலிய பறவைகள் பேரிரைச்சலுடன் ஆகாயத்தில் உயரப் பறந்தன. அங்கும் நெருப்பின் அனல் வீசவே, அவை தமது சிறகுகள் தீய்ந்து கீழே வீழ்ந்திறந்தன. "மண்டெரி, தான் வாய் மடுப்பினும் மாசுணம் கண் துயில்வ, போர" என்றபடி, எளிதில் இடம்விட்டுப் பெயராத மலைப் பாம்புகளும் பெருமூச்சு விட்டுக்கொண்டு மெல்ல மெல்ல நகர்ந்து சென்றன. அவை அவ்வாறு செல்லுதல், அக்காட்டில் வெட்டுண்டு கிடந்த பனைமரங்கள் அசைந்து போவதைப்போல் இருந்தன. யானைகள் பிளிறு மோசையும், மான்கள் ஓடு மொலியும், பலவகைப் பறவைகள் கீச்சுக் கீச்சென்னும் ஓசையும் அக்கானக மெங்கும் நிரம்பியிருந்தன.

காற்றுக்கு 'அனற்சகாயன்' என ஒரு பெயருண்டல்லவா? அனற் சகாயனென்றால் நெருப்புக்கு உதவி செய்பவன் என்பது பொருள். அதற்குத் தகுதியாய்க் காற்றும் கடுமையாய் வீசத்தொடங்கினது. அதனால், நெருப்பு இன்னும் கடுமையாய்ப் பற்றி யெரியத் தலைப்பட்டது. நெருப்புக் கொழுந்து வளர்ந்து வளர்ந்து அக்காடு முழுதும் சூழ்ந்துகொண்டது. அக்கொழுந்தின் அனலால் மரக்கிளைகளின்மேல் படர்ந்திருந்த பூங்கொடிகள் பல துவண்டு போயின. சில மிருகங்களின் வால்கள் தீய்ந்தன. சில மிருகங்களின் கொம்புகள் கரிந்தன. சில மிருகங்களின் கால்கள் வெந்தன. எண்ணிறந்த பறவைகளும் மிருகங்களும் இறந்து போயின. அக்கானகம் முழுதும் சுறுநாற்றம்

வீசினது. மரங்களில் பல இலை, தழை முதலியனவின்றிக் கரிய தூண்களைப்போல் நின்றன. சூரியன் கதிர்கள் புக முடியாத அப்பெருங்காடு ஒரு நொடியில் ஒரு பெரிய வெளி யாய்விட்டது. மிக்க விரைவில் அக்கொடிய நெருப்பு அரிச்சந் திரன் முதலானவர்களையும் சூழ்ந்துகொண்டது. இன்னது செய்வதென அவர்களுக்குத் தோன்றவில்லை.

அப்போது சுக்கிரன் அரிச்சந்திரனை நோக்கி, "மலர்த் தார் மன்னனே! நான் சொல்வதைக்கேள். நீதி நெறி தவறாத வேந்தனொருவன் இந் நெருப்பில் வீழ்ந்து உயிர் துறந்தால் உடனே இது தணிந்துவிடும். இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை" என்றான். அதற்கு அரிச்சந்திரன், "அந்தணரே! இதனைத் தாங்கள் முன்பே எனக்குத் தெரிவியாமல் போனீரே! ஐயோ! எத்தனையோ மிருகங்களும் பறவை களும் இறந்து போயினவே. அவைகளின் உயிரைவிட என் னுயிர் அவ்வளவு சிறந்ததா! இதோ இப்பொழுதே நான் என்னுயிரை யளிக்கிறேன்." என அந்நெருப்பில் விழப் போனான்.

அப்போது சத்தியகீர்த்தி அவனைத் தடுத்து, "வேந்தர் வேந்தரே! மன்னவர்களுக்கு வந்த துன்பம் மந்திரிமார் களுக்குரியதாம். ஆதலால், தாங்கள் இருங்கள். நான் போய் அந்நெருப்பில் விழுகிறேன்" என்றான். உடனே சந்திரமதி, "நாயகரே! நீராயினும் நமது மந்திரியாயினும் நெருப்பில் விழவேண்டா. 'குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணு தல்' என்பது நீதி மொழியன்றோ! அதன்படி, துன்பம் வந்த காலத்தில் தமது கணவரைக் காத்தல் கற்புடைய பெண்கள் கடமையாம். தாங்கள் இந்நெருப்பில் வீழ்ந்து உயிர் துறந்தால், நான் தங்களைப் பிரிந்து ஒரு நிமிஷமும் வாழேன். நானே இதோ விழுகிறேன்" எனச் சொல்லித்

தன் கணவனைத் துதித்துக்கொண்டே அத்தீயில் திடீரெனப் பாய்ந்தாள். ஆகா! என்ன அதிசயம்!! அவள் கூந்தலில் முடித்த மலர்களில் ஒன்றாயினும் கருகவில்லை அவளணிந்திருந்த ஆடையில் சிறிதாயினும் தீப்பற்றவில்லை. அவள் உடலின் நிறம் எள்ளளவும் மாறவில்லை செந்தாமரை மலரின் நடுவில் விளங்கும் திருமகளைப்போல், அவள் அந்நெருப்பின் நடுவில் விளங்கினள். அவள் கற்புக்கஞ்சி நெருப்பு உடனே தணிந்தது. பின்பு அரிச்சந்திரன் முதலானோர் சந்திரமதியைப் புகழ்ந்தனர். சுக்கிரன், "ஆ! அவர்கள் நற்குணமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்கள். விசுவாமித்திரன் இவர்களை வெல்லுதல் எளிதல்ல" என்றெண்ணிச் சும்மாவிருந்தான்.

---

13. அத்தியாயம்.

அரிச்சந்திரன் தன் மனைவியையும் மகனையும் விற்றல்

அதன் பிறகு அரிச்சந்திரன் முதலானோர் அக்காட்டிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் பல குன்றுகளையும், மலைகளையும் நதிகளையும் காடுகளையும் கடந்து காசி நகரமடைந்தனர். அவர்களனைவரும் ஆங்காங்குள்ள காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டே போய், ஒரு பெரிய ஆலமர நிழலில் உட்கார்ந்தனர். உடனே சுக்கிரன், "வேந்தே! காசிமாநகரம் சேர்ந்ததும், முனிவர்க்குச் சேரவேண்டிய பொருள் முற்றும் செலுத்துவதாய் மொழிந்தனையன்றோ? நீ இங்கு வந்து அதிக நேரமாய்விட்டதே; ஏன் இன்னும் சும்மாவிருக்கிறாய். அப்பொருளை இங்கே செலுத்திவிட்டுத்தான் அப்புறம் போகவேண்டும்" எனக் கடுகடுத்துக் கூறினன். அப்

போது அரிச்சந்திரன் இன்னது செய்வதெனத் தோன்றாமல் திகைத்து வருந்தினான்.

உடனே அவன் மனைவி, "நாயகரே! தாங்களேன் வீணாய் வருந்துகிறீர். நம்மிடம் ஒரு காசுமில்லையென்பதை இவ்வேதியரும், விசுவாமித்திர முனிவரும் நன்றாயறிவார். அப்படியிருந்தும், அவர்கள் நம்மை மேலும் மேலும் வருத்துகின்றனர். நாமும் அவர்களுக்குச் சொன்ன பொருளைக் கொடுத்தேயாகவேண்டும். ஆதலால், இனிப் பலவற்றை யோசித்துப் பயனில்லை. என்னையும் நமது புதல்வனையும் விற்று முனிவர்க்குச் சேரவேண்டிய பொருளைச் செலுத்துங்கள்" என்றாள்.

அதற்கு அரிச்சந்திரன், "வேல்விழியாய்! நானிக் கொடுமொழியைக் கேட்கவோ உடலெடுத்தேன். ஐயோ! தமது மனைவி மக்களை விற்றுக் கடன் தீர்த்தவர் இதுவரையில் யாராயினுமுண்டோ! இப்பெரும்பழி என்னை ஒரு போதும் விட்டு நீங்காதே. இதற்கு நான் என்ன செய்வேன்!" எனப் பலவற்றைச் சொல்லி 'இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்புபோல்' வருந்தினான். அப்போது சந்திரமதி, "தடந்தோள் மன்னரே!

> "பொய்யாமை யன்ன புகழில்லை ; எய்யாமை
> எல்லா அறமும் தரும்."

என்றபடி இளமையில் புகழையும் மறுமையில் வீடுபேற்றையும் அளிக்கவல்லது சத்தியமொன்றேயாம்; மனைவி மக்களல்லர். ஆதலால், பலவற்றை யோசிப்பதில் பயனில்லை. எங்களை இப்போதே விலை கூறுங்கள்" என்றாள். வேறு வழியில்லாமையால், அரிச்சந்திரன் மிக்க வருத்தத்துடன் அதற்குட்பட்டனன். பின்பு அவன் தன் மனைவியையும் புதல்வ

னையும் அழைத்துக்கொண்டு காசிநகரில் பெருஞ் செல்வர்கள் வாழும் வீதியை யடைந்தான். சத்தியகீர்த்தியும், சுக்கிரனும் அவனைப் பின் தொடர்ந்து போயினர்.

பின்பு அரிச்சந்திரன் தன் மனைவியின் தலையிலும், தன் மகன் தலையிலும் பசும்புல்லை வைத்து அவர்களை விலைகூறத் தொடங்கினன். அப்போது அம்மன்னவனுக்குண்டான கவலைக்கும் நாணத்திற்கும் அளவே யில்லை. ஆயினும் என்ன செய்வான்? அவர்கள் எளிய நிலைமையைக் கண்டு அந்நகரிலுள்ள மாந்தர்களில் பலர் வருந்தலாயினர். ஐயோ! இவன் உயர்ந்த நிலைமையி லிருந்தவன்போல் தோற்றுகிறான். யாது காரணம் பற்றியோ தன் மனைவியையும் மகனையும் விற்கிறான். இது கொடிது! கொடிது!" என்றார் சிலர். "மனைவி மக்களை விற்றுக் கடன் தீர்த்தவர் இதுவரையில் ஒருவருமிலர். இவனே சத்தியவான்" என்றார் வேறு சிலர், "திருமகள் போல் விளங்கும் இம்மாதும் பேரழகு பொருந்திய இவ்விளஞ் சிறுவனும் என்ன வேலை செய்வார்? ஆதலால், இவர்களைப் பணங் கொடுத்து வாங்குதல் வீண் வேலையே யாகும்" என்றார் மற்றும் சிலர். "விதியின் வலியே வலி, அதனை வெல்ல யாரால் முடியும். தேவர்களும் விதியின் வலியால் துன்ப மடைந்தனர். அது எளிய மானிடரை விட்டு விடுமோ" என்றார் மேலும் சிலர். ஆனால், இரும்பினும் வலிய நெஞ்சம் படைத்த சுக்கிரன் மாத்திரம் சிறிதும் இரங்கவில்லை.

இவர்களிவ்வாறாக அரிச்சந்திரன், சந்திரமதி முதலானோர் எதிரில் ஒரு வேதியர் வந்தார். அவர் மார்பில் மின்னலைப்போல் பூணூல் விளங்கினது. அவர் தமது நெற்றியில் திருநீறும், கழுத்தில் உருத்திராக்கமும் அணிந்திருந்தனர். அவர் உடுத்திருந்த ஆடை மலரைப் போல்

வெள்ளையாயும் மென்மையாயு மிருந்தது. அவர் பேர் காலகண்டர். அவர் அரிச்சந்திரனருகில் வந்து, "அப்பா! நீ யார்? இவர்கள் யார்? இவர்களை எங்கே அழைத்துக் கொண்டு போகிறாய்?" என ஒன்றும் அறியாதவர்போல் கேட்டார். அதற்கு அரிச்சந்திரன், "சுவாமி! இவர்க ளிருவரும் என் மனைவியும் புதல்வனு மாவார். ஒரு முனிவருக்கு நான் கடன் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு நானிவர்களை விற்கிறேன்" என்றான். அப்படியானால், "நீ விரும்பிய பொருளை நான் தருகிறேன். இவர்களை எனக்குக் கொடுப்பாயா?" என அவர் வினவினார்.

அவ்வாறே அரிச்சந்திரன் ஒப்புக்கொண்டான். பின்பு அம்மறையவர் அரிச்சந்திரனிடம் விலைச் சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு அவனுக்கு வேண்டிய தொகையைக் கொடுத்தனர். அம்மன்னவன் அதனைச் சுக்கிரனிடம் கொடுத்து விட்டான். சந்திரமதியும் தேவதாசனும் அரிச்சந்திரனை விட்டுப் பிரிய மனமில்லாமல் ஓவென்றழுதனர். அவர்களழுவதைக் கண்டு அரிச்சந்திரனும் வாய் விட்டுப் புலம்பினான். அவர்களனைவரையும் சத்தியகீர்த்தி சமாதானப் படுத்தினான். அதற்குள் காலகண்டர் சிறிதாயினும் அருளின்றி "அடா அடிமைப்பயலே! ஏனடா வீணையழுகிறாய்; வாடா என் வீட்டிற்கு" எனத் தேவதாசனை யதட்டி யழைத்தார். ஐயோ பாவம்! அவ்விளைஞன் மிகவும் பயந்து போனான். உடனே சந்திரமதியும் தேவதாசனும் காலகண்டர் வீடு போய்ச் சேர்ந்தனர். பின்பு அவர் அவர்களிருவரையும் பலவாறு வருத்தி வேலை வாங்கி வந்தனர்

14. அத்தியாயம்

அரிச்சந்திரன் வீரவாகுவிற்கு அடிமைப்படல்

அரிச்சந்திரன் விசுவாமித்திர முனிவருக்குச் சேரவேண்டிய பொருளைச் சுக்கிரனிடம் செலுத்திய பின், "சுவாமி! நான் தங்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தேன். வெய்யிலிலும் மழையிலும் என்னுடன் திரிந்து மிகவும் இளைத்துப் போனீர். இதன் பொருட்டு என்னை மன்னிக்கும்படி தங்களை வேண்டுகிறேன்" எனப் பல இனிய மொழிகளை மொழிந்தான். அப்போது சுக்கிரன், "அரிச்சந்திரா! 'வாய் வாழைப் பழம் கை கருணைக்கிழங்கு' என்னும் பழமொழியின்படி, நீ ஒரு சிறு காசுங் கொடாவிட்டாலும் மிகவும் இனிமையாய்ப் பேசுகிறாய். உன்னைப் போன்ற தந்திரசாலிகளை நான் இதுவரையில் கண்டதில்லை. இத்தனை நாள் நான் உன்னுடன் திரிந்து இப்போது வெறுங்கையோடு திரும்பிப் போவதா? என் மனைவி மக்கள் என் வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன்? ஆதலால், என் கஷ்டத்திற்குத் தகுந்த கூலியைக் கொடு" என்றான்.

பின்பு அரிச்சந்திரன் அவ்வாறே ஒப்புக்கொண்டு தன் மந்திரியை நோக்கி, "மதிவல்லோய்! இவ்வேதியர் கேட்பது நியாயமே. இத்தனை நாளாய் இவர் நம்முடன் திரிந்தார். இப்போது நாம் இவரைச் சும்மா அனுப்புதல் தகுதியல்ல. ஆனால் நம்மிடம் ஒரு காசுமில்லை. இனி என்னை விற்றாயினும் இவர்க்குக் கூலியைக் கொடுத்தனுப்பு" என்றான். அப்போது சத்தியகீர்த்தி மிகவும் கலங்கி "மன்னரே! தாங்கள் இதுவரையில் என்னை அன்போடு ஆதரித்து வந்தீர். அந்த

மையை நானிப்போது தீர்க்க நினைக்கிறேன். ஆதலால், என்னை விற்று இவர்க்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுங்கள்." என்றான். அதற்கு அரிச்சந்திரன், "மந்திரி! நீ சொல்வது முறைமையல்ல. நான் கொடுக்கவேண்டிய கடனுக்கு உன்னை விற்பது தகாது. இனி என் சொல்லைத் தட்டாதே; இப்போதே என்னை வில்" என்றான்.

சத்தியகீர்த்திக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. சிறிது நேரம் வரையில் அவன் பலவற்றை யெண்ணிக் கலங்கினான். பின்பு அவன் ஒருவாறு தேறி, அரிச்சந்திரன் தலைமேல் புல்லை வைத்து அவனை விற்கத் தொடங்கினான். அப்போது வெட்டியான் ஒருவன் அவர்களை யணுகினான். அவன் உடல் இருளைப்போல் கறுத்திருந்தது. அவன் மார்பு அகன்றும் தோள்கள் திரண்டுமிருந்தன. அவன் தன் நெற்றியிலும் மார்பிலும் விபூதியைக் குழைத்துப் பட்டை பட்டையாய்ப் பூசியிருந்தான். அவன் கள்ளை வெறிக்கக் குடித்துத் தாறுமாறாய்ப் பலவகைப் பாடல்களைப் பாடினான். அவன் மேல் புலால் நாற்றம் வீசினது. அவன் தன் தோளின்மேல் ஒரு காவடியைச் சுமந்து வந்தான். அக்காவடியில் பசுவின் இறைச்சி நிரம்பியிருந்தது. அவன் பேர் வீரவாகு. அவன் அவர்களை யணுகினதும், தான் சுமந்து வந்த காவடியை ஒருபுறத்தி லிறக்கினான்.

பின்பு அவன் சற்றுத்தூரத்தில் நின்று சத்தியகீர்த்தியை நோக்கி, "ஐயா! எனக்கு ஓராள் தேவையாயிருக்கிறது. என் போன்றவர்களுக்கு இவரை விற்பாயோ? விற்பதானால், நீ விரும்பிய பொருளை இப்போதே தருகிறேன்" என்றான். சத்தியகீர்த்தி அவ்வாறே ஒப்புக்கொண்டான். உடனே வீரவாகு சத்தியகீர்த்தி கேட்ட பொருளைக் கொடுத்து அரிச்சந்திரனை வாங்கிக்கொண்டான். சத்திய

கீர்த்தி அப்பொருளைச் சுக்கிரனுக்குக் கொடுத்தான். பின்பு சுக்கிரன் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

அதன் பிறகு சத்தியகீர்த்தி மிக்க வருத்தத்துடன் தன் னாசனை விட்டுப் பிரிந்தான். வீரவாகு அரிச்சந்திரனை வாங் கினதும், தான் சுமந்து வந்த காவடியை அம்மன்னவனைத் தூக்கிக்கொள்ளச் சொன்னன். அவன் மறுமொழி பேசா மல் அதனைத் தன் தோளில் தூக்கிக் கொண்டான். வீரவாகு முன்னும் அரிச்சந்திரன் பின்னுமாக நடந்துபோய், ஒரு புலைச்சேரி யடைந்தனர். அங்கே பல பழைய குடிசைகள் வரிசை வரிசையா யிருந்தன. அவைகளின் அருகில் வெள் ளெலும்புகளும் தோல் துண்டுகளும் குவியல் குவியலாய்க் கிடந்தன. சில விடங்களில் பச்சைத் தோல்களை உலர வைத்திருந்தனர். அவைகளின் மேல் ஈக்களும் கொசுக் களும் மொய்த்துக் கொண்டிருந்தன. சில தோல்களை நாய்கள் கடித்திழுத்துச் சென்றன. சிலவற்றைப் பருந்துகள் அடித் துக் கொண்டு போயின. சில சிறுவர்கள் தமது கைகளில் சிறிய தோல்களைப் பிடித்து அவைகளைத் துரத்திக்கொண் டிருந்தனர். இறைச்சியை வதக்கல், மயிரைத் தீய்த்தல் முதலிய தீ நாற்றம் அங்கே நிரம்பியிருந்தது. அங்குள்ளவர் களில் சிலர் பறை, தப்பட்டை, முதலியவற்றை முழக்கிக் கொண்டிருந்தனர். சிலர் உடுக்கை, பம்பை முதலியவற்றை யடித்துக்கொண்டு மாரியம்மனைப் பூசித்துக் கொண்டிருந் தனர். சிலர் கள்ளைக் குடித்து மயங்கிக் கிடந்தனர்.

அவர்களிருவரும் அச்சேரியை யடைந்ததும், ஒரு குடிசைக்குள் நுழைந்தனர். அக்குடிசையின் எதிரில் முறம், துடைப்பம் முதலியன கிடந்தன. அதனுள் பழைய பானை

களும் பழைய துணிகளும் நிரம்பியிருந்தன. அழுக்குப் பாய் ஒன்று தரைமேல் போடப்பட்டிருந்தது. வீரவாகு அப் பாய்மேல் உட்கார்ந்தான். அரிச்சந்திரன் தான் சுமந்து சென்ற காவடியை ஒரு பக்கத்திலிறக்கி வீரவாகுவின் எதிரில் நின்றான். அப்போது வீரவாகு அவ்வேந்தனை நோக்கி, “அடிமையாள! அதோ தெரிகிற அந்தச் சோலை யைப்பார். அதன் அருகில் ஒரு சுடலையுண்டு. அங்கே பல பிணங்கள் வரும். அப்பிணங்களுக்கு உரியவர் கால்பணமும் முழத்துண்டும் வாய்க்கரிசியும் கொடுப்பார். அவைகளில் முழத்துண்டையும் காற்பணத்தையும் எனக்குக் கொடு. வாய்க்கரிசியை மாத்திரம் நீ யெடுத்துக்கொள். இரவும் பக லும் நீ அங்கேயே இரு. சிறிது ஏமாந்தால், பிணங்களைத் திருட்டுத்தனமாய்ச் சுட்டுவிட்டுப் போய்விடுவார். ஆதலால் மிகவும் கருத்தாய் இருக்கவேண்டும்” எனச் சொன்னான். அரிச்சந்திரன் அவ்வாறே ஒப்புக்கொண்டு அச்சுடலைபோய்ச் சேர்ந்தான்.

பின்பு அரிச்சந்திரன் அங்கே வெந்துகிடந்த கொள்ளி களையும், பாடைக் கொம்புகளையும், ஓலைகளையும் கொண்டு ஒரு சிறு குடிசை கட்டி அதில் தங்கி அம்மயானத்தைக் காத்து வந்தான். சில நாள் சென்றதும், அம்மன்னவன் பிரிவைப் பொறுமல் சந்திரமதி அவனைத் தேடி வந்தடைந்தான். அவர்களிருவரும் தமக்குக் கிடைத்த வாய்க்கரிசியைத் தூய் மையாக்கி யுண்டு காலங் கழித்து வந்தனர்.

15. அத்தியாயம்

தேவதாசனைப் பாம்பு தீண்டல்

அரிச்சந்திரன் செய்தி இவ்வாருக, இனிச் சந்திரமதியைப்பற்றிக் கவனிப்போம். அவள் காலகண்டர் வீட்டிற்குச் சென்றதும், அங்குப் பல வேலைகளைச் செய்பலானுள். அவ்வேதியர் வீட்டை மெழுகல், கோலமிடல், மாட்டுக்கொட்டிலைச் சுத்தம் செய்தல், நெல் குற்றல், சாணி தட்டல் முதலியவற்றை அவள் நாள்தோறும் செய்துவருவாள். காலை நாலுமணி முதல் பத்துமணி வரையில் அவளுக்கு வேலை ஒழியாமல் இருக்கும். தேவதாசன் நாள்தோறும் மாடுமேய்த்தல், வயல் காத்தல் முதலிய வேலைகளைச் செய்வான். இவர்களிருவரும் எளிய கூழையே உண்டு வந்தனர். அதுவும் அவர்களுக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை. அன்றியும், அவர்களிருவரையும் காலகண்டரும் அவர் மனைவியும் படாத பாடுபடுத்தி வந்தனர். அம்மறையவரும் அவர் மனைவியும் சந்திரமதியை வாயில் வந்தபடி பலவாறு பழிப்பார்; தேவதாசனைப் பிரம்பால் அடிப்பார். ஐயோ பாவம்! அச்சிறுவன் இரவில் உறங்கும்போதும் காலகண்டர் தன்னை யடிப்பது போல் கனவு கண்டு நடுநடுங்குவானுனல், அவர்கள் கொடுமையை நாமென்னவென்று சொல்லலாம்.

இவ்வாறு சிலநாட்கள் சென்றன. பின்பு ஒருநாள் காலகண்டர் தேவதாசனை யழைத்து " அடா அடிமைப் பயலே! நமது அண்டையிலுள்ள சிறுவர்களெல்லாம் மாவிலை, சமித்து தர்ப்பைப்புல் முதலியவற்றைக் கொண்டுவரக் காட்டிற்குச் செல்கின்றனர். நீயும் இன்று அவர்களுடன் சென்று ஒரு வாரத்திற்கு உதவும்படி அவைகளை அதிகமாய்க் கொண்டுவா. சுமைக்குப் பயந்து கொஞ்சமாய்க் கொண்டுவராதே. அப்ப

டிக் கொண்டுவந்தால் உன் முதுகு பிளந்துபோம். அவர்களுடன் ஆடிப் பாடித் திரியாதே. உன் வேலை முடிந்ததும் வீடுவந்து சேர். நீ இங்குச் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. விரைவில் போய்வா" எனச் சொல்லி யனுப்பினர். உடனே அவன் அவ்வாறே சென்றனன்.

அவன் செல்லும்போது அவனுடன் சென்ற பிராமணச் சிறுவர்கள் அவன் வடிவழகையும், இளம் பருவத்திலேயே அவனுக்கமைந்துள்ள உயர் குணங்களையும் கண்டு வியந்தனர். பின்பு அவர்களில் ஒருவன் தேவதாசனை நோக்கி, "அப்பா! நீ யார்? உற்று நோக்கினால் உயர்ந்த நிலைமையிலிருந்தவன்போல் காணப்படுகிறாய். அடிமையா யிருப்பதற்கு நீ சிறிதும் தக்கவனல்ல. ஐயோ உனக்கு இப்படிப் பட்ட இழிவு நேரக் காரணமென்ன?" என வினவினான். அதற்கு அவ்விளைஞன் தனக்கும் தன் பெற்றோர்க்கும் விசுவாமித்திர முனிவரால் நேர்ந்த தீங்குகள் எல்லாவற்றையும் எடுத்துரைத்தான். அதைக் கேட்டு அவர்களனைவரும்,

"ஒருநா யகமா யோட வுலகுட னண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையி லேபிச்சை தாம்கொள்வர்."

எனப் பொய்யா மொழியார் சொன்னது தவறுமோ? அதற்கு நீங்களே திருஷ்டாந்தம் போலும்" எனக் கூறி மிகவும் வருந்தினர்.

இவ்வாறு பேசிக்கொண்டே அவர்களெல்லோரும் காட்டிற்குள் நுழைந்தனர். அங்கே அவர்கள் தமக்கு வேண்டிய தர்ப்பை, சமித்து முதலியவற்றைச் சுமையாகக் கட்டிக் கொண்டனர். பிறகு தேவதாசனுக்கும் அவர்களே அவற்றைப் பறித்துச் சுமையாகக் கட்டி அவன் தலைமேல் வைத்

தனர். தேவதாசனுக்கு அச்சுமை போதாதெனத் தோற்றி யது. அதனாலவன் பார்ப்பனச் சிறுவரை நோக்கி, "நண்பர்களே! இது மிகவும் சிறிய சுமை; காலகண்டர் விறகு முதலியவற்றைச் சுமார் ஒருவாரத்திற் குதவும்படி கொண்டுவரச் சொன்னார். நான் இச்சிறு சுமையைக் கொண்டுபோனால், அவர் என்னை யடிப்பார். ஆதலால், நான் அதோ தெரிகிற தர்ப்பையைப் பறித்து வருகிறேன். நீங்கள் இங்கேயே சிறிது நில்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டே அந்தத் தருப்பையை அறுக்கப் போனான்.

அங்கே தருப்பைப்புல் மிகவும் அடர்ந்து செழித்து வளர்ந்திருந்தது. அதனடியில் ஒரு பெரும் புற்றிருந்தது. அப்புற்றில் ஒரு கொடிய நாகம் கிடந்தது. தேவதாசன் அங்குச் சென்றதும், அக்கொடிய பாம்பு தனது படத்தை விரித்து விடப்பல் தோன்ற 'புஸ்' எனச் சீறி அவனைக் கடித்தது. உடனே தேவதாசன் ஓவெனக் கூவி நடுநடுங்கிக் கீழே விழுந்தான். சற்றுத் தூரத்திலிருந்த அந்தணச் சிறுவரனைவரும் அவன் கூக்குரலைக்கேட்டு உடனே அங்கு விரைந்தோடினர். தேவதாசன் தன்னைப் பாம்பு கடித்ததெனச் சொல்லி முடிக்கு முன்பே அவன் பற்கள் கிட்டிக்கொண்டன. கண்கள் இமைக்காமல் நின்றன. கை கால்கள் மரம்போல் அசைவற்றிருந்தன. இரண்டொரு நிமிஷத்தில் மார்பு துடிப்பும் சுவாசமும் அடங்கிவிட்டன. அச்சிறுவரெல்லாரும் அவன் பரிதாப நிலைமையைக் கண்டு மனம் பொறுமல் ஓவெனக் கதறி யழுதனர். யார் எவ்வளவு அழுதாலும் என்ன பயன்? "ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவாரோ?" பின்பு அவர்கள் ஒருவாறு தேறித் தேவதாசன் உடலைத் தழைகளால் மூடிப் பத்திரப்படுத்தித் தமதிருப்பிடம்

சென்றனர். சிறிது நேரத்திற் சூரியன் மறைந்தான். எங்கும் பேரிருள் மூடிக்கொண்டது.

இஃதிவ்வாறாக, சந்திரமதி வழக்கம்போல் அன்று பகல் முழுதும் வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து நெல்லைக் குற்றினாள். ஒரு நிமிஷமாயினும் அவளுக்கு ஒழிவே யில்லை. அவள் கஷ்டத்திற்குத் தகுந்த உணவு அவளுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவள் உடல் மிகவும் மெலிந்து விட்டது. கிடைத்தமட்டில் திருப்தி யடைபவளாதலால், அவளுக்கு அது வருத்தமாகத் தோற்றவில்லை. ஆயினும், காட்டிற்குப் போன தன் மகன் இன்னும் வந்திலனே யென்னும் கவலைமட்டும் அன்று அவளுக்கு இருந்தது. பொழுது போகப்போக அவள் கவலை மிகவும் அதிகரிக்கத் தொடங்கிற்று. அதனாலவள் வீட்டிற்குள் போவாள் மீண்டும் வெளியே வருவாள்; வாசலில் சிறிதுநேரம் நின்று தன் மைந்தன் வரும் வழியை மிக்க ஆவலுடன் எதிர்பார்ப்பாள்; காலகண்டி கண்டால் கோபிப்பாள் என்று பயந்து மீண்டும் உள்ளே போவாள்; சிறிது நேரத்தில் மறுபடியும் முன் போலவே வந்து நிற்பாள். தன் புதல்வனுக்கு ஒருவிதத் தீங்கும் நேராதிருக்கத் தன் கணவனைப் பலவாறு தனக்குள் தொழுவாள்.

இவள் இவ்வாறு துன்பப்பட்டுக்கொண் டிருந்தாள். அப்போது காட்டுக்குப் போய்வந்த பார்ப்பனச் சிறுவர்களில் சிலர் அவளையணுகி, "அம்மா! உன் மகனை ஒரு நாகம் கடித்தது; அதனாலவன் உயிர் துறந்தான். அவனுடலைத் தழைகளால் மறைத்து ஓர் ஆலமரத்தின் கீழே கிடத்தி விட்டு வந்தோம்" என மொழிந்து அவ்வாலமா மிருக்கு மிடத்தையும் விளங்கச் சொல்லினர். 'உகிற் சுற்றின்மேல் உலக்கை வீழ்ந்தாற் போல்' இக்கொடுமொழிகள் அவள்

கொண்ட துன்பத்தை மிகவும் அதிகப்படுத்தின. அதனு லவள்,

"பாவியேன் மகனே யென்பள்; பதைப்பள்; மென் முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி யேங்கி
ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடல மொத்தாள்."

என்றபடி, தனது கைகளால் முகத்தில் மோதி யடித்துக் கொண்டு, "ஆ! என் கண்மணி! எனது தீவினையை என்ன வென்று சொல்வேன். பாவியாகிய என்னை மணம் புரிந்த தால் உன் தந்தை தமது அரசாட்சியை இழந்தார். என்னை யும் விட்டுப் பிரிந்தார். அவர் இன்னவிடத்திலிருக்கிறார் என்பதும் தெரியவில்லை. உன் முகத்தைக் கண்டல்லவோ நான் அத்துன்பத்தை ஒருவாறு மறந்திருந்தேன். ஐயோ! உன்னையு மிழந்தேனே! இனி நான் என்ன செய்வேன்! எவ்வாறு உயிர் வாழ்வேன்!" எனப் பலவற்றைச் சொல்லிக் கன்றையிழந்த பசுவைப் போல் கதறி யழுதாள்.

---

16. அத்தியாயம்

சந்திரமதி தேவதாசனை அடக்கஞ்செய்ய முயலலும் அரிச்சந்திரனைச் சந்தித்தலும்

சந்திரமதி பின்பு ஒருவாறு தேறித் தன் எஜமானனுகிய காலகண்டனை யணுகி, "சுவாமி! என் மைந்தனுகிய தேவ தாசன் தங்கள் கட்டளையின்படி காட்டிற்குச் சென்முன். அங்கே அவன் தருப்பை பறிக்கும்போது ஒரு நாகம் அவனைக் கடித்துக் கொன்றதாம்" என அவள் சொல்லி முடிக்கு முன்பே அவ்வேதியன், "அடி பாவி! அடி பாவி!! என்ன சொன்னுய்! என்ன சொன்னுய்!! உன் மகன்

இறந்துபோய் விட்டானு! ஐயோ! ஐயோ!! என் பணம் எல்லாம் பாழாய்ப் போய்விட்டனவே!" என மொழிந்து வருந்தினுன். பின்பு அவள், "சுவாமி! இறந்து போன என் மைந்தனை நான் சுடலையில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அருள் கூர்ந்து எனக்கு உத்தரவு தாருங்கள்" என மெல்லிய குரலால் வேண்டினள். அதற்கு அக்கொடியவன், "பெண்ணே! நீ சொல்வது மிகவும் விந்தையா யிருக்கிறது. அடிமைப் பையனுக்குத் தாய் ஏது? தந்தையேது? அன்றியும், அவனிறந்தமை எனக்கல்லவோ நஷ்டம். என் பணமெல்லாம் பாழாய்ப் போயினவே யென நான் வருந்துகிறேன். நீ யேன் வீணுய் வருந்த வேண்டும். நீ போய் உன் வேலைகளைக் கவனி. என் வேலைகளை விட உன் மகன் உயர்ந்தவ னல்லன்" எனக் கடுகடுத்துக் கூறினுன். அப்பெண்மணி மீண்டும் அவரை வணங்கி, "சுவாமி! இன்று யான் செய்ய வேண்டிய வேலைகள் யாவும் முடிந்துவிட்டன. தயவுசெய்து உத்தரவு தாருங்கள். நான் மிக்க விரைவில் வந்து சேர்கிறேன்" என வேண்டினுள்.

பின்பு அவ்வேதியன், "பெண்ணே! நீ போனுல் மீண்டும் எப்போது வருவாய்? பொழுது விடியுமுன்பே மாட்டுத் தொழுவத்திலுள்ள சாணத்தை அப்புறப்படுத்த வேண்டும். வீடுவாசலைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். வீட்டுப் பாத்திரங்களைத் துலக்கவேண்டும். இவற்றை யெல்லாம் செய்யக் காலகண்டியால் முடியுமா? அவள் செய்வதா யிருந்தால் உன்னையேன் வாங்குகிறேன்?" ஒன்றுக்கும் உதவாத உன்னையும் உன் மகனையும் நான் அதிக விலை கொடுத்து வாங்கினேன். உங்களை வாங்கி இன்னும் நாலு நாளாகவில்லையே. இதற்குள்ளாகவே அந்தச் சோம்பேறிப் பையன் என்னை மோசஞ்செய்துவிட்டான். ஐயோ! இனி நான்

என்ன செய்வேன்? இந்த அநியாயம் எங்கே அடுக்கும்?" எனப் பல கொடுஞ் சொற்களைச் சொன்னான். அவள் மீண்டும், "சுவாமி! நான் இப்போதே சென்று என் மகனைச் சுடலையில் வைத்து விட்டுக் காலந்தவறாமல் வந்து விடுகிறேன். வழக்கம்போல் என் வேலைகளையும் செய்கிறேன். காலகண்டி அம்மாளுக்கு அந்த வருத்தத்தை நான் ஒருபோதும் கொடேன்." என மிகப் பணிவாய்க் கேட்டுக் கொண்டாள். அவள் பேசிய இனிய மொழிகளால் அவ்வேதியர் மனம் சிறிது இளகியது. அதனால் அவர், "சந்திரமதி! நீ சொன்ன படி இப்போதே சென்று விரைவில் வந்துவிடு. காலங்கடந்து வந்தால் நீ பெரும் பொய்யள் என்று எல்லோருக்குஞ் சொல்லி உன்னை அவமானப் படுத்துவேன்" எனக் கூறினார். அதற்கவள், "சுவாமி! நான் தங்களுக்கு அவ்வளவு வருத்தம் தரமாட்டேன். உடனே வந்து விடுகிறேன்" என மொழிந்து அங்கிருந்து புறப்பட்டாள்.

அவள் புறப்படும்போது ஊர் அடங்கிவிட்டது. நாய்களின் குரைப்பும் ஊர்க்காவலர் பறையொலியுந் தவிர வேறு எவ்வித அரவமும் கேட்கவில்லை. எங்கும் பேரிருளா யிருந்தது. தன் மகன்மேலுள்ள காதலின் மிகுதியால், அவளுக்கு அப்போது அச்சம் தோன்றவில்லை. அவள் கடுகி நடந்து காட்டை யடைந்தனள். அக்காட்டிலுள்ள முட்செடிகள் அவள் உடலைப் புண்படுத்தின. பாறகற்கள் அவள் பாதத்தினுறுத்தின. மிக்க வருத்தத்துடன் அவள் பற்பல விடங்களில் தன் மகனைத் தேடினாள். கடைசியில், அந்தணச் சிறுவர்கள் சொன்ன ஆலமரம் அவள் கண்ணுக்குப் பட்டது. உடனே அவள் விரைந்து சென்று அந்த ஆலமரத்தினடியில் தன் மகனுடலைக் கண்டனள். கண்டதும், ஆகாயத்திலுள்ள

மேகமும் மின்னலும் தரையின்மேல் விழுந்தாற்போல் தன் கூந்தல் குலையும்படி அவள் தன் மகன் மேல் விழுந்து,

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அநியா யவெங்கண் அரவால் இறந்த
அதிபாவம் என்கொல்? அறியேன்;
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியா ரைநம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே.

நிறையோ சைபெற்ற பறையோ சையற்று
நிரையாய் நிறைந்த கழுகின்
சிறையோ சையுற்ற செடியூ டிறக்க
விதியா ரிழைத்த செயலோ!
மறையோன் இறக்க வளநா டனைத்தும்
வழுவா தளித்த வடிவேல்
இறையோன் அளித்த மகனே! உனக்கும்
இதுவோ விதித்த விதியே.

"அப்பா! மகனே! சிறிது காலம் நாம் விசுவாமித்திர முனிவர் சூழ்ச்சியால் துன்பப்பட்டாலும், 'சத்தியமே ஜயம்' என்றபடி, முடிவில் நாமே வெற்றியடைவோம். உடனே உனக்கு இளவரசு முடிசூட்டிக் கண்குளிரக் கண்டு களிப்போம் என எண்ணியிருந்தேன். ஐயையோ! என் எண்ணம் பாழாய் விட்டதே. நிற்க, உன் தந்தையானவர் நம்மை மீட்க மிக்க விரைவில் வருவாரென் றெண்ணுகிறேன். அப்போதவர், 'என் மகன் எங்கே?' என வினவினல் நானவருக்கு என்ன பதில் உரைப்பேன்?" எனப் பலவற்றைச் சொல்லிக் கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகத் தேம்பித் தேம்பி யழுதாள். அவளெப்படி யழுதாலும் அங்கே அவளை யேனென்று கேட்பார் ஒருவருமிலர். பின்பு அவள் ஒரு

வாறு தேறி, "இனிக் காலம் தாழ்க்கலாகாது. பொழுது விடியுமுன் வீடுபோய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால் கால கண்டர் கோபித்துக் கொள்வார்" எனக் கருதித் தன்மகனை யெடுத்துத் தோள் மேல் சாத்திக்கொண்டு சுடலையை நாடிப் புறப்பட்டாள். அக்காட்டை விட்டுச் சிறிது தூரம் வந்ததும் மயானம் தோன்றியது.

"பிணங்கள்சுடும் கடும்புலையர் அரவத் தாலும்,
    பிளர்ந்ததலை வெடித்திடுபேர் அமலை யாலும்,
திணங்கறுகிச் சுறுநாறும் முடையி னாலும்,
    நெடுங்கனலின் கொழுந்தெழுந்த சிவப்பி னாலும்,
கணங்கள்மிசைக் களித்தாடுர் தழனி யாலும்,
    கனற்பொறியின் மலிவாலும், புகையி னாலும்,
சணங்குபல பிணங்குபெருங் குரைப்பி னாலும்"

அதுவே சுடலையெனத் தீர்மானித்து அங்கு போய்ச் சேர்ந்தாள். அங்கே பல பிணங்கள் எரிந்துகொண்டிருந்தன. அப்பிணங்களைச் சுமந்துவந்த பாடைகள் ஒருபுறம் கிடந்தன. மற்றொருபுறம் அறுத்தெறிந்த மலர் மாலைகளும், உடைந்த புதிய மட்கலங்களும் இருந்தன. வெள்ளெலும்பு, வெண்பற்கள் முதலியன பலவிடங்களில் பரவிக் கிடந்தன. அங்குள்ள நாய் நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. பிணங்களின் சுறுநாற்றம் காததூரமளவும் வீசியது. அவை யெரிவதனால் உண்டாகிய ஒளி அங்குள்ள இருளை யொழித்துப் பகலாக்கியது.

சந்திரமதி அம்மயானம் அணுகினதும் தன் மகனை ஒருபுறங் கிடத்தினாள். பின்பு அவள் அங்கே அவிந்து கிடக்கும் கொள்ளித் துண்டுகளை யெல்லாம் பொறுக்கி வந்து குவியலாக்கி, அதன் மேல் தன் மகனைக் கிடத்தி நெருப்பிட்டு, "ஆ மகனே! 'கிளியை வளர்த்துப் பூனைக்கிடுவாரைப் போல்' உன்னை வீணுப்பப் பாம்புக் கிரையாக்கினேனே!

உன் தலைவிதி இப்படியு மாகுமோ! ஐயோ! நீ என்னை யடக்கஞ் செய்து எனக்கு எள்ளுந் தண்ணீரும் இறைப்பா யென்றிருந்தேன். பாவியாகிய என் எண்ணம் நிறைவேறா மல் போயிற்றே. ஆருமற்ற பாவியாய் என்னை அலையவிட்டுச் சென்றனையே! ஆ! என் கண்ணே! இது உனக்குத் தகுமோ?" எனப் பலவற்றைச் சொல்லி ஓவெனப் புலம்பி யழுதாள். அவ்வொலி அம்மயானத்தைக் காக்கும் அரிச் சந்திரன் காதில் பட்டது.

உடனே அவன், "ஆ! இப்பேரிருளில் ஒரு பெண்ணின் குரல் தனியாய்க் கேட்கிறதே! இதனைக் கண்டறிவோம்" எனக் கருதி விரைந்தோடி வந்தான். பின்பு அவன் அவளை நோக்கி, "அடி மூடி! நீ யார்? இக்கள்ளிருளில் கள்ளத்தன மாய்ப் பிணத்தைச் சுடுகின்றாய். எனக்குச் சேர வேண்டிய வாய்க்கரிசியும் முழத்துண்டும் காற்பணமும் கொடுத்துவிட்டுப் பிறகு சுடு" என்று சொல்லித் தேவதாசனைத் தன் காலால் உதைத்துத் தள்ளினான். சந்திரமதி அளவற்ற வருத்தத் துடன், "ஐயா, நான் யாருமற்ற பாவி. அடிமைத்தொழில் செய்து பிழைப்பவள். எனக்கு ஒரே மகன் உண்டு. அவன் இன்று தர்ப்பை பறிக்கக் காட்டிற்குப் போனான். அங்கே ஒரு நச்சரவு அவனைத் தீண்டினது. அதனாலவன் உயிர் துறந்தான். அவனைச் சுடுவதற்குத் தயவு செய்து உத்தரவு தாருங்கள்" என மொழிந்து, 'அடியற்ற பனைபோல்' கீழே வீழ்ந்து அவனை வேண்டிக் கொண்டாள். அப்போது அரிச் சந்திரன் "பெண்ணே! நான் ஒரு புலையனுக்கு அடிமைக் காரன். நீ என்னைத் தொடுதல் தகாது. என் காலை விடு. நீ வறியவளா யிருந்தால் எனக்குச் சேரவேண்டிய வாய்க் கரிசியைத் தள்ளி விடுகிறேன். முழத்துண்டும் கால்பணமும்

என் தலைவனுக்குரியவை. ஆதலால் அவற்றைக் கொடுத்தே யாக வேண்டும்" என்றான்.

மீண்டும் சந்திரமதி "ஐயா! நான் மிகவும் எளியவள். காற்பணமும் முழத்துண்டும் என்னிட மேது? அவற்றைக் கொடுக்கக் கூடியவளா யிருந்தால், பெண்பாலாகிய நான் இக்கள்ளிருளில் தன்னந் தனியாய் வருவேனா? சுடலையி லுள்ள எரிந்தவிந்த கொள்ளித் துண்டுகளைப் பொறுக்கி என் னருமைப் புதல்வனைச் சுடுவேனா? இவற்றால் என் எளிய நிலைமையை நீங்கள் எளிதில் அறிந்துகொள்ளலாமே" என, அம்மன்னவனைப் பலவாறு இரந்து வேண்டிக் கொண்டாள். அத்தருணம் சந்திரமதியின் கழுத்திலுள்ள தாலி அவன் கண்ணில் பட்டது. உடனே அவன் அளவற்ற ஆச்சரிய மடைந்து, "ஆகா! நீ மிகவும் திறமையுள்ளவள். பெண் களில் இந்திர ஜாலம் கற்றவள். நீ உன் மகனுக்காக அடுக்கிய இந்த விறகுகளை எங்கேயோ களவாடி வந்தாய். உன்னைப் போன்ற பெண்களை இவ்வுலகில் காண்பதரிது. உன் கழுத்தி லுள்ள தாலியோ மின்னலைப்போல் ஒளி வீசி விளங்கு கின்றது. அஃதொன்றே இவ்வுலகமெல்லாம் மதிக்கத்தக் கது. உன் கணவன் உதவியுமின்றி நீ இக்கள்ளிருளில் தனித்து வந்ததால், நீ ஒரு கீழ் மகளே யாவாய்" என இகழ்ந்துரைத்தான். 'வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல்' இக்கொடு மொழிகள் அவள் துன்பத்தைப் பல மடங்கு அதிகப்படுத்தின. அதனாலவள்,

"அலைவி லாவரிச் சந்திரற்(கு) அல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதவ தோவென
உலையின் மீதமெ ழுகொத்த ருகினான்

அற்புக் காழிய ஞமரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும் ;
பொற்புப் போம்; பொறை போம்; நிறைபோம்; என்றன்
கற்புப் போவதேன்? என்று"

பலவற்றைச் சொல்லிப் புலம்பி, 'ஆ! என் கழுத்திலுள்ள தாலியை என் கணவனைத் தவிர வேறு ஒருவருங் காணார்" என முன்பு சிவபிரான் வரமளித்தனர். இப்போது அதனை ஒரு புலையனும் காணலாயினன். இதுவும் விசுவாமித்திர முனிவர் சூழ்ச்சி தானோ? அவ்வாறாயின் சிவன், திருமால், பிரமன் முதலிய தேவர்களைவிட அம்முனிவரே சிறந்தவ ராவர் எனக் கதறியழுதாள்.

உடனே அரிச்சந்திரன், 'இடியோசை கேட்ட நாகம் போல்' நடுங்கினன். அவள் தன் மனைவி யென்பதையும், இறந்தவன் தன் மைந்த னென்பதையும் அவன் நன்கு அறிந்துகொண்டான். பின்பு அவன் அளவற்ற துயரத் துடன், "ஆ! தேவதாசா! என் அருமைக் குழந்தாய்! யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படை யுடன் காட்டிற்குச் செல்லவேண்டிய நீ தனித்துச் சென்ற னையோ! உன்னைப் பாம்பு தீண்டியபோது நீ என்னென்ன எண்ணினையோ! பாவியாகிய எனக்குப் பிறந்தமையால், நீ உன் இளமையிலேயே பல துன்பங்களை அனுபவித்தாய். ஆ! என் கண்ணே! இனி உன் தாய்க்குத் துணை செய்வார் யார்? என்னை வெறுத்தாலும் உன் தாயையாயினும் நினைக்க லாகாதா?" எனப் பலவற்றைச் சொல்லிப் புலம்பியழுதான்.

பின்பு அவர்களிருவரும் ஒருவாறு தேறுதலடைந்த னர். அரிச்சந்திரன் புலையனுக்கடிமைப் பட்டதைக் கேட்ட

சந்திரமதி மிகவுங் கலங்கினள். அதன் பிறகு அரிச்சந்திரன், "மைவிழி மாதே!

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
எனைத்தாய நூலகத்தும் இல்லை."

என்றபடி, தீவினையை வெல்ல யாரால் முடியும். எல்லாம் இறைவன் செயல். அன்றியும், 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்றபடி, நமது உடல் நீரில் எழுதும் எழுத்தைப்போல் விரைவிலழியும் தன்மை யுடையது. ஆதலால், நாம் நமது மகன் பொருட்டு வருந்துவதில் பயனில்லை. இனி நீ விரைந்து சென்று காலகண்ட ஐயரைக் கேட்டு காற்பணமும் முழத் துண்டும் பெற்றுவா. அவை எனது தலைவராகிய வீரவாகுவுக் குரியவை. அவற்றைப் பெறுவிட்டால், நான் எனது தலைவனை வஞ்சித்த குற்றத்திற்காளாவேன்," என மொழிந்தான். அதற்கு அப்பெண்மணி, "காலகண்டன் மிகவும் கொடியவன். எள்ளளவும் இரக்கமில்லாதவன். ஆயினும், தங்கள் கட்டளையின்படி சென்று கேட்பேன். நான் வருமளவும் நமது புதல்வனைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என மொழிந்து அவ்வேதியரிடம் செல்லப் புறப்பட்டாள்.

---

17. அத்தியாயம்

சந்திரமதி கொலைக்குற்றம் சாட்டப்படல்

சந்திரமதி அவ்வாறு செல்லும்போது இடைவழியில் ஒரு சிறுவன் பிணத்தைக் கண்டாள். அச்சிறுவன் அக்காசி நகரத்தை யாளும் வேந்தன் மகன். அவனுக்குச் சுமார் எட்டு வயதிருக்கலாம். சில கள்வர்கள் அம்மன்னவன் மனையிற் புகுந்து விலை யுயர்ந்த பொருள்கள் பலவற்றைக் களவாடினர். அன்றியும் அவ்வேந்தன் மனையில் உறங்கிக் கொண்டிருந்த அவன் மகனை அசையாமல் கொண்டுவந்து

அவனணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் அபகரித்துக் கொண்டு, அவனையும் கொன்று அங்கே கிடத்திவிட்டுப் போயினர். அவ்விளைஞன் உருவத்திலும் நிறத்திலும் தேவ தாசனை ஒத்திருந்தான். அதனால் சந்திரமதி அவனைத் தன் மகன் எனக் கருதித் தன் கையி லெடுத்துக் கொண்டு, "ஆ! என் கரும்பே! உன் கதி இப்படியும் நேருமா? நீ செத்த பின்பும் சீர்குலையலானதே! ஐயோ! உன்னைக் காணுந் தோறும் என்னுள்ளம் குழம்புகிறது. மெல்லிய பஞ்சணை மேல் படுத்துறங்கும் நீ இக் கல் தரையில் உருள நேர்ந்ததே. உன்னை இப்போதுதானே உன் தந்தையிடம் ஒப்புவித்து வந்தேன். அவர் உன்னைத் தனியே கிடத்திவிட்டுச் சுடலை யைச் சுற்றிப் பார்க்கச் சென்றனர் போலும். நாயோ நரியோ உன்னை யிழுத்து வந்து இங்கே போட்டிருக்க வேண்டும், 'மாதா செய்த தீவினை மக்களுக்கு' என்றபடி, நீ செத்த பின்பும் உன்னை என் தீவினை விடவில்லை போலும். ஐயோ! பாவியாகிய என் வயிற்றில் நீ யேன் பிறந்தாய்", எனப் பலவற்றைச் சொல்லிக் கதறி யழுதாள்.

அத்தருணம் அவ்வழியாய் வந்த ஊர்க் காவலர் ஓசை செய்யாமல் மெல்ல அவளை யணுகினர். அவள் கையில் குழந்தை இருப்பதைக் கண்டு அவளே அதனைக் களவாடி யிருக்க வேண்டுமென அவர்கள் கருதினர். பின்பு அவர்களி லொருவன் சந்திரமதியை நோக்கி, "பெண்ணே! நீ யார்? இக்குழந்தையை ஏன் கொன்றாய்? இதன்மேலிருந்த ஆபா ணங்களெங்கே?" என உரத்த குரலுடன் அதட்டிக் கேட் டான். ஆண் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட பெண் மானைப்போல் அவள் மிகவும் நடுநடுங்கினாள். பின்பு அவள் ஒருவாறு தேறி, "ஐயன்மீர்! நான் ஒரு வேதியருக்கு அடி

மைப் பட்டவள். இவ்விளஞ் சிறுவனை நான் கொல்லவில்லை. இவன் மேலிருந்த ஆடையணிகளையும் அறியேன். என் குழந்தையைக் காட்டில் பாம்பு தீண்டினது. அவன் இன்று இறந்து போனான். அவன் பிணத்தை நாய் நரிகள் இங்கே கொண்டுவந்து போட்டிருக்கு மென்றெண்ணி நானிதனைத் தெரியாமல் எடுத்தேன்" என உள்ளதை உள்ளபடியே உரைத்தாள். ஆனால் அவள் சொல்லை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அக்குழந்தையைக் களவாடினவள் அவளே யாமென அவர்களெல்லாரும் கருதினர்; உடனே அவர்களில் சிலர் சந்திரமதியின் தோள்களை இறுகப் பிணித்தனர்; சிலர் அவளைக் கைகளால் குத்தினர்; சிலர் தடிகளால் தாக்கினர்; சிலர் அவள் கூந்தலைப் பிடித்து இழுத்தனர். அவள் உடம் பில் சிற்சில விடங்களில் தழும்புகள் காணப்பட்டன. சிற்சில விடங்களில் உதிரம் பீறிட்டுப் பாய்ந்தது. ஐயோ பாவம்! இப்படிப்பட்ட துன்பத்தை அவள் ஒருநாளும் அடைந்தவ ளல்லள். 'பட்ட விடத்தில் படும் கெட்டகுடியே கெடும்' என் பது பழமொழி யல்லவா? பின்பு அவர்கள் அக்குழந்தை யை அவள் தோள்மே லேற்றித் தமது மன்னவன் சபைக்கு அவளை யிழுத்துச் சென்றனர்.

சந்திரமதிக்கு நேர்ந்த பெரும் பழியைக் கண்டு பயந்ததைப்போல் அன்றிரவு கழிந்தது. ஊர்க் காவலா ளர் செய்யும் அநியாயத்தைக் கண்டு வெகுண்டெழுந் தவன்போல் சூரியன் புறப்பட்டான். காசிநகர்க்கிறை வரும் அவன் அமைச்சன் முதலானோரும் தத்தம் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வழக்கம் போல் கொலு மண்டபம் வந்து கூடினர். உடனே காவலாளர் சந்திர மதியை இறுகக் கட்டிய கட்டுடன் அவ்வரசன் முன்

னிலையில் கொண்டுபோய் நிறுத்தினர். அவள் அம்மன்னவன் சிறுவன் சவத்தைத் தன் தோள்மேல் சுமந்து கொண்டிருந்தனள். தன் மைந்தன் அவள் தோள்மேல் பிணமாய்க் கிடப்பதைக் கண்டதும் அவ்வேந்தன் துன்பக்கடலில் அமிழ்ந்தனன்.

பின்பு அவன் ஒருவாறு தேறி நடந்தவற்றை யுரைக்கும்படி ஊர்க்காவலர் தலைவனைக் கேட்டான். அவன், "மன்னவரேறே! நமது அரண்மனையில் களவுபோனசெய்தி உடனே எனக்குத் தெரிந்தது. நான் அக்கணமே ஊர்க்காவலர் பலரை நமது நகரின் நாற்புறமும் ஏவினேன். அவர்களில் சிலர் நமது அரிய குழந்தையுடன் இவளைப் பிடித்துவந்தனர். இவள் இக்குழந்தையைத் தன் மடிமேல் வைத்துப் பலவற்றைச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தனளாம். நகைகளின்மேலுள்ள விருப்பத்தால் இவளே இக்குழந்தையைக் கொலை செய்திருக்க வேண்டும். இவள் இதனைத் தனியாய்ச் செய்தவளல்லள். சிலர் இவளுக்கு உதவி புரிந்திருக்கவேண்டும். தான் களவாடிய நகைகளை அவர்கள் மூலமாய் அனுப்பிவிட்டாளெனத் தோற்றுகிறது. ஊர்க் காவலாளரைக் கண்டதும், தானொன்றும் அறியாதவள்போல் அழத்தொடங்கினாள். இதனால் இவள் இத்திருட்டுத் தொழிலில் பலநாள் பழகினவளெனத் தெரிகிறது. அரண்மனையிலேயே இவ்வளவு துணிகரமாய்த் திருடினதன்றிக் கொலைத் தொழிலையும் புரிந்துவிட்டாள். இவளைத் தக்கபடி தண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால், நமது நாட்டில் இவளால் பெருந்துன்பங்கள் நேரும்," என மொழிந்தான்.

பின்பு அவ்விறையவன் சந்திரமதியை நோக்கி "பொன்போல்வாய்! நீ யார்? நீ களவாடிய தன்மையா? உள்

ளதை ஒளியாமல் சொல்'' என்ருன். அதற்கு அப் பெண் மணி, "இப்போது நமக்குக் கடவுள் அருளில்லே. நாம் உண்மை யுரைத்தாலும் அதனே ஒருவரும் ஒப்பமாட்டார். 'இளைத்தவர் தலேயில் ஈறும்பேனும்' என்பதுபோல், இப்பழி நம்மை விட்டகலாது.

"பொய்மையும் வாய்மையிடத்த; புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்றபடி இப்போது நாம் பொய் பேசினுலும், அது குற்ற மாகாது'' எனப் பலவற்றை பெண்ணினுள். பிறகு அவள், "கழற்கால் காவல! நான் ஒரு கொடிய வஞ்சகி. இது வரை யில் பற்பல விடங்களில் நான் களவாடியதுண்டு. நேற்றிரவு தங்களாண்மனேயில் புகுந்து தங்கள் குமாரனேக் கொன்ற வளும் நானே. தங்கள்புதல்வன் பிணம் என் கையிலிருப்பதே அதற்குத் தக்கசான்ரும். ஆதலால் தாங்கள் விரும்பியபடி என்னேத் தண்டிக்கலாம்,'' என்ருள்.

அதற்கு அப்பார்த்திபன், "அறிவிற் சிறந்த அமைச்சர் களே! சபையோர்களே! இப்பெண்மணி சொன்னவற்றைக் கேட்டீர்களன்ருே! ஆனல், இவள் சொன்னதையே துணே யாகக்கொண்டு நாம் இவளேக் குற்றவாளியெனத் தீர்மானிக்க லாகாது. ஏனெனில், உயிர்க்கொலே புரிதற்குரிய குறிகள் இவளிடம் அணுவளவும் புலப்படவில்லே. அன்றியும், இவள் அடக்க வொடுக்கங்களேக் கவனித்துப் பாருங்கள். இவள் நல்லொழுக்கமும் உயர் குடிப்பிறப்பும் உடையவளா யிருத் தல் வேண்டு மென்றே நான் கருதுகிறேன். இனி உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்'' என வினவினுன்.

மந்திரிமார்களிற் சிலர் அவள் குற்றமற்றவளென வுரைத் தனர். வேறு பலர் அவள் குற்றவாளியேயா மென்றனர்.

அச்சபையாரிற் பலர் "அறநெறி மன்ன! பெண்பாலாகிய இவள் நள்ளிரவில் தனியே வரக் காரண மென்ன? நல் லொழுக்க முடைய பெண்கள் அவ்வாறு தனித்து வர ஒரு போதும் உடன்படார். அன்றியும், 'சித்திரவிழியார் நெஞ்சம் தெளிந்தவரில்லை' என்றபடி, பெண்களின் இயல்பைக் கண் டறிதல் எளிதல்ல. ஆதலால், இத்தீய காரியத்தை இவளே செய்திருக்க வேண்டும்" என மொழிந்தனர். மீண்டும் அம் மன்னவன் சந்திரமதியை நோக்கி, "அம்மா நீ ஒன்றும் அஞ் சாதே. இது நீதி மன்றம். இங்கு நீ தாராளமாய்ப் பேசலாம். இனியாயினும் நடந்ததை நடந்தபடி சொல்" என வினவி ஞன். அப்போதும் அவள் முன்போலவே மொழிந்தாள். அதன்மேல் அம்மன்னவன் இன்னது செய்வதெனத் தோன் ருமல் திகைத்தான். அத்தருணம் அவன் மந்திரிமார்களிற் சிலரும் சபையோர்களும், "மணி முடி மன்ன! சாதாரணப் பெண்களைப்போல் இவளை நினைக்கலாகாது. தாங்கள் பல முறை வற்புறுத்திக் கேட்டும் அவள் முன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிருள். களவுங்கையுமாய் அகப் பட்டுக் கொண்டமையால், இனித் தப்பித்துக் கொள்ள வழி யில்லை யென அவள் நன்ருய்த் தெரிந்து கொண்டாள். ஆத லால், இனி அவளை விசாரிப்பதில் பயனில்லை. அவளைத் தக்க படி தண்டிப்பதே தகுதி" என்றனர். பின்பு அம் மன்ன வன் மிக்க வருத்தத்துடன் அவளைக் கொலைபுரியும்படி தீர்மா னம் செய்தான்.

18. அத்தியாயம்

விசுவாமித்திரர் அரிச்சந்திரனைச் சந்தித்தல்

உடனே காவலர்கள் சந்திரமதியைக் கட்டிய கட்டுடன் வீரவாகுவிடம் கொண்டுபோய் நிறுத்தி, "வீரவாகுவே! இவள் நமது மன்னவர் மனையில் புகுந்து பல பொருள்களைக் களவாடிய தன்றி, அவர் குழந்தையையும் கொன்று விட்டாள். அதனால் இவளைக் கொலை செய்யும்படி அவர் உத்தரவளித்தார். அவர் கைபெழுத் தடங்கிய சீட்டு இதோ இருக்கிறது. தாமதியாமல் உடனே இவளைக் கொன்றுவிடு" எனக் கூறி அவ் வேந்தனளித்த சீட்டையும் அவனிடம் கொடுத்தார்கள்.

பின்பு வீரவாகு, "ஆ! இப்பெண்மணியா இத்தகைய காரியம் செய்தாள்? இவள் பார்வைக்கு மிகவும் நல்லவள் போல் தோற்றுகிறாள். ஐயோ! இளஞ் சிறுவனை வதைக்க இவள் எவ்வாறு துணிந்தாள். இவள் கொடிய அரக்கி போலும்" என மொழிந்து, உடனே அரிச்சந்திரனை யழைத்து "அடிமையாள! இவள்நமது மன்னவன் மகனைக் கொலை செய்தனளாம். அதனால் நமது வேந்தன் இவளைக் கொன்று விடும்படி தீர்ப்பளித்து விட்டனர். நீ இவளைக் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்று இப்போதே வதைத்துவிடு. தாமதஞ் செய்தால் எனக்குப் பெருந்தீங்கு நேரும். உடனே விரைந்து செல்" என மொழிந்த நீண்ட வாளொன்றை அவனிடம் கொடுத்தான். ஐயோ! ஐயோ!! பாவம்! பாவம்!! அப்போது அரிச்சந்திரன் நிலைமை எவ்வாறிருக்கும். நெருப்பில் விழுந்த புழுவைப்போல் அவன் மனம் சிறிது நேரமளவும் துடித்தது. பின்பு அவன், 'எல்லாம் தெய்வச் செயல்' 'விதியினை வெல்ல வல்லார்

யார்?' எனப் பலவற்றை யெண்ணிப் பின்பு ஒருவாறு தேறித் தனது தலைவன் கட்டளையின்படி சந்திரமதியைக் கொல்லக் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றான். சந்திரமதி நடந்த செய்திக ளெல்லாவற்றையும் அவனிடம் விரிவாயுரைத்தாள். அவற்றையெல்லாம் கேட்டு அரிச்சந்திரன் முன்னையினும் மிகவும் வருந்தினான். அவன் மனைவி அவனை ஒருவாறு தேற்றினாள்.

நடுவழியில் விசுவாமித்திர முனிவர் அரிச்சந்திரனுக்கெதிரில் தோன்றி, "ஆ அரிச்சந்திரா! யாது செய்யத் துணிந்தாய்? மனைவியைக் கொன்ற கொடியவர்கள் இவ்வுலகத்தில் இதுகாறும் யாரேனு முண்டோ! உன் மனைவி மிகவும் நல்லவள். உன்னிடம் அளவற்ற அன்பு பாராட்டுகிறாள். ஆ! உனக்கு அவளிடம் அணுவளவும் அன்பில்லை போலும். இப்போதும் ஒன்றும் மிஞ்சிப் போகவில்லை. இனியாயினும் உன் நாட்டை நீ எனக்குத் தரவில்லை யெனக்கூறி அதனை மீண்டும் பெற்றுக்கொள். உன் மகனை யுயிர்ப்பித்துத் தருகிறேன். காசி வேந்தனிடம் சொல்லி உன் மனைவியையும் மீட்கிறேன். உன் நன்மையை நாடியே நானிவ்வளவும் சொல்கிறேன்" என மொழிந்தார்.

அதற்கு அரிச்சந்திரன், "முனிவரே! யாது மொழிந்தீர். 'மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்' எனப் பெரியோர் மொழிந்தபடி, இவ்வுடல் மின்னலைப்போல் தோன்றி விரைவில் அழியுந் தன்மையுடையது. இத்தகைய நிலையற்ற உடலை நம்பி ஒருபோதும் அழியாத வாய்மையை இழக்கலாமா? இம்மையில் புகழையும் மறுமையில் பேரின்ப வீட்டையுமளிப்பது வாய்மையே யன்றோ!

"பதியி ழந்தனம்; பாலனை யிழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; இனியெமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்."

என மொழிந்தான். இவற்றை யெல்லாங்கேட்ட விசுவா மித்திருக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. அதனால் அவர், "ஐயோ! நான் ஆகாத காரியத்தில் தலையிட்டுக் கொண்டேனே! என்னைப் போன்ற மதியீனர் கள் இவ்வுலகில் யாரேனுமுண்டோ? இனி யாது செய் வேன்!" என மிக்க வருத்தத்துடன் அங்கு நின்று மகன்றார்.

---

19. அத்தியாயம்

அரிச்சந்திரன் சந்திரமதியைக் கொல்ல முயலல்

விசுவாமித்திர முனிவர் மறைந்தபின், அரிச்சந்திரன் தன்மனைவியின் இரண்டு தோள்களையும் இறுகப் பிணித்த கயிற்றை இடது கையிலும் வீரவாகு கொடுத்த வாளை வலது கையிலும் பிடித்த வண்ணம் கொலைக்களம் போய்ச் சேர்ந்தான். இச்செய்தி அவ்வூரெங்கும் பரவியது. ஆடவர் மகளிர் சிறவர் சிறுமியரெல்லாம் இக்கொலையைக் காண அங்குத் திரள்திரளாய் வந்து கூடினர். அவர்களில் சிலர், "ஆ! அப்பெண்மணியை உற்றுப் பாருங்கள். 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றபடி, அவள் குற்றமற்றவளென் பதை அவள் முகமே நன்கு காட்டுகிறது. அவள் இக்கொலை புரிந்திருப்பாளென மொழிவது பெருந்தவறும்" என்றனர். "அவள் அழகில் திருமகளைப்போல் விளங்குகிறாள். எங்கே பிறந்து எங்கே வளர்ந்தனளோ? இங்கே வந்து இக்கொலைக்கு ஆளாயினளே! ஐயோ! ஐயோ!! பாவம்! பாவம்!!" என்றார்

வேறு சிலர். "யாரோ செய்த கொலையை இவ்வெளிய பெண்பால் தலையில் சுமத்தி விட்டனர். இது ஊர்க்காவலாளர்கள் செய்த சூழ்ச்சியே யாம்" என்றார் மற்றுஞ் சிலர். "நீதிநெறி தவறாத நமது வேந்தரும் தீர விசாரியாமற் போனார். இப்பழி அவரையும் விடாது தொடரும்" என்றார் இன்னுஞ் சிலர். "அப்பப்பா! பெண்களை ஒருபோதும் நம்பலாகாது. அவர்கள் பார்வைக்கு நல்லவர்கள் போல் நடிப்பார்கள். அவர்கள் செயல் அவ்வளவும் கொடுமையாகவே இருக்கும்" என்றார் பின்னுஞ் சிலர். "எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? நாம் ஆராய்ந்தோய்ந்து பாராமல் எதையும் சொல்லலாகாது" என்றார் மேலுஞ் சிலர். "அதோ வாளையேந்தி நிற்பவனைப் பாருங்கள். சில நாட்களுக்கு முன் அவளை விலைகூறி விற்றவன் அவனேயல்லவா? இப்போது அவனே அவளைக் கொல்லத் துணிந்தான். இஃதென்ன அதிசயமோ?" என்றார் மற்றுஞ் சிலர்.

இவர்கள் செய்தி இவ்வாறாக, காசி வேந்தனும் அவன் மந்திரிமார்கள், படைத்தலைவர்கள் முதலானவர்களும் அக்கொலைக்களம் போய்ச் சேர்ந்தனர். அத்தருணம் தேவலோகத்திலுள்ள வசிஷ்டர் தேவேந்திரனை நோக்கி, "அமரர்கட்கரசரே! விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய்யனென மெய்ப்பிக்க, அவனை இதுகாறும் படாதபாடு படுத்தி வந்தார். அம்மன்னவன் தனது வாய்மையை எள்ளளவும் இழக்கவில்லை. நான் அன்று அம்மன்னவனைப் பற்றிச் சொல்லிய அனைத்தும் இன்று வெளியாம். ஆதலால், இப்போதே என்னுடன் புறப்பட்டு வாருங்கள்" என்றனர். உடனே தேவேந்திரன் தனது வெள்ளை யானையின் மேலேறிப் புறப்பட்டான். தேவர்களும் முனிவர்களும் அவனைச் சூழ்ந்து சென்றனர். அவர்களெல்லோரும் ஒருவர்

கண்ணுக்கும் புலப்படாமல் ஆகாயத்தில் நின்றிருந்தனர்.

இது நிற்க, சந்திரமதியைக் கொலைபுரியத் தீர்மானித்த காலங் குறுகியது. உடனே அரிச்சந்திரன் தன் மனைவியை நோக்கி, "தெரிவையர் திலகமே! உன்னைக் கொல்லுந் தருணம் குறுகிவிட்டது. ஆ! பாவியாகிய என்னை மணந்து நீ யாதொரு மேன்மையும் அடையவில்லை; பலவிதத் துன்பங்களையே அனுபவித்து வந்தாய். கடைசியில் என் கையாலேயே உயிர் துறக்கவுமானாய். ஆகா! என்னைப்போன்ற பாவிகள் இவ்வுலகில் ஒருவரு மிரார்" எனப் பலவற்றைச் சொல்லி வருந்தினன்.

அப்போது சந்திரமதி, "என் இன்னுயிர் போல்வீர்! தாங்கள் இவ்வாறு தளர்தல் தகுமோ?

"சாதலும் பிறத்தல் தானும்
தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லாம்
அவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம்
நுண்ணுணர் வின்மை யன்றே"

என அறிஞர் மொழிந்ததைத் தாங்களறியீரா? அன்றியும், தாமரை மலர் போன்ற தமது அழகிய கைகளால் நான் எனதுயிரையிழக்கும் பேறு பெற்றேன். என்னைப் போன்ற புண்ணியவதிகள் இவ்வுலகில் யாரேனுமுண்டா? இனித் தாங்கள் சிறிதும் தாமதியாமல் தங்கள் கடமையைச் செய்து முடியுங்கள்" என மொழிந்தாள்.

பின்பு அரிச்சந்திரன் ஒருவாறு தேறி அவளைக் கொலைக்களத்தின் நடுவில் கொண்டுபோய் நிறுத்தி, "கற்புக்கணிகலம் போல்வாய்! நீ உன் வழிபடு கடவுளை வணங்கிக் குனிந்திரு" என்றான். அப்பெண்மணி "குலமகட்குத்

தெய்வம் கொழுநனே" என்றபடி, தன் கணவனையே கடவு ளாகத் தொழுது அவனை வணங்கிக் குனிந்து நின்றாள். உடனே அரிச்சந்திரன் தனது வழிபடு கடவுளை வணங்கி, "நான் வாய்மைதவறுதிருப்பதும், இவள் கற்புநெறி கடவா திருப்பதும் உண்மையானால் இவளுக்கு ஒருவிதத் தீங்கும் உண்டாகா தொழிக. இல்லாவிட்டால், இவள் இப்பொழுதே இறந்து படுக" என மொழிந்து சந்திரமதியின் கழுத்துக்கு நேராய்த் தன் கைவாளை வீசினான். அங்குக் கூடி யிருந்தவர் களில் பலர் "ஐயோ! ஐயோ!! பாவம்! பாவம்!! ஒரு பெண் பால் இன்று வீணாய் இறந்தனள். ஆ! இது மிகவும் கொடிது! கொடிது!!" என்றனர். ஆனால், கடவுளின்செயலை அறிவார் யார்? அம்மன்னவன் வீசிய வாள் அம்மங்கையின் கழுத்தில் ஒரு மலர் மாலையாய் விழுந்தது.

அதனைக் கண்டு அங்கிருந்தவர்களில் பலர், "ஆகா என்ன அதிசயம்! அப்புலையன், 'நான் உண்மை யுடையவனா யிருப்பதும் இவள் கற்புடையவளா யிருப்பதும் உண்மை யானால் இவள் என் கைவாளுக்குத் தப்பிப் பிழைக்க; இல்லா விடின் மாள்க' என மொழிந்து தன் கைவாளை வீசினான். அவள் அங்ஙனமே பிழைத்தாள். அவன் வாய்மையின் சிறப்பையும் அவள் கற்பின் மேன்மையையும் நாம் என்ன வென்று இயம்பலாம்" எனப் பலவற்றைச் சொல்லி அவர்க ளிருவரையும் கொண்டாடினார்கள். காசி வேந்தனும் அவன் மந்திரிமார்களும், இதனைக்கண்டு வியந்து "ஐயோ நாம் ஆராய்ந்து பாராமல் இப்பெண்மணியை வீணாய்க் கொலை செய்யும்படி தீர்ப்பளித்து விட்டோமே" எனப் பெரிதும் வருந்தினர். மீண்டும் இறைவன் அருளால் அவள் உயிர் தப்பிப் பிழைத்தமைக்காக அளவற்ற மகிழ்ச்சி யடைக்

தனர். இவற்றை யெல்லாங்கண்டு விசுவாமித்திர முனிவர் பெரிதும் நாணினர். வசிஷ்ட முனிவர் களிப்புக் கடலில் மூழ்கினர்.

---

20. அத்தியாயம்

அரிச்சந்திரன் மீண்டும் தனது அரசாட்சியை யடைதல்

அரிச்சந்திர மன்னவன் வீசியவாள் சந்திரமதியின் கழுத்தில் மலர் மாலையாக விழுந்ததும் திருமால், சிவன், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அம்மன்னவனுக்கு எதிரில் தோன்றினர். அவ்வேந்தன் அவர்களெல்லோரையும் தொழுதான். அப்போது விசுவாமித்திர முனிவர் அங்கு வந்து அவர்களெல்லோரையும் நோக்கி, "தேவர்களே! முனிவர்களே! சபையோர்களே! நான் சொல்வதைக் கருத்தாய்க் கேளுங்கள். நான் சில நாட்களுக்கு முன் தேவேந்திரன் சபைக்குப் போயிருந்தேன். அங்கே வசிஷ்ட முனிவர், இவ்வரிச்சந்திர மன்னவர் உண்மையும் பொறுமையும் புகழும் உடையவரென இவரைப் பலவாறுப் புகழ்ந்தார். அம்முனிவரிடத்தில் எனக்கு நெடுநாளாய்ப் பகைமையுண்டு. அதனால், நான் அவர் கூறியதை மறுத்து, இவ்வரிச்சந்திர மன்னவர் பொய், பொறாமை, வஞ்சகம் முதலிய தீய குணங்களை யுடையவர் என மொழிந்தேன். நான் தேவேந்திரன் முன்னிலையில் சொன்ன சொல்லை நிலை நிறுத்துவதற்காக, இம்மன்னவரைப் பலவாறு துன்புறுத்தினேன். அவைகளில் சிலவற்றை இங்கெடுத்துரைக்கின்றேன். சிங்கம், புலி, காடி, யானை, மான், ஒட்டை முதலிய மிருகங்களை யேவி இவ்வேந்தர் நாட்டிலுள்ள பயிர்களையும் உயிர்களையும் அழிப்பித்தேன். இவர் நாட்டை வஞ்சகமாய்க்

கவர்ந்து கொண்டேன். இவர் காட்டிற் செல்லுங்கால், இவருக்குப் பலவிதத் துன்பங்களை யுண்டாக்கினேன். அரிச்சந்திர மன்னவரை வீரவாகுவுக்கும் அவர் மனைவியைக் காலகண்டருக்கும் அடிமையாக்கினேன். இவர்கள் புதல்வனாகிய தேவிதாசனைக் காட்டில் பாம்பால் கொல்வித்தேன். கடைசியில் காசி வேந்தன் மகவைச் சந்திரமதி கொன்றதாய் அவள்மேல் பெரும்பழி சுமத்தினேன். இவ்வளவிற்கும் இக்காவலர் தமது வாய்மையிலிருந்து ஒரு சிறிதும் வழுவினவரல்லர். இனிச் சந்திரமதியின் கற்பை நான் என்னவென்றியம்புவேன். அம்மங்கையர்க்கரசி தனது கற்பின் பெருமையால் காட்டுத் தீயைக் குளிர்வித்தாள். ஆ! இவ்விருவரின் நற்குண நற்செயல்கள் பாராட்டத் தக்கனவே. குற்றமற்ற இவர்களிருவர்களுக்கும் நானிதுகாறும் இயற்றி வந்த தீங்குகளை யெண்ணுந்தோறும் எனக்கு மிகவும் நாணமும் வருத்தமும் உண்டாகின்றன. தேவதாசனையும், காசிவேந்தன் புதல்வனையும் இதோ வுயிர்ப்பித்தேன். அன்றியும், முன்பு நான் தேவேந்திரன் சபையில் மொழிந்தபடி என் தவத்தில் பாதியை அரிச்சந்திரனுக்குத் தத்தஞ் செய்தேன். இன்று முதல் அம்மன்னவர் தமதரசாட்சி பெற்று இனிது வாழலாம்" எனக் கூறி முடித்தனர்.

அப்போது அரிச்சந்திரன் மிக்க பொறுமையுடன் "தேவர்களே! சபையோர்களே! இம்முனிவர் கேட்டபடி என் நாடு முற்றும் நான் இவருக்கு வழங்கிவிட்டேன். ஒருவர்க்குத் தந்த பொருளை மீண்டும் பெறுதல் முறைமையோ? அவ்வாறு பெற்றால் இம்மையில் பழிப்பும் மறுமையில் நரகமுமே உண்டாகு மன்றோ! ஆதலால், நான்

மீண்டும் அதனை ஒருபோதும் பெறேன்" என அடியோடே மறுத்துரைத்தான்.

அதற்கு விசுவாமித்திரர், "சபையோர்களே! நான் இம் மன்னவனைப் பரிசோதிப்பதற்காகவே இவர் நாட்டைப் பெற்றேன். அரசாட்சியின் மேலுள்ள விருப்பத்தால் நான் அதனைப்பெறவில்லை. என் அரசாட்சியையே நான் வெறுத்துத் துறந்தேன். அப்படிப்பட்டவனாகிய எனக்கு இவர் அரசாட்சி யேன்? ஆதலால், இனி இவர் தமது நாட்டைப் பெற்றுச் செங்கோல் செலுத்துக" என மொழிந்தார்.

உடனே அரிச்சந்திரன் விசுவாமித்திரரை நோக்கி, 'தவச் செல்வரே!

"வேதியர்க் காளாய் மின்னையும் மைந்தன்
தன்னையும் விற்றனன்; யான்போய்ச்
சாதியிற் கிழாம் புலையனுக் காளாய்ச்
சவஞ்சுடு காடுகாத் திருந்தேன்;
சோதிமண் டபத்தின் மணித்தவி சேறிச்
சுடர்முடி கவித்துமண் புரக்க
நீதியன் றென்றே யானர சளித்தேன்
நினக்கதே எனக்கிதே யென்றான்"

பின்பு விசுவாமித்திரர், "ஆ! அரிச்சந்திரா! நன்றாய்ச் சொன்னாய். காலகண்ட ஐயர் சாதாரண வேதியர் அல்லர். அவர் கனற் கடவுளாவார், வீரவாகு புலையரல்லர். அவர் காலக் கடவுளாவார். நீ காப்பது சுடலையல்ல. இஃதோர் வேள்விச் சாலையாம்" என அவர் கூறி முடிக்கு முன்பே, காலகண்டரும் வீரவாகுவும் முறையே கனற்கடவுளும் காலக்கடவுளுமாய் அவ்வேந்தனுக்குக் காட்சிதந்தனர். அவர்க ளிருவரையும் அரிச்சந்திரன் முதலானோர் தொழுதனர். உடனே அந்தச்

சுடலை வேள்விச்சாலையாக மாறினது. அங்குள்ள பிணத் தீயெல்லாம் வேள்வித் தீயாகவும், விறகுகளெல்லாம் சமித்துகளாகவும் மாறின. இவற்றை யெல்லாங் கண்டு அங் குத் திரண்டிருந்தவர்களெல்லாம் அளவற்ற வியப்படைந் தனர்.

அதன் பிறகு பிரமன், சிவன், திருமால், முதலிய தேவர் கள் அரிச்சந்திர மன்னவனை நோக்கி, "மலத்தார் மார்ப! விசுவாமித்திர முனிவர் கூறியனயாவும் உண்மையே. அவர் உன்னைப் பரிசோதிக்கும் பொருட்டே உன் நாட்டைக் கவர்ந்தனர். அவர் உன்னை முற்றும் ஆராய்ந்தறிந்து திருப்தி யடைந்தனர். அவர் செய்த துன்பங்களெல்லாம் உனக்கு நன்மையாகவே முடிந்தன. இதற்கு முன்பு உன் புகழும் சீரிய குணங்களும் குடத்திலிட்ட விளக்கைப்போல் மங் கிக் கிடந்தன. இம்முனிவரால் அவை இப்போது மலையி லிட்ட விளக்கைப் போல் எங்கும் பாவலாயின. இனி உன் நாட்டை நீ பெற்று முன் போல் அரசுபுரியலாம். இதனால் ஒருவிதக் குற்றமும் உன்னை யணுகாது. உன் புகழ் உலக முள்ளளவும் அழியாது" என மொழிந்து மறைந்தனர். வசிஷ்ட முனிவரும் அவ்வாறே மொழிந்தனர். பின்பு அரிச் சந்திரன் ஒருவாறு உடன் பட்டான்.

தேவர்கள் போன பின்பு விசுவாமித்திரர், வசிஷ்டர், அரிச்சந்திரன் முதலானவர்களைக் காசிவேந்தன் தன் மாளி கைக்கு வரும்படி வேண்டிக்கொண்டான். அவர்களனை வரும் அவ்வாறே சென்றனர். பின்பு அவ்விறையவன் சந்திரமதியை நோக்கி, "அருந்ததி போன்ற அன்னாய்! நான் உன் பெருமை யறியாமல் வீணாய் உன்னைக் குற்ற வாளி யெனத் தீர்மானித்தேன். என்னைப் போன்ற கொடுங்

கோல் வேந்தர் இவ்வுலகில் வேறு யாரேனு முளரோ? இதனை யெண்ணுந் தோறும் என் உள்ளம் உருகுகிறது. இதன்பொருட்டு என்னை மன்னிக்க வேண்டுகிறேன்." எனப் பலவாறு இரந்தான். அப்போது அப்பெண்மணி ஒன்றுஞ் சொல்லத் தோற்றாமல் நாணத்தால் தலை குனிந்து நின்றாள். உடனே அரிச்சந்திரன், "மாநில மன்னரே! 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்றபடி, ஒரு சிறிதும் நீதி நெறி தவறாத வேந்தர்களும் சிற்சில சமயங்களில் தவறிப்போதல் இயல்பே. அன்றியும், நாங்கள் இவ்விதத் துன்பங்களை யடைந்தமைக்குக் காரணம் எங்கள் தீவினைப் பயனே. 'எய்தவன் எய்தால் அம்பென்ன செய்யும்' என்றபடி, தாங்களாயினும் விசுவாமித்திர முனிவராயினும் யாது செய்ய வல்லீர்? நாங்கள் எங்கள் தீவினையைத்தான் வெறுக்க வேண்டும்" என மொழிந்தான்.

சிறிது நேரஞ் சென்றதும், சூரியன் மறைந்தான். அரிச்சந்திரன் புகழைப்போல் வீடுகள் தோறும் விளக்குகள் ஒளி வீசி விளங்கின. அன்றிரவு காசிவேந்த னளித்த இனிய உணவை யுண்டு அவர்க ளனைவரும் கண்ணுறங்கினர். அம் மன்னவனுக்கு நேர்ந்த இடுக்கண்களெல்லாம் தொலைந்தமை போல் அன்றிரவு கழிந்தது. பொழுது புலர்ந்ததும், அவர்க ளனைவரு மெழுந்து தத்தம் காலைக்கடனை முடித்துக்கொண்டு அயோத்திக்குப் போகப் புறப்பட்டனர்.

காசி வேந்தனளித்த அழகிய தேரில் அரிச்சந்திரன் ஏறினான். அவன் மனைவியும் புதல்வனும் அவனருகில் உட்கார்ந்தனர். காசிவேந்தன் தனது நால்வகைச் சேனைகளுடன் அரிச்சந்திரனைச் சூழ்ந்து சென்றனர். விசுவாமித்திரர், வசிஷ்

டர் முதலிய முனிவர்களும் அம்மன்னவனைப் பின் தொடர்ந்தனர். தேர்கள் விரைந்து செல்லு மோசையும், குதிரைகள் கனைக்கும் ஒலியும், யானைகள் பிளிறும் சும்மையும் எல்லோர் செவிகளையும் செவிடு படுத்தின. சங்கு, பேரி, தாளம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. மேகத்தினிடையே விளங்கும் மின்னல் கூட்டம்போல், இளமை வாய்ந்த பெண்கள் பலர் யானைகளின் மேலேறிச் சென்றனர். வேல், வாள், ஈட்டி முதலிய படைகள் 'பளிச் பளிச்' என்று ஒளி வீசின. குடைகளும் கொடிகளும் எங்கும் நிரம்பிச் சூரியனை மறைத்தன. அச்சேனைகள் விரைந்து செல்லுதலால் கிளம்பின புழுதி வானத்தில் அதிக தூரம் பரந்தது.

இவ்வாறு அவர்களனைவரும் பல காடுகளையும் மலைகளையும் நதிகளையும் கடந்து அயோத்தி நகர மணுகினர். அரிச்சந்திர மன்னன் வருஞ் செய்தியைக்கேட்டு அந்நகர மாந்தரனைவரும் அளவற்ற களிப்படைந்தனர்.

"கார்பெற்ற தோகையோ ? கண்பெற்ற வாண்முகமோ ?
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ ?"

என்றபடி, அவர்கள் கொண்ட களிப்பிற்கு நாம் ஒன்றையும் ஒப்பிட்டுச் சொல்ல வியலாது. பின்பு சத்தியகீர்த்தி அரிச்சந்திர மன்னவனுக்கு முடிசூட்டும் நாளைக் குறிப்பிட்டு எல்லா அரசர்களுக்கும் ஓலை போக்கினன். அவர்களனைவரும் தத்தம் சேனைகளுடன் வந்து அயோத்திமா நகரை யடைந்தனர். அந்நகரம் முற்றும் நன்று யலங்கரிக்கப்பட்டது. குறித்த காலம் தவறாமல் வசிஷ்டர் அரிச்சந்திரனுக்கு முடி சூட்டினர். வேதியர், கவிவாணர், எளியவர் முதலிய பலர்க்கு அரிச்சந்திர மன்னவனாணையின்படி சத்தியகீர்த்தி

7

ஏராளமாய்ப் பொருள் வழங்கினன். அங்கு வந்திருந்தவ ரனை வரும் அறுசுவையுடன் இனிய உணவை விலாப்புடைக்க உண்டு மகிழ்ந்தனர். முடி சூட்டு முடிந்த இரண்டொருநாள் கழிந்தபின், அரசர்க ளனைவரும் தத்தம் நகர மடைந்தனர். விசுவாமித்திரரும் வசிஷ்டரும் தத்தம் தவ வனஞ் சென்ற னர். அரிச்சந்திரன் தன் குடிகளுக்கு ஒருவிதத் துன்பமும் அணுகாதபடி அவர்களை அன்புடன் ஆதரித்து வந்தான். அவன் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிந்தது. பசி, பிணி, பகை முதலிய துன்பங்கள் அடியோடே தொலைந்தன. அவ் வாறு அவன் நெடுநாள் அரசுபுரிந்து பின்பு இறைவன் திரு வடிகளை யெய்தினன்.

ஸ்ரீ

அரும்பதவுரை.

1-ம் பக்கம்.

நிலமகள்=பூமிதேவி
வயிறு ஆர=வயிறு நிரம்ப
வணிகர்கள்=வியாபாரிகள்
மக்கள்=பிள்ளைகள்
ஏவிய=கட்டளையிட்ட
களிப்பை=சந்தோஷத்தை
சிறுமியர்=சிறு பெண்கள்

2-ம் பக்கம்.

இத்தகைய=இப்படிப்பட்ட
திலகம்=நெற்றிப் பொட்டு
'மாட மாளிகை' என்னுஞ் செய்யுள்:—
மாடம்=வீடுகள்
மாளிகை=உப்பரிகைகள்
மடைப்பள்ளி=சமையலறை
மாளிகையும் மடைப்பள்ளியும்- இதிலுள்ள மகரம் விரித்தல் விகாரம்
கோயில்=அரண்மனைகள்
ஆடு அரங்கு=நடனம் செய்கின்ற நாடகசாலைகள்
அணி அறம் சாலை = அழகிய தரும சத்திரங்கள்
பாடலம்=குதிரை
கிரி=மலை, இஃதுவமையாகு பெயராய் இங்கு யானைகளைக் குறித்தது.
வைகிய=தங்கியிருக்கிற
பந்தியும்=இடங்களும்
உப்பரிகைகள்=மெத்தை வீடுகள்
இசைத்தல்=(சுருதி கூட்டி) வாசித்தல்
பேர் ஒலி=பெரும் சப்தம்
கொடை = (கேட்பவருக்கு) கொடுத்தல்
பிணி=நோய்
மன்னவன்=அரசன்; மன்= பெருமை; பெருமை யுடையவ னென்பது
மன் உயிர் = நிலை பெற்ற உயிர்கள்
மூக்குறும்பு = மூன்று வகைக் குறும்புகள்; அவை ஆணவம், காமியம், மாயை என்பவை
எறிந்த=அழித்த

3-ம் பக்கம்.

சுவர்க்கம்=வானுலகம்
காவலன் = அரசன்; இதனை, கா+வலன் என்றாயினும், காவல்+அன் என்றாயினும் பிரிக்கலாம்; முறையே காத்தல் தொழிலில் வல்லவனெனவும், காவலாக வுள்ளவனெனவும் பொருள் கொள்க
வேதியர்=பிராமணர்

கவிவாணர் = பாடல்களால் விளங்குவோர்; பாடல்களியற்ற வல்லவரென்பது
யாசகர்=பிச்சைக்காரர்
வேற்றுமை=வித்தியாசம்

'குடிகொன்று' என்னுஞ் செய்யுள்:—

குடிகொன்று = குடிகளை வருத்தி
இறை கொள்ளும் = வரிப் பணத்தை வாங்கும்
கோமகன் கு=அரசர்களுக்கு
கற்று = கன்றையுடைய பசு (கன்று+ஆ)
மடி கொன்று = மடியை யறுத்து
மாண்பே = மேன்மையே (ஆகும்)
குடி ஓம்பி = குடிகளைப் பாது காத்து
கொள்ளும் ஆ(று)=கொள்ளும் விதத்தில் (வருத்தாமலென்பது)
மாநிதியம்=பெருஞ் செல்வம்
காண்டும்=கண்டோம்
இம்மட்டோ=இவ்வளவோ

4-ம் பக்கம்.

பரந்த=(எங்கும்) பரவிய
கொண்டாடல் ஆனர்கள் = புகழ்வோனர்கள்
நீதி நெறி=நியாயவழி
விசாலமான=பெரிய
வீற்றிருந்தனர் = உட்கார்ந்திருந்தனர்
பரிசு=இனாம்
அணிகள்=ஆபரணங்கள்

5-ம் பக்கம்.

இரு புறம் உம்=இரண்டு பக்கங்களிலும்
காப்பு ஆளர்=காவலாளர்
இருகரம்=இரண்டு கைகள்
இறையவன்=அரசன்
மௌனமாய்=வாய் திறந்து பேசாமல்
சோணமாரி = இடைவிடாமற் பெய்யும் பெருமழை
சிங்க ஆசனம்=சிங்கத்தின் வடிவமாய்ச் செய்யப்பட்ட பீடம்
அமைச்சர்=மந்திரிமார்
படைத்தலைவர்=சேனதிபதிகள்

6-ம் பக்கம்.

அந்தணர் = அழகிய அருளையுடையவர்; அம்+தண்+அர்
கமண்டலம்=ஒருவகைப் பாத்திரம்
வாயிலாளன்=வாசலைக் காக்கும் காவலனே
மறையவர்=வேதங்களை யுணர்ந்தவர்; பிராமணர்
பீடம்=ஆசனம்
நால்மறை வல்லீர்! = நான்கு வேதங்களிலும் வல்லவர்களே! நான்கு வேதங்களாவன:—இருக், யஜுர், சாமம், அதர்வணம்
புனிதம்=பரிசுத்தம்
தூய=பரிசுத்தமாகிய
படிந்தீர்=முழுகினீர்

7-ம் பக்கம்

இறுதியில்=கடைசியில்
நண் அறிவு = நட்பமாகிய புத்தி

கொடைத்திறம் = (கேட்போர்க்கு) கொடுக்கும் தன்மை
விரித்து உரைக்க = விவரமாய்ச் சொல்ல
விழி=கண்கள்
மொழி=சொற்கள்
பிடி=பெண் யானை
துடி=உடுக்கை
இடை=இடுப்பு
கூந்தல் = பெண்களின் தலை மயிர்
'மண்மடந்தையர்' என்னுஞ் செய்யுள்:—
மண் மடந்தையர் தம்முளும்= பூலோகத்துப் பெண்களிலும்
வாசவன் உறையும் = இந்திரன் வசிக்கும்
விண்மடந்தையர் தம்முளும்= தேவலோகத்துப் பெண்களிலும்
நிகர் இலா=ஒப்பில்லாத
விறல்வேல்=வெற்றியை யுடைய வேலாயுதம்
எண்மடங்கு=எட்டுப்பங்கு
இந்திரையின் உம்= இலக்குமியைக் காட்டிலும்
எழிலாள்=அழகுடையவள்
புத்திரப்பேறு = மக்களாகிய செல்வம்

8-ம் பக்கம்.

வாட்படை மன்னவா=வாளாயுதத்தையுடைய அரசனே
கண்நுதல் கடவுள்=நெற்றியில் கண்ணையுடைய சிவபிரான்
திண்தோள் வேந்தரே=வலிய தோள்களையுடைய அரசரே
மகள்=இளம் பருவம் உடையவள் (இதில் மக-பகுதி; இளமையென்பது பொருள்)

9-ம் பக்கம்.

பார்த்திபன்=அரசன்

10-ம் பக்கம்.

பாராட்டி = பெருமையாகப் பேசி
வியந்தோம்=புகழ்ந்தோம்
வாய்மை=உண்மை

11-ம் பக்கம்.

சுயம்வரம்=ஒரு அரசன் மகள் தன் தந்தையால் திரட்டப்பட்ட அரசர்களில் தனக்கு விருப்பமானவனைத் தெரிந்தெடுத்து மணம் புரிந்து கொள்ளுதல்
(சுயம்=தானாக, வரம்=விரும்புதல்)
வரைந்த=எழுதி
அணுகி=நெருங்கி
முகில் கொடிகள்=துணிகளால் ஆகிய கொடிகள்
ஆர்த்து=ஒலித்து
அரவம்=ஒலி
பாலைவனம்=மணல்வெளி

12-ம் பக்கம்.

புனைந்து=அணிந்து
பூதகணங்கள் = பூதக் கூட்டங்கள்
ஐயம்=சந்தேகம்
கழல் கால் காவலா=வீர கண்டையணிந்த காலையுடைய அரசனே

13-ம் பக்கம்.

விடை=உத்தரவு

மணிமுடி மன்னனே=ரத்னங்களைப் பதித்த கிரீடத்தை அணிந்த அரசனே

14-ம் பக்கம்.

பொய்கை=தடாகம்
கண் உறங்கினர்=தூங்கினர்
நாயகர்=கணவர்
துயில் உணர்ந்து=தூக்கத்தை விட்டு எழுந்து
காலைக் கடன்=காலையில் செய்யும் கடமைகள்; (அவை பல் தேய்த்தல், நீராடல், கடவுளை வழிபடல், முதலியன)
காதம்=பத்து மைல் (அதிக தூரமென்பது)
கமழ்ந்தது=வாசனை வீசினது

15-ம் பக்கம்.

கமுகு=பாக்குமரம்
நுண்ணிய=மிகவும் சிறிய
அமர்ந்து=உட்கார்ந்து
அமைதியாய்=அடக்கமாய்
ஆணை=உத்தரவு

16-ம் பக்கம்.

வெள் நிலாவை = வெண்மையாகிய சந்திரனை
நன் அறிவு=நுட்பமாகிய புத்தி
ஆற்றல்=வல்லமை
நாணம்=வெட்கம
உற்று நோக்கினன்=கவனித்துப் பார்த்தான்
கன்னி = மணமாகாத இளம் பெண்
'பொறுத்து முன்' என்னுஞ் செய்யுள்:—
மங்கலம் பூண்ட = தாலியை அணிந்த
பேதையை=பெண்ணை
மறுத்து = (அந்தத் தாலியை) நீக்கி
சிறுத்தவர்=கீழோர்
திரை வரைப்பினில்=கடலால் சூழப்பட்ட உலகத்தில்
திரை=அலை; சினையாகு பெயராய்க் கடலை உணர்த்தினது
நிறுத்தினிர்=நிலைநாட்டினீர்
நெடிது கூறினன்=விரிவாய்ச் சொல்லினன்

17-ம் பக்கம்.

மீண்டும்=மறுபடியும்
மகப்பேறு=புத்திர பாக்கியம்
அண்ணல்=பெருமையிற் சிறந்த சிவபெருமான்
இதுகாறும்=இதுவரையிலும்
ஆராய்ந்து=பரிசோதித்து

18-ம் பக்கம்.

மாதர்கள்=பெண்கள்
ஆர்த்தனர்=(களிப்பின் மிகுதியால்) பேரிரைச்சல் இட்டனர்
வானவர்=தேவர்கள்
கீதர்கள்=சங்கீதம் பாடுகிறவர்கள்
கேளிர்=சுற்றத்தார்
சூதர்கள் = இனிய பாடல்கள் பாடுவோர்
துறவர் = (எல்லாவற்றையும் துறந்த) முனிவர்
வேதர்கள்=வேதங்களை யுணர்ந்த பிராமணர்
வேலை அடங்க=கடலின் ஓசை யடங்கும்படி
பேர் ஆரவாரம்=அதிக இரைச்சல்

சீதனம்=(விவாகத்திற்குப் பின்) பெற்ளேர்கள் தமது பெண்ணுக்குக் கொடுக்கும் பொருள்
மாந்தர்=மனிதர்
உரிய பருவத்தில்=தகுந்த காலத்தில்
சடங்குகள்=தொழில்கள்

19-ம் பக்கம்.

'போய்யாமை' என்னுஞ் செய்யுள்:—

பொய்யாமை பொய்யாமை= பொய் பேசாதிருத்தலே, பொய் பேசாதிருத்தலே
ஆற்றின்=(ஒருவன்) செய்தால்
பிற அறம்=வேறு தருமங்களை
செய்யாமை செய்யாமை நன்று =செய்யாதிருத்தல் செய்யாதிருத்தல் நல்லது; வாய்மையில் எல்லா வறங்களும் அடங்கியிருக்கின்றன வென்பது கருத்து
தலை நகரம்=முக்கிய பட்டணம்
நறுமணம்—நல்ல வாசனை
உல்லாசமாய்=சந்தோஷமாய்

20-ம் பக்கம்.

குழல் = (மூங்கிலால் செய்யப்பட்ட) ஊதுகருவி
பொழில்=சோலை
மகுடம்=கிரீடம்
யாழ்=வீணை
இசைத்தன=ஒலித்தன

21-ம் பக்கம்.

தலைமையாய்=முதன்மையாய்
வாய்மை=உண்மை
இம்மை=இப்பிறப்பு
மறுமை=மறுபிறப்பு
வீடுபேறு=மோட்சமாகிய செல்வம்
இணையானது=ஒப்பானது
விண்ணவர்=தேவர்கள்
உத்தமர்=மேலானவர்

'பொய்ம்மையும்' என்னுஞ் செய்யுள்:—

புரைதீர்ந்த = குற்றத்தினின்றும் நீங்கின
நன்மை பயக்கும் எனின்=நன்மை தருமானல்
பொய்ம்மையும் வாய்மை இடத்த=பொய்ச் சொற்களும் மெய்ச் சொற்களின் இடத்தனவாம்

22-ம் பக்கம்.

'தாயோக்கும்' என்னுஞ் செய்யுள்:—

புகன்று=சொல்லி
அன்னன்=அந்த அரிச்சந்திரன்
நலம் பயப்பின்=நன்மை செய்வதில்
செல்கதி உய்க்கும் நீரால்= மோட்சத்திற்குச் செலுத்தும் தன்மையாய்
சேய் ஒக்கும் = புதல்வனுக்குச் சமானமாவான்
நுணங்குகேள்வி = நுட்பமாகிய கேள்விப் பொருள்கள்
ஆய புகும் கால்=ஆராயத் தொடங்கினல்
அறிவு ஒக்கும்=அறிவுக்குச் சமமாவான்
இடையூறு=துன்பம்
குலிசப் படையாய் = வச்சிராயுதத்தையுடைய இந்திரனே
காதல்=(பிறர் மனைவியரை) விரும்புதல்

கவறு ஆடல்=சூதாடுதல்
கள் உண்டல்=கள் குடித்தல்
ஈதல் மறுத்தல் = பிறர்க்குக் கொடுத்தலைத் தடுத்தல்
நிரானவர்=ஒப்பானவர்
கடுகடுத்து=மிகவும் கோபித்து

23-ம் பக்கம்.

உறையுள் ஆய்=இருப்பிடமாய்
அற்றினிர்=பழித்திர்
கலை கடல்=நூல்களாகிய கடல்
பருகிய=குடித்த
'உள்ளங்கவர்ந்து' என்னுஞ் செய்யுள்:—
உள்ளம் கவர்ந்து = மனத்தைத் தன் வசமாக்கிக் கொண்டு
ஒங்குசினம் = மேலும் மேலும் வளரும் கோபம்

24-ம் பக்கம்.

சீற்றத்தை=கோபத்தை
திண்ணம்=நிச்சயம்
அகன்ற=நீங்கிய
மதியீனர்கள் = அறிவில்லாதவர்கள்

25-ம் பக்கம்.

தபோதனர்கள் = தவத்தைச் செல்வமாக வுடையவர்கள்
வேள்வி=யாகம்
விலங்குகள்=மிருகங்கள்

26-ம் பக்கம்.

மாக்கள்=பறவைகளும் விலங்குகளும்

27-ம் பக்கம்.

இளைஞர்=இளம்பருவ முடையவர்கள்
ஆடவர்=ஆண்மக்கள்
பெண்டிர்=பெண்மக்கள்
ஈடாக=பதிலாக

28-ம் பக்கம்.

பகுதி=பிரிவு
திட்டு=ஒன்று சேர்
பணிவாய்=அடக்கமாய்
பகர்ந்தான்=சொன்னான்
இசைந்தான் = ஒப்புக் கொண்டான்
படைகள்=ஆயுதங்கள்

30-ம் பக்கம்.

உணர்ந்து=அறிந்து
அம்பு எய்து=அம்பு தொடுத்து
குவியல்=கூட்டம்
உறுப்புக்கள்=அவயவங்கள்
எந்தையே = என் தந்தை போன்றவரே

31-ம் பக்கம்.

எவினிர்=தூண்டினீர்
அணுவளவும்=சிறிதளவும்; என்ளளவு, தினையளவு; கடுகளவு முதலியனவும் இப்பொருள் குறிப்பனவே
படைத்தார்=உண்டாக்கினார்

32-ம் பக்கம்.

வராகம்=பன்றி
படைவீரர்=சேனைவீரர்
மதவெறி=மதத்தினால் உண்டாகும் பைத்தியம்
அணுகிற்று=நெருங்கினது

33-ம் பக்கம்.

சிதைக்க=அழிக்க
வன்மை=பலம்
கணை=அம்பு
திருமகள்=இலக்குமி
கண் உறங்கினர்=தூங்கினர்

34-ம் பக்கம்.

உன்னி=நினைத்து
தீய கனு=கொடிய கனவு
உணர்த்தினன்=தெரிவித்தான்
திண்ணம்=நிச்சயம்
தளர=வருந்த
இயம்பினன்=சொன்னன்
நண்ணிய=நட்பமாகிய
திண்ணிய=அழியாத
'நீரிற்குமிழி' என்னுஞ் செய்யுள்:—
குமிழி=(நீரில் எழும்) மொக்குள்
திரைகள்=அலைகள்
யாக்கை=உடம்பு
பகர்ந்தாள்=சொன்னள்

35-ம் பக்கம்.

எய்த=(அம்பு) தொடுத்த
குன்றி=குறைந்து
அரிதாய்=கடினமாய்
செருக்கு=கர்வம்
வெப்பமாய்=சூடாய்
கண்டு=கற்கண்டு
கலைமகள்=சரஸ்வதி

36-ம் பக்கம்.

பயின்று=கற்று
மட்டு அற்ற=அளவில்லாத
வேல்விழியீர்=வேல் போன்ற கண்களையுடைய பெண்களே
அகம் மகிழ்ச்சி=மனக்களிப்பு
'காவியங் கண்ணும்' என்னுஞ் செய்யுள்:—
காவி=நீலோற்பல மலர்
கவர் இதழ் = பிளவையுடைய உதடுகள்
கோடா=வளையா
வாவி அம் கமலம்=தடாகத்தில் முளைக்கும் அழகிய தாமரை
அன்ன=போன்ற [மலர்கள்
வதனமும் நுதலும் = முகமும் புருவங்களும்
தூவி அம் தோகை=இறகையுடைய அழகிய மயில்
நல்லார்=பெண்கள்
ஓவியம்=சித்திரம்
மலர் தார்=மலர்களால் கட்டப்பட்ட மாலைகள்
இரவலர்=யாசகர்

37-ம் பக்கம்

பூங்குழலீர் = மலரை யணிந்த கூந்தலுடைய பெண்களே
திண்தோள்=வலியதோள்
அமைச்சன்=மந்திரி
கயல் விழியீர்=கண்டை மீன் போன்ற கண்களையுடைய பெண்களே
அடாது=தகாது
மாநில மன்னரே=பெரிய உலகத்தை யாளும் அரசரே
பெருந்தகையாளர் = உயர்வாகிய குணமுடையவர்
இரப்பவர்க்கு=யாசிப்பவர்க்கு
ஈயாத=(ஒன்றும்) கொடாத

38-ம் பக்கம்.

வெருட்ட=பயமுறுத்த
அடிகாள்=சுவாமிகளே
கூர்ந்து=மிகுந்து
'மாவினைத் துணி செய்தாய்' என்னுஞ் செய்யுள்:—
செயல்கள்=காரியங்கள்
மாவினை=மிருகங்களையும் பறவைகளையும் ; மா+இன்+ஐ

துணி செய்தாய்=வெட்டினாய்
கேழல்=பன்றி
வான் அளாவும் காவினை=ஆகாயத்தைத் தழுவும் சோலைகளை
கா=சோலை
பாவினை=பாடல்களை
ஆவின் நல் தோல் = பசுவின் சிறந்த தோல்
பொதிந்து=போர்த்து
அடு புலி=கொல்லும் புலி

39-ம் பக்கம்.

முனிதல்=கோபித்தல்
மாதர்கள்=பெண்கள்
தீங்கு=கெடுதி
அறிவு இலிகள் = அறிவில்லாதவர்கள்; மூடர்கள்

40-ம் பக்கம்.

வியக்க=புகழ
புனிதன்=பரிசுத்தன்
மங்கையர்=பெண்கள்
வற்புறுத்தினார் = கட்டாயப் படுத்தினார்
உடன்படேன் = சம்மதிக்கமாட்டேன்

41-ம் பக்கம்.

கலைக்கடல்=நூல்களாகிய கடல்
கடந்த = தாண்டிய; முற்றும் உணர்ந்த என்பது
மணி முடி = ரத்தினங்களைப் பதித்த கிரீடம்
மனம் உவந்து=மனங்களித்து

42-ம் பக்கம்.

பகர்ந்தார்=சொன்னார்
மறை முதல்வர் = வேதங்களுக்குத் தலைவர்
வேள்வி=யாகம்
காவலன்=அரசன்

43-ம் பக்கம்.

வழங்கியபோது = கொடுத்த போது
'ஊரு நாடு நீள் மலைகளும்' என்னுஞ் செய்யுள்:—
நீள் மலைகள்=பெரிய மலைகள்
கானம்=காடு
உழன்று=வருந்தித் திரிந்து
அவதி=கால அளவு
சோரம்=கபடம்
கொதித்து=கோபித்து

44-ம் பக்கம்.

முறை=நீதி
ஐயம் உறுகிறேன் = சந்தேக மடைகிறேன்
எற்றுக்கொள்ள= அங்கீகரித்துக் கொள்ள

45-ம் பக்கம்.

பார்த்திபன்=அரசன்
கூர்ந்து=மிகுந்து
அசுரர்=ராக்ஷசர்

46-ம் பக்கம்.

மந்திரத்தலைவர் =மந்திரிமார்கள்
'பட்ட மரம்' என்னுஞ் செய்யுள்:—
சுழிபாறை = சூழ்ந்த பாறைக் கற்கள், சுழி—கோடு எனினுமாம்
கட்டரவு=கட்டுவிரியன்
'நடந்தவடி' என்னுஞ் செய்யுள்.—
உன்புறம்=உள் பக்கம்
நலிந்திடும்=(கடித்து) வருத்தும்
எறும்பர் = எறும்புகள் ; இது எறும்பு என்பதன் போலி

அடர்ந்து=நெருங்கி
பூரம்=பூரான்
சினம் தழல் = கோபமாகிய நெருப்பு

47-ம் பக்கம்.

தீயவர் உள்ளம் = கொடியவர் மனம்
பணிவாய்=வணக்கமாய்
சீற்றம்=கோபம்

48-ம் பக்கம்.

சினம் தணிந்து = கோபம் அடங்கி
பருகி=குடித்து
அயர்ந்து=சோர்ந்து
முகில்கணம் = மேகங்களின் கூட்டம்

49-ம் பக்கம்.

அறிவிலி=புத்தியில்லாதவன்
'ஆடையின்றி' என்னுஞ் செய்யுள்:—
ஆடை=துணி
வாடை=காற்று
மெய்=உடம்பு
கையது—மெய்யது—காலது—மேலது — இவற்றிலுள்ள அ — து இரண்டும் சாரியைகள்
பேழை=பெட்டி
உயிர்க்கும்=பெருமூச்சு விடும்

50-ம் பக்கம்.

குழிந்து ஆழ்ந்து = மிகவும் ஆழ்ந்து
'ஐயனருந்தசை' என்னுஞ் செய்யுள்:—
தணியாமை=அடங்காமை
ஐயன்=அரிச்சந்திரன்
அருந்தசை=இனிய மாமிசம்
அயில்வேன்=தின்பேன்
செய்யன் = செம்மையாகிய குணத்தையுடைய சத்திய கீர்த்தி! சுக்கிரனெனினுமாம்
தையல்=சந்திரமதி
தம்மின்=கொடுங்கள்
பையல் = சிறுவனாகிய லோகிதாசன்

51-ம் பக்கம்.

வெருட்டின=பயமுறுத்தின
வாளா=சும்மா
மதி அற்ற=அறிவில்லாத
இடுக்கண்=துன்பம்

52-ம் பக்கம்.

தோகை=மயிலின் நீண்டவால்
அருந்தின=தின்றன

53-ம் பக்கம்.

வயிறு ஆர=வயிறு நிரம்ப
அடர்த்தி=நெருக்கம்

54-ம் பக்கம்.

சூழ்ச்சியால்=தந்திரத்தால்
வெருண்டு=பயந்து
இளக=உருக

55-ம் பக்கம்.

நாடி=விரும்பி

56-ம் பக்கம்.

தாவி=பாய்ந்து
மண்டு எரி = மிகுதியாகிய நெருப்பு
வாய் மடுப்பினும் = சூழ்ந்து கொண்டாலும்
மாசுணம்=மலைப்பாம்புகள்
கண் துயில்வ=தூங்கும்
பேரா=(தமது இடத்தைவிட்டு) அசையா

கடுமையாய்=வேகமாய்
துவண்டு=வாடி

57-ம் பக்கம்.

சூழ்ந்துகொண்டது = சுற்றிக் கொண்டது
அந்தணர் = அழகிய அருளை யுடையவர்; பிராமணர்; அம்+தண்+அர்
குலமகள் = உயர்ந்த குலத்தில் பிறந்த பெண்
கொழுநன்=கணவன்
பேணுதல்=காப்பாற்றுதல்

58-ம் பக்கம்.

நல் ஒழுக்கம்=நல்ல நடக்கை
வாய்ந்தவர்=பொருந்தியவர்

59-ம் பக்கம்.

கொடு மொழி=கொடுஞ் சொல்
தடந்தோள்=பெரியதோள்
'பொய்யாமையன்ன' என்னுஞ் செய்யுள்:—
பொய்யாமை அன்ன = பொய் பேசாதிருத்தலைப் போன்ற
எய்யாமை=வருந்தாமல்
அறம்=தருமம்

60-ம் பக்கம்.

மாந்தர்=மனிதர்

61-ம் பக்கம்.

புதல்வன்=மகன்

62-ம் பக்கம்.

மதி வல்லோய்=அறிவிற் சிறந்த வனே

63-ம் பக்கம்.

அகன்று=அகலமாய்
திரண்டு=உருண்டு
புலால்=மாம்சம்

64-ம் பக்கம்.

மறுமொழி=பதில்
குவியல்=கும்பல்; கூட்டம்

65-ம் பக்கம்.

உரியவர்=சொந்தக்காரர்
தூய்மை=பரிசுத்தம்

66-ம் பக்கம்.

நாள்தோறும் = ஒவ்வொரு நாளும்
பழிப்பார்=நிந்திப்பார்
தர்ப்பை=ஒருவகைப் புல்

67-ம் பக்கம்.

வியந்தனர்=அதிசயித்தனர்
உற்று நோக்கினல் = நிதானித் துப் பார்த்தால்
'ஒரு நாயகமாய்' என்னுஞ் செய்யுள்:—
ஒரு நாயகம் ஆய்=ஒப்பற்ற தலை மையுடையவராய்
ஓட=(தமது செங்கோல்) செல்ல
உலகு உடன் ஆண்டவர் = எல்லா வுலகங்களையும் தமக்கு உரிமையாகக் கொண்டு அரசாட்சி புரிந்த சக்கரவர்த்திகள்
கரு நாய் = பெரிய நாய்களால்
கவர்ந்த காலர் = கடி யுண்ட காலை யுடையவராகியும்
சிதைகிய பானையர் = உடைந்த பாத்திரமுடையவராகியும்
பெரு நாடு காண=(தாம் அரசாட்சி புரிந்த) பெரிய நாட்டி லுள்ள குடிமக்கள் காணும்படி
இம்மையிலே = இப்பிறப்பி லேயே (சிறந்த அரசாட்சிச் செல்வமும் விரைவில் அழி வுறுமென்பதாம்)

பொய்யா மொழியார் = உண்மையாகிய சொற்களை யுடையவர்; இங்கே நம்மாழ்வார்.

58-ம் பக்கம்.

சுவாசம்=மூச்சு
ஆண்டு ஆண்டு தோறும்=பல வருஷங்களளவும்
மாண்டார்=இறந்தவர்

69-ம் பக்கம்.

உகிர் சுற்று = நகத்தைச் சுற்றிக் கிளம்பும் ஒரு வகைப் புண்.
கொடுமொழி = கொடுஞ் சொற்கள்

70-ம் பக்கம்,

'பாவியேன் மகனே' என்னுஞ் செய்யுள்:—

பதைப்பள்=மனம் துடிப்பாள்
தயங்கி=சோர்ந்து
காவி அம் கண் = நீலோற்பல மலர் போன்ற அழகிய கண்கள்
பதறி=துடித்து
ஆவி=உயிர்
அலமரும்=வருந்தும்
கட்டளை=உத்தரவு

71-ம் பக்கம்.

மகன் = இளம்பருவ முடையவள்; இதில் மக—பகுதி
கூர்ந்து=மிகுந்து

72-ம் பக்கம்.

பணிவாய்=அடக்கமாய்
இளகியது=உருகியது
ஆரவம்=ஒலி

73-ம் பக்கம்.

'பனியால் நனைந்து' என்னுஞ் செய்யுள்:—

கடுகி=விரைவாய்
உலவா(து)=இறவாமல்
வெம்கண் அறவு = கொடிய கண்களையுடைய பாம்பு
விடநோய் செறிந்து = விஷமாகிய வியாதி தொடர்ந்து
இறையோன் = தலைவனாகிய அரிச்சந்திரன்
அவம்=வீண்

'நிறையோசை' என்னுஞ் செய்யுள்:—

நிறை ஓசை=நிறைந்த ஒலி
அற்று=நீங்கி
நிரையாய்=வரிசையாய்
சிறை ஓசை=சிறகுகளின் ஒலி
உற்ற=பொருந்திய
செடி ஊடு = செடிகளின் நடுவில்
விதியார்=பிரமதேவர்
மறையோன் = வேதங்களை யுணர்ந்த விசுவாமித்திர முனிவன்
இரக்க = (தனக்குக் கொடுக்கும்படி) வேண்ட
வழுவாது=தவறாமல்
வடிவேல் = கூர்மையாகிய வேல்
இறையோன் = அரிச்சந்திர மன்னவன்
அளித்த=பெற்ற
சூழ்ச்சியால்=வஞ்சனையால்

74-ம் பக்கம்.

தாழ்க்கல்=தாமதித்தல்

'பிணங்கள் சுடும்' என்னுஞ்
செய்யுள்:—
சுடும் புலையர் = கொடிய பறை
யர்கள்
அரவம்=ஒலி
பேர் அமலை = பெரிய ஓசை
நிணம்=கொழுப்பு
முடை=தி நாற்றம்
செடுங்கனலின் கொழுந்து =
நீண்ட நெருப்புச் சுவாலை
நிவப்பு=உயர்வு
கணங்கள் = பேய்க் கூட்டங்கள்
குழனி=ஒலி
கனல்பொறி=நெருப்புப்பொறி
மலிவு=நிறைவு
சுணங்கு=நாய்கள்
பிணங்கல்=(ஒன்றோடொன்று)
சண்டையிடல்

75.ம் பக்கம்.

ஆரும் அற்ற=ஒருவருமில்லாத
மூடி = அறிவில்லாதவனே;
அண்மை விளி
பறிக்க=அறுக்க
நச்சு அரவு=விஷத்தையுடைய
பாம்பு
துறந்தான்=நீங்கினன்
அடி அற்ற=வேர் அறுந்த

76-ம் பக்கம்.

நள் இருள்=நடு இருள்; நிறைந்த
இருளெனினுமாம்
இந்திர ஜாலம்=ஒருவகை மாய
வித்தை
கீழ் மகள்=இழிவாகிய பெண்
'அலைவிலா அரிச்சந்திரன்'
என்னுஞ் செய்யுள்:—
அலைவு=வருத்தம்
தொலைவு=துன்பம்
மங்கலம்=தாலி
புலையன்=பறையன்
காணவும் போதுவதோ=பார்க்க
வும் தகுவதோ
உலை=கொல்லன் உலைக்களம்

77-ம் பக்கம்.

'அற்புக்காழியன்' என்னுஞ்
செய்யுள்:—
அற்பு=அன்பு
ஆழியன்=கடல்போன்றவன்
பொற்பு=அழகு
பொறை=பொறுமை
நிறை=உயர்வு
கொழுநன்=கணவன்

78-ம் பக்கம்.

மைவிழி மாதே = மை பூசிய
கண்களையுடைய பெண்ணே
'வினைப் பயன்' என்னுஞ்
செய்யுள்:—
வினைப்பயன் = முற் பிறப்பில்
செய்த தீவினைப்பயன்
எனைத்து ஆய = எப்படிப்பட்ட
நூல் அகத்தும்=நூல்களிலும்
தீவினை=பாவம்
இறைவன்=கடவுள்
யாக்கை=உடம்பு

79-ம் பக்கம்.

இளைஞன்=சிறுவன்
சீர் குலைய=மேன்மை யழிய
உள்ளம்=மனம்
குழம்புகிறது=வருந்துகிறது

80-ம் பக்கம்.

தீண்டினது=கடித்தது
களவாடினவன்=திருடினவன்

இறுகப் பிணித்தனர்=அழுந்தக் கட்டினர்
தாக்கினர்=அடித்தார்
வெகுண்டு=கோபித்து
சவம்=பிணம்

81-ம் பக்கம்.

அமிழ்ந்தான்=முழுகினன்
மன்னவர் ஏறே = பகையரசர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கம் போன்றவரே
ஏவினேன் = கட்டளையிட்டு அனுப்பினேன்
பொன் போல்வாய் =இலக்குமி தேவியைப் போன்றவளே

82-ம் பக்கம்.

சான்று ஆம்=சாட்சியாம்
பார்த்திபன்=அரசன்
குறிகள்=அடையாளங்கள்

83-ம் பக்கம்.

அறம்நெறி மன்ன = தரும வழியில் நடக்கும் அரசனே
சித்திர விழியார்=அழகிய கண்களையுடைய பெண்கள்
இயல்பை=குணங்களை
மன்றம்=சபை

84-ம் பக்கம்.

காவலர்கள் = (ஊரை) காப்பவர்கள்
பெண்மணி = பெண்களில் ரத்தினம் போன்றவள்; பெண்களில் உயர்ந்தவ ளென்பது
வதைக்க=கொல்ல

85-ம் பக்கம்.

கொலைக்களம்=(குற்றவாளிகளை) கொல்லுமிடம்
இருகாறும் = இருவரையிலும்
மன் உயிர் ஆக்கைகள் = நிலை பெற்ற உயிரையுடைய உடம்புகள்
மின்னின்=மின்னலைப்போல்
நிலையில=நிலை யில்லாதனவாம். ஆகாயத்தில் தோன்றும் மின்னல் மிக்க விரைவில் அழிதல் போல் உயிரோடு கூடிய உடல்களும் உடனே அழியும்; சரீரம் நிலையற்ற தென்பது
பேர் இன்ப வீடு=மோட்சம்

86-ம் பக்கம்.

'பதி யிழந்தனம்' என்னுஞ் செய்யுள்:—
பதி=நாடு நகரங்கள்
பாலன்=சிறுவன்; தேவதாசன்
நிதி=செல்வம்
கதி=மோட்சம்
கட்டுரை=உண்மை
திரள் திரள் ஆய்=கூட்டம் கூட்டமாய்

87-ம் பக்கம்.

ஆய்ந்து ஓய்ந்து = நிதானமாய்ப் பரிசோதித்து
அமரர்கள்=தேவர்கள்
அனைத்தும்=எல்லாம்

88-ம் பக்கம்.

திரண்டு=கூடி
குறுகியது=நெருங்கியது
தெரிவையர்=பெண்கள்
தளர்தல்=வருந்துதல்
'சாதலும் பிறத்தல் தானும்' என்னுஞ் செய்யுள்:—
தம் வினை பயத்தின் ஆகும்= அவரவர் (முற் பிறப்பில் செய்த) நல்வினை தீவினைகளின் பலனால் உண்டாகும்

ஆதலும் = மேன்மை யடைதலும்
அழிதலும் = கேட்டை யடைதலும்
நோதலும் = (துன்பம் வரும்போது) வருந்தலும்
பரிவும்=(இன்பம் வரும்போது) மகிழ்தலும்
நுண் உணர்வு இன்மை=நுட்பமாகிய அறிவு இல்லாமையே
அணிகலம்=ஆபரணம்

89-ம் பக்கம்.

கொண்டாடினர்=புகழ்ந்தார்

91-ம் பக்கம்.

கவர்ந்து=அபகரித்து
மகவை=குழந்தையை
வழுவினர்=தவறினவர்

92-ம் பக்கம்.

'வேதியர்க் காளாய்' என்னுஞ் செய்யுள்:—
மின்=மின்னல் போன்ற சந்திரமதி; உவமையாகு பெயர்
மைந்தன் = மகனுகிய தேவதாசன்
சவம்=பிணம்
சோதி=ஒளி
மணி தவிசு = ரத்தினங்களைப் பதித்த பீடம்
சுடர் முடி=ஒளி வீசும் மகுடம்
கவித்து=அணிந்து
கனல் கடவுள்=அக்கினிதேவன்
காலக்கடவுள்=யமன்

93-ம் பக்கம்.

மங்கி=ஒளி குன்றி
அருந்ததி = வசிஷ்ட முனிவர் மனைவி; இவள் கற்பிற் சிறந்தவள்

94-ம் பக்கம்.

மா நிலம் மன்னர்=பெரிய உலகத்தை யாளும் அரசர்
எய்தால்=(அம்பு) தொடுத்தால்
இடுக்கண்=துன்பம்
நால்வகைச் சேனை = தேர்ப் படை, குதிரைப் படை, யானைப்படை, காலாட்படை

95-ம் பக்கம்.

புழுதி=மண்பொடி
'கார் டேற்ற தோகையோ' என்னுஞ் செய்யுள்:—
கார்=மேகம்
தோகை=மயில்
வான் முகம்=ஒளி பொருந்திய [நெற்றி
புலம்=வயல்
இயலாது=முடியாது

96-ம் பக்கம்.

அறுசுவை யாவன:—உவர்ப்பு, புளிப்பு, இனிப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு
விலா புடைக்க = பக்கங்கள் பெருக்க
எய்தினன்=அடைந்தான்

"ஆனந்தபோதினி" பிரஸ், மதராஸ்.